1924. SINGLE COPY A…

# சிந்தாமணி

ஓர் உயர்தர மாதத்தமிழ்ப்பத்திரிகை.

பத்திராதிபர்

## ஸகோதரி. வி. பாலம்மாள்.

மார்கழி.

DECEMBER.

பொருளடக்கம்.


பெண்களும் சொத்துரிமையும்.
(பத்திராதிபர்).

பார்வத குமாரி.
(ஸ்ரீ மகேச குமார சர்மா).

விவேகாநந்தரின் வீரவாழ்வு
(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்).

புத்தர் சோதனை.
(மாதுஸ்ரீ வி. ராஜம்மாள்).

இன்னம் பல சிறந்த வியாசங்கள்.


…MANI
…AMIL MO…

CHINTHA… …TOR
A HIGH-CLASS TA… BAL…
EDI…
…ER. V…


OFFICE OF THE RE… 5-F… MA…

7L
Y15m2,N24
N24.1.5
190…


…चन्द्र परब्रह्मणे नमः

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| சுபோத ராமசரிதம் அர்த்தத்துடன் | 107 |
| பெண்களும் சொத்துரிமையும் (பத்திராதிபர்) | 171 |
| இந்தியநாகரிகம் (நவசக்தி) | 173 |
| புருஷோத்தமன் அல்லது புன்சிரிப்பு (சகோதரி வி. பாலம்மாள்) | 177 |
| மேனாடுகளில் சிசு சம்ரக்ஷணை (எஸ். ஆர். வேங்கடரமணையர், B A) | 183 |
| சாரதாவின் சிரும். (ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்) | 185 |
| கவிகை (ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம்பிள்ளை) | 188 |
| வத குமாரி (ஸ்ரீமான் மகேசகுமார சர்மா) | 191 |
| ஸ்ரீமதி ரமாபாய் ரானடே | 194 |
| குடியிருப்புவீடும் சுகாதாரமும் (சகோதரி வி. பாலம்மாள்) | 197 |

| | பக்க |
|---|---|
| பக்தர் சோதனை அல்லது பொறுமையின்பெருமை (மாதுஸ்ரீ ராஜம்மாள்) | |
| விவேகானந்தரின் வீரவாழ்வு (சுத்தானந்த பாரதியார்) | |
| வறுமையிற்செம்மை (ஜீ. எஸ் ராஜநாயகம்) | |
| நாட்டினம் சுற்றவேண்டாம் (தேசமெய்த் தொண்டன்) | |
| ஸ்திரீகளும் தேச சேவையும் (ஸ்ரீமான் C. N. அனந்த சுப்பன்) | |
| சிந்தாமணி யபிமானிகளுக்கு (சகோதரி வி. பாலம்மாள்) | |
| கடவுள் வழிபாடு (ஸ்ரீமதி வேதநாயகியம்மாள்) | |
| காஷ்மீர தேசக்குறிப்பு (அற்புதானந்தசுவாமிகள்) | |
| சமாச்சாரக்குறிப்பு | |


## பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதியனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

3. ஒரு ... பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படி

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள், இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி, "வேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. ...திரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

...மதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றி க...
... திருப்ப ...
...தல் முக்கியம். ...மாய் பாடல்கள் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தை ...ங்களில் விசேஷமாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ... ...காகவும் தொடர்... செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

... விஷயதான... சிந்தாமணி மாதிரி காபி பெற்றுக் கொண்ட... முன்பணம் ... எட்டணாவை ... சந்தாவில் கண... மாதிரி காபி ...

...ங்கள், ...

...விஷய... ...துகவும்.

...த்திரி... மானேஜர்,
...ந்தாமணி ஆபீஸ்,
...ன் ரோட், மயிலாப்பூர்
சலிவன்ஸ் கார்ட...

# CHINTHAMANI.

**A HIGH CLASS TAMIL MONTHLY.**

*(Devoted mainly to the cause of Indian Women.)*


OF THE REGISTRAR OF ... No. ... 5 FEB 1925



EDITED BY SISTER V. BALAMMAL.

...I.] December 1924. [No. 5.


श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

# சிந்தாமணி.

சுபோத ராம சரிதம்.


COMPOSED AND ANNOTATED BY

SISTER V. BALAMMAL

DAUGHTER OF

*Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.*



*(All Rights reserved by the Authoress.)*


## सुबोधराम चरिते

### बालकाण्डः

राज्ञः पङ्क्तिरथस्याद्य पुत्रार्थं कुर्वतः क्रतुम् ।
सुतो भूत्वा चतुर्धाऽहं हनिष्यामि भवद्विषम् ॥ १५ ॥

अद्य இப்பொழுது **पुत्रार्थं** பிள்ளையின் பொருட்டு **क्रतुं** யாகத்தை **कुर्वतः** செய்கி[illegible] **पङ्क्तिरथस्य** தசரதருக்கு **अहं** நான் **चतुर्धा** நான்கு ரூபமுற்ற **सुतः** பிள்ளையாக **भूत्वा** உண்[illegible] **भवद्विषं** உங்கள் சத்துருவை **हनिष्यामि** கொல்லுகிறேன்.

अथ सर्वे सुरास्तावदाज्ञया परमेष्ठिनः ।
स्वांशैरुत्पादयामासुर्वालिमुख्यान्बहून्कपीन् ॥ १६ ॥

अथ பிற்பாடு **सर्वे** ஸகலமான **सुरास्तावत्** தேவர்களோ வென்றால் **परमेष्ठिनः** பி[illegible] தேவரின் **आज्ञया** உத்திரவினாலே **वालिमुख्यान्** வாலியை முதன்மையாகப் பெற்ற **बहून्** அ[illegible] **कपीन्** வானரர்களை **स्वांशैः** தங்கள் அம்சங்களினின்றும் **उत्पादयामासुः** உண்டாக்கினார்கள்.

ततस्सुग्रीवमुख्यास्ते कृत्वा वालिनमीश्वरम् ।
साकं जाम्बवता स्वेच्छं किष्किन्धानगरेऽवसन् ॥ १७ ॥

**ततः** அதன் பிறகு **सुग्रीवमुख्याः** சுக்ரீவன் முதலிய **ते** அந்த வானரர்கள் **वा**[illegible] வாலியை **ईश्वरं** அதிபதியாக **कृत्वा** செய்து **जाम्बवता** ஜாம்பவானுடன் **साकं** கூட **किष्किन्**[illegible] கிஷ்கிந்தை நகரத்தில் **स्वेच्छं** சுதந்திரர்களாக **अवसन्** வசித்தார்கள்.

राजा दशरथः कृत्वा हयमेधं महाक्रतुम् ।
ऋष्यशृङ्गं पुरोधाय पुत्रीयेष्टिमथाकरोत् ॥ १८ ॥

**राजा** அரசனாகிய **दशरथः** தசரதர் **महाक्रतुं** உயர்ந்த யாகமாகிய **हयमेध**[illegible] மேதத்தை **कृत्वा** செய்து **अथ** பிறகு **ऋष्यशृङ्गं** ருஷ்யச்ருங்க முனிவரை **पुरोधाय** [illegible] **पुत्रीयेष्टिं** புத்திரகாம இஷ்டியை **अकरोत्** செய்தார்.

(To be continued.)

ஸ்ரீ[illegible].
மயிலாப்பூர்

---

ஸ்ரீராம ஜயம்.

# சிந்தாமணி


தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

பத்திராதிபர் — ஸகோதரி வி. பாலம்மாள்.

மலர் I.] ரக்தாக்ஷி—மார்கழி [இதழ் 5.


## பெண்களும் சொத்துரிமையும்.

(பத்திராதிபர்).

[illegible]யதர்ம சாஸ்திரத்தை அனுஸரித்து [illegible]ருக்கும் ஹிந்துலாவில் பெண்பிறந்தால் [illegible]தை வீட்டுச் சொத்துக்களில் பாகமில்லை [illegible]படதாக இருக்கிறது. ஆண் வாரசு அற்ற [illegible]தை இறந்து அக்குடும்பம் அவிபக்த (பிரி[illegible]யாகாத) குடும்பமாயிருக்கும் பக்ஷத்தி[illegible] பெண் வாரசுகளுக்குச் சொத்துச் சேரா[illegible]மூலையில் கிடக்கும் தாயாதிக்காரர் அடை[illegible]தும் ஹிந்துலா இடமளிக்கிறது. இச்[illegible]த்திற்கு ஆதாரமாயிருக்கும் மனுதர்ம[illegible]த்தைச் சொல்லுங்கால் அக்காலம் [illegible]மிருந்ததென்பதை அறிந்து கொள் [illegible]க்கியமாகிறது. ஒரு பெண் பிறந்தால் [illegible]றவைத் தேடி கன்னிகாதானம் செய்து [illegible] கவேண்டுமென்றும், பணத்திற்காகக் கன்னிகையை விக்கிரயம் செய்யக் கூடாதென்றும், வீட்டில் பிறந்த பெண் கணவன் வீட்டில் துன்புற்றாலும் கண்ணீர்விட நேர்ந்தாலும் அப்பாபம் தாய் தந்தையரைச் சாருமென்றும் கட்டுப்பாட்டுடன் அக்கால மிருந்தபடியால் அதை ஆதாரமாகக் கொண்டு பெண்கள் புருஷன் வீட்டில் பாத்திய முள்ளவர்களாதலால் பிறந்த வீட்டில் பாகத்திற்குரியவரல்லர் என்றும் நிர்மானிக்கப்பட்டிருக்கலாம். அத்துடன் கன்னிகையை நல்லவனுக்குத் தானஞ் செய்கையில் கோதானம், பூதானம், சுவர்ண தானம் இவைகளுடனும் ஆபரணங்களுடனும் இருக்கவேண்டு மென்பது முக்கியம். வறுமைத் தனமுற்ற இக்காலத்தில் கன்னிகையை மட்டும் தானம் செய்பவர்களும்

190369



(कन्यां कनकसंपन्नां) ஆபரணங்களுடன் கூடிய பெண்ணைத் தருகிறேன் என்று மந்திரத்தையாவது சொல்லவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

ஆனால் அக்காலத்தில் ஆண்வார்சு அற்ற குடும்பத்தில் என்ன செய்தார்களென்று நாம் கேட்கலாம். பரிசுத்தமயமாக விருந்த அக்காலத்தில் ஆண்சந்ததியற்ற குடும்பமு மிருந்திராது. ஒருகால் தப்பித்தவறி ஒன்றிரண்டு அவ்வித மிருந்துவிட்டாலும் அக்காலத்திய தாயாதிகள் இரைதேடி வட்டமிடும் வாயஸங்கள் போல் எவன் சாகப்போகிறான், எவனுக்குப் பிள்ளையில்லாமல் பெண்மட்டு மிருக்கப்போகிறது, அவன் மனைவியையும் பெண்ணையும் ஒதுக்கி விட்டு நாம் அச்சொத்தையனுபவித்து ஆனந்திக்கலாம் என்பதாக எண்ணியும், அவர்கள் அவ்விதம் நடந்து கொள்ள இடையூறு நேருங்கால் நியாயஸ்தலம் சென்று வழக்காடியு மிருந்திருப்பார்களானால் மனுநீதி இதற்குத்தக்க பரிகார மேற்படுத்தி ஒளரஸமாகப் பெண்கள் இருந்தால் தாயாதிகள் அனுகக் கூடாதென்று கூறியிருக்குமல்லவா?

தவிர, அக்காலத்தில் தகப்பன் உயிருடனிருக்கும்பொழுதே பிள்ளைகள் பாகம் செய்து கொள்ளும் வழக்கமும் விசேஷமா யில்லாதிருந்தது. வீட்டில் பிறந்த பெண்கள் தக்க ஸ்ரீதனங்களுடன் புருஷன் வீட்டிற்கனுப்பப் பட்டதுடன் அடிக்கடி பிறந்த வீட்டிலிருந்து வரிசைகளைப் பெறுவதற்கும் இடம் பெற்றிருந்தார்கள். பெண்கள் அதிக வயது சென்றபின்பும் தங்கள் குழந்தை குட்டிகளுடன் பிறந்தகத்தில் மாதக் கணக்காக வசித்துச் சகோதரர்களால் பிரியத்துடன் உபசரிக்கப்பட்டும் வந்தார்கள். பிறந்தகம் வந்தபெண் சந்தோஷத்துடன் புருஷன் வீட்டிற்கனுப்பப்படாமல் விசனத்துடன் அவள் சென்றால் பிறந்த வீடு விருத்தி யடையாதென்ற பயம் சகோதரர்களுக்கிருந்தமையால் பெண்களுக்குப் பிறந்த வீட்டில் பாகம் வேண்டுமென்ற அவசியம் சட்ட மூலமாக ஏற்படாமலிருந்திருக்குமன்றிப் பெண்கள் மீது பாரபக்ஷமாக ஹிந்துலா ஏற்படுத்தப்பட நியாயமில்லை. ஆனால் தற்கால ஸ்திதியை ஆலோசிக்குங்கால் பெண்களுக்குப் பிறந்த வீட்டுச் சொத்துரிமையில் சில திருத்தங்கள் ஏற்படல் அவசியமா விருக்கிறது. ஏழை ஹிந்துப் பெண்மக்களின் சொத்துரிமைபற்றி ஆடவர்கள் சிரத்தையெடுக்க வேண்டியது அவசியமாய் விட்டபடியால் சில வருஷங்களுக்கு முன் ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் இந்தியா சட்டசபையில் ஒரு தீர்மானங் கொண்டு தார். பிறந்த வீட்டில் பெண்களுக்கும் பாக கிடைக்கவேண்டு மென்பதே அத்தீர்மா தின் நோக்கமாயிருந்தது. பெண்களின் சொ துரிமை விஷயத்தில் ஹிந்துலாவைத் திருத் வேண்டுமென்ற அபிப்பிராய முள்ளவர் பலருக்கு இத்தீர்மானம் திருப்திய கூடியதாயிருக்கவில்லை. ஏனெனில் த பெண் பெற்றவர்களுக்கு அப்பெண்ணை கஞ் செய்து கொடுப்பதில் ஏற்படும் பெ பணச் செலவு போதாமல் பெண்கள் பிறந்த வீட்டில் பாகமும் அவசியமா கேள்வியு முண்டாயிற்று. பெண்கள் மீது சொத்துக்களுக்கு இப்பொழுதே பலவித காரங்கள் ஏற்படும்போது பிறந்த வீட் பாகம் பெற்ற பெண் ஒருகால் சந்ததி விட்டால் அச்சொத்தை தாயாதிகள் வதா, அல்லது பிறந்த வீட்டார் அடை என்ற விவகாரங்கள் வலுத்துவிடக் கூ லும் சிலர் நினைத்தார்கள். பிரியமுட மும் கொண்டு மேன்மையாய் நட பெண்மக்களுக்குப் பிறந்த வீட் வேண்டிய தேதற்கென்றே பலர் கள். முடிவில் அத்தீர்மானமு



கைவிடப்பட்டுவிட்டது. இத்துடன் தங்கள் கடமையை முடித்து விட்டதாக ஆடவர்களும் ஜனப் பிரதிநிதிகளும் திருப்தியடைந்து விட்டார்கள் போலும். அதன் பிறகு பெண்கள் சொத்துரிமை பற்றிய யாதொரு வித பிரஸ்தாபமும் சட்டசபையிலும் வெளியிலும் ஏற்படக்காணோம்.

பெண்களின் சொத்துரிமை இருவகைப்பட்டதாகும். ஒன்று பிறந்த வீட்டில்; மற் று கணவன் வீட்டில். ஆக இவ்விரு வலும் ஹிந்துலா திருத்தப்பட வேண்டிய யாயமாகவும் தேவையுள்ளதாகவுமிருக் கி ஆண் சந்ததியுள்ள குடும்பங்களில் களுக்கு விசுவாசத்தாலும் சகோதரரின் னாலும் கிடைக்கக்கூடிய ஆதரவும் உப களும் போதுமானதன்றிச் சொத்தில் மும் தேவையில்லை என்பதே நமது அபிப்பிராயம். எவ்வளவு ஏழையாயிருந்த போதிலும் கஷ்ட நிலையிலுள்ள பெண்ணை ஆதரி யாத ஹிந்து குடும்பமோ உடன் பிறந்த சகோதரர்களோ இன்றுவரை தென்படக் காணோம்.

ஒரு பெண் இளம்வயதில் விதவையாய் ட்டபோதிலும் சற்று அரைகுறை பிரியத் னோ அல்லது கட்டுப்பாட்டிற் கஞ்சியோ ந்த வீட்டார் அவளை ஆதரித்து விடுவதி லேயே ஹிந்து பெண்கள் ஜீவனோபாயத்திற்காகக் கல்வி கற்கக் கூடியவர்களாயில்லாமலிருக்கிறார்கள். கணவனுள்ள பெண்ணுக்குக் கணவனுடைய ஆதரவிருப்பதால் அவளும் ஜீவனோபாயக் கல்வியை கற்பதில்லை. இதனாலேதான் பெண்மக்கட்குரிய படிப்பு என்பதை நிலைநிறுத்த வேண்டுமென்றும், தற்காலப் பெண் கல்வி பெண் சமூகத்திற்கே பொதுப்படையாய் உபயோகப் படக்கூடியதன்றென்று விவகரிக்கவும் தக்க ஆதார மேற்பட்டிருக்கிறதைப் படித்தவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டியதாக விருக்கிறது.

தீர யோசித்துத் தீர்மானிக்குங்கால் ஆண்வார்சு இல்லாத பிறந்த வீட்டிலும் இறந்த கணவனது அவிபக்த குடும்பத்திலும் பெண்களுக்குத் தக்க பாத்திய மேற்படுத்துதல் அவசியமாகும். இவ்விருவகைப்பட்ட உரிமைகளிலும் ஹிந்துலா இடமளியாமலிருப்பதால் ஏற்படும் சச்சரவும் கோர்ட்டு விவகாரங்களும் பெண்கள் அடையும் கஷ்டமும் அளவிடக் கூடியனவாயில்லை. மேற் கண்ட இருவகைப் பாத்தியத்திலும் பெண்களுக்குப் பெருத்த நஷ்டம் விளைவிக்கக் கூடியதாக ஹிந்துலா இனியும் இவ்விதமே இருந்து வருமாயின் இவைகளில் வாதிப்பிரதிவாதியாக ஏற்படும் பெண்மக்கள் கோர்ட்டு விவகாரங்களினால் எவ்வளவு தூரம் பாதிக்கப் படுகிறார்களென்பது அறிஞர்கள் ஆராய்ச்சி செய்யவேண்டிய விஷயமாகும்.

(தொடரும்.)

# இந்திய நாகரிகம்.

ஆ ழில் அபிவிருத்தி உணர்ச்சியும் ஜன யக உணர்ச்சியும் மேனாட்டுநாகரிகத்தில் ந்திருக்கின்றன. இந்திய நாகரிகத்தி ற மேனாட்டு நாகரிகத்தைப் பிரித்து வை இவைகளேயாம். ஆன்மவிளக்கம் பெறுவதே இந்திய நாகரிகத்தின் நோக்கம். உலகாயத அபிவிருத்தியை நாடுவது மற்றொன்றின் கொள்கை. மிருக சுபாவமென்றும், ஆன்ம உணர்ச்சி பெறுவதற்குரிய சுபாவமென்றும் மனிதனுக்கு இரண்டு அமிசங்கள் இருக்கின்றன. ஹிந்து நாகரிகம் பிற்கூறிய துறையிலே

யே அதிகமாக உழைத்து வந்ததென்று கூறலாம். மேனாட்டு சாஸ்திர ஆராய்ச்சியானது உலக சம்பந்தமான விஷயங்களைப் பற்றியே நின்றது. ஹிந்துக்கள் தங்கள் அறிவை அபிவிருத்தி செய்துகொண்டு வந்தார்கள். ஏன்? தங்களுடைய ஆன்ம விருத்திக்கு இவை துணையாக நிற்கும் என்ற காரணத்தினாலேயேயாம். ஷ்லீகல் என்ற ஓர் ஆசிரியர், "ஐரோப்பியர்களுடைய தத்துவவிசாரணை, ஹிந்துக்களுடைய தத்துவவிசாரணை என்கிற சூரிய வெளிச்சத்தின் முன் தோன்றும் ஒரு சிறு பொறியேயாம்" என்று பகர்ந்திருக்கிறார். "உயர்ந்த கருத்துகளடங்கிய, ஆன்மாவுக்குச் சாந்தியளிக்க வல்ல உபநிஷத்துக்களைப் போல் இவ்வுலகத்தில் வேறெந்த மொழியிலும் எந்த நூலும் கிடையாது" என்று ஷோபன் ஹேர் என்ற ஆசிரியன் கூறுகிறான். சர்வ சமூகங்களையும் சமமாகப் பார்த்தல், சமரஸம், உண்மை நோக்கம், யுத்தவெறி இவைகள் ஹிந்து நாகரிகத்தில் காணப்படவில்லை. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் மூன்றாவது நூற்றாண்டிலேயே, இந்தியாவில் மனிதர்களுக்கு மாத்திரமல்ல, மிருகங்களுக்கும் ஆஸ்பத்திரிகள் இருந்தன. கௌதமபுத்தர் நாள் முதல், மிருகங்களை வதைசெய்தல் கூடாதென்று தடுக்கப்பட்டிருந்தது. இந்தியாவில் பலவித மதங்கள் பல நூற்றாண்டுகளாக இருந்தபோதிலும் ஒன்றுக்கொன்று அதிகமாகப் போர்செய்து கொண்டதாகத் தெரியவில்லை. ஹிந்துக்கள் உண்மையை எங்ஙனம் கடைப்பிடித்து வந்தார்கள் என்பதைப்பற்றி மெகாஸ்தனன் பின்வருமாறு தெரிவிக்கிறான் :— 'ஹிந்துக்கள் எளிய வாழ்க்கையை யுடையவர்களாக இருந்தார்கள். ஒருவர்மீது ஒருவர் வழக்குத் தொடுக்கும்படியாக அவர் வைத்துக்கொள்வதில்லை. அவர்கள் வீட்டைப்பூட்டி வைப்பதேயில்லை. லேவாதேவி செய்யுங்காலத்தில் எழுத்துமூலமாக எவ்வித பத்திரமும் வைத்துக்கொள்வதில்லை. எந்த இந்தியனும் பொய் சொன்னதாகத் தெரியவில்லை.'

* * *

ஒரு தேசத்தில் எவ்வளவு குற்றச்செய்கைகள் நடைபெறுகின்றன என்பதைக்கொண்டு அத்தேசத்தின் வளர்ச்சியை அறியலாம். உதாரணமாக 1902-ம் வருஷத்தில் பிரான்சில் 23370 ஆண் கைதிகளும் 3386 பெண் கைதிகளும் இருந்தார்கள். ஆனால் அதேவருஷத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் ;6386 ஆண் கைதிகளும் 2818 பெண் கைதிகளும் இருந்தார்கள். 1901-ம் வருஷத்து ஜனகணிதத்தின்படி பிரான்சின் ஜனத்தொகை 38,661,945. இந்தியாவின் ஜனத்தொகை 231,899,507. இதைக்கொண்டு இந்தியாவில் குற்றஞ்செய்வோர் எவ்வளவு குறைந்திருக்கின்றனர் என்பதை நன்கு அறியலாம். ஹிந்து நாகரிகத்தில், யுத்த உணர்ச்சி என்பது எப்பொழுதும் ஒரு முக்கிய அம்சமாக விளங்கினதேயில்லை. படித்த உயர்ந்த ஹிந்துக்கள் இராணுவத்தில் சேர்வதேயில்லை. இந்தியாவிலும் கிழக்கு ஆசியாவிலும் ஹிந்துக்களுக்கிருக்கும் செல்வாக்கெல்லாம் அறிவைப் பொறுத்ததேயன்றி ஆயுதபலத்தைப் பொறுத்ததன்று. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் ஆண்டுவந்த அசோக சக்ரவர்த்தி கலிங்கதேசத்து யுத்தத்தைக் கண்டு பெரிதும் துக்கித்தவனாய் "என்னுடைய சகோதரர்கள்மீது இத்தகைய கொடுமைகளை இழைக்கும்படியான ஆசையை இனி நான் கொள்ளமாட்டேன்" என்று வருந்தினான். இந்த யுத்தம் நடைபெற்ற நான்கு வருஷங்கள் கழித்து, கலிங்க யுத்தத்தில் மடிந்தவர்களில் நூற்றில் ஒரு பங்கினராவது ஆயிரத்தில் ஒரு பங்கினராவது இறந்துபோனால் தனக்கு அதிக துக்கமாயிருக்கும் என்று அசோகன் தெரிவித்தான். இதற்குப் பிறகு அசோகன் தன் ஆட்சிகாலம்வரை எவ்வித யுத்தத்திலும் தலையிட்டதேயில்லை. இத்தகைய செயலைச் செய்த அரசனை மேனாட்டு சரித்திரத்தில் காட்டமுடியுமா?

* * *

பண்டைக்காலம் முதற்கொண்டு இதுகாறும் ஒவ்வொரு ஹிந்துவும், தனக்கு அதிகமான பொருள் இருந்ததேயானால் அதனை கோவில்கள், சத்திரங்கள் முதலியவைகளைக்கட்டுவது, கிணறுகள் தோண்டுவது முதலிய பொது ஜனங்களுக்கு நன்மை தரும்படியான காரியங்களிலேயே செலவழித்து வந்திருக்கிறான். பாழாகப்போன புராதன நகரங்களில் இப்பொழுதும் கோயில்களின் சின்னங்களே காணப்படுமன்றி, அரண்மனை முதலிய இக வாழ்வுக்குரிய கட்டடங்களின் சின்னங்களைக் காணமாட்டோம். மதசம்பந்தமாக வேலை செய்து புகழ்பெற்றவர்களையே ஹிந்துக்கள் போற்றிவருகிறார்கள்.

* * *

ஹிந்துக்கள் வைத்திய சாஸ்திரத்தில் அதிக அபிவிருத்தி யடைந்திருந்தார்கள். இப்பொழுது இயற்கை சாஸ்திர சம்பந்தமாகக் கண்டு பிடிக்கப்படும் ஆராய்ச்சிகளின் நுட்பங்களையெல்லாம் அவர்கள் அறிந்துகொண்டிருந்தார்கள். உலகத்தின் தோற்றம், அதன் வயது, அஃது அடைந்த மாற்றம், பிராணிகளின் சிருஷ்டி முதலிய அனைத்தைப்பற்றியும் ஹிந்துக்கள் அறிந்துகொண்டிருந்தார்கள். தட்ப வெப்ப நிலைமையைப்பற்றி அவர்கள் நன்கு ஆராய்ச்சி செய்திருந்தார்கள். ரசாயன சாஸ்திரத்தில் அவர்கள் அடைந்திருந்த முன்னேற்றம் பெரிதும் போற்றத்தக்கது. இந்த ரசாயன சாஸ்திரத்தை அராபியர்கள் ஹிந்துக்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். செடி நூலிலும் பிராணி நூலிலும் ஹிந்துக்கள் நல்ல அறிவைப்பெற்றிருந்தார்கள். மேனாட்டு நாகரிகம், இயற்கையை தன் ஆதிக்கத்துக்குட்படுத்திக்கொண்டுவிட்டது என்று கூறலாம். ஆனால் இந்திய நாகரிகம் அங்ஙனம் செய்யவில்லை. ஹிந்து நாகரிகம் உலகரீதியை அநு[illegible] போகாமையினால், ஹிந்துக்களில் [illegible] வகுப்பார் கைத்தொழில்களில் அதிக காட்டவில்லை.

* * *

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பாவின் கைத்தொழில்கள் எவ்விதத்திலும் உயர்ந்த நிலைமையில் இருந்ததென்று சொல்ல முடியாது; இந்தியாவைவிட கேவலமாகவே இருந்ததென்று சொல்லவேண்டும். இந்தியாவிலிருந்து காலிகோ துணிகள் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தியாவில் சாயம்போடும் தொழில் மிகவும் அபிவிருத்தியடைந்திருந்த சமயத்தில், இங்கிலாந்தினர் தங்களுக்குச் சாயத்தொழிலில் பயிற்சி இல்லாததினால் ஹாலந்துக்குத் தங்கள் துணிகளை அனுப்பிச் சாயம்போட்டு வந்தார்கள். இங்கிலாந்து தனக்குத் தேவையான இரும்பு சாமான்கள், உப்பு, மண்பாத்திரங்கள் முதலியவற்றில் மூன்றில் இரண்டு பாகத்தை வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்துகொண்டு வந்தது. ஆனால் இந்தியாவோ தன் இரும்புச் சாமான்களை ஏற்றுமதி செய்து வந்தது. பஞ்சும் இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தநிலையிலிருந்த ஐரோப்பா கண்டம் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே கைத்தொழில் விஷயத்தில் அதிக முன்னேற்றம் அடைந்து வந்தது. பல புதிய ஆராய்ச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டன. சாஸ்திர ஆராய்ச்சியானது பல அதிசயங்களை உண்டுபண்ணி யிருக்கிறது. இன்னும் ஆராய்ச்சி முடியக்காணோம். ஒரு தலைமுறை ஆராய்ச்சி எல்லையைக் கடந்துவிட்டதாக எண்ணினால் அதற்கு அடுத்த தலைமுறை அம்முடிவையே தன் ஆரம்பமாகக்கொண்டு மேன்மேலும் ஆராய்ச்சி செய்யத் தொடங்குகிறது. இங்ஙனமே அபிவிருத்தியாகிக் கொண்டுவருகிறது. இந்த அபிவிருத்தி இந்தியத் தொழிலாளிகளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. மேனாட்டுக் கைத்தொழில்களுக்கு ஈடுகொடுக்க இவர்களுக்குப் போதிய ஆதரவு கொடுக்கப்படவில்லை.

* * *

சுமார் ஒரு நூற்றாண்டாகவே மேனாட்டுக் கைத்தொழில்கள் அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. இதனால் மனித சமூகத்திற்கு என்ன நன்மை உண்டாயிற்று என்பதை இப்பொழுதே பரிசீலனை செய்துவிட முடியாது. இதனால் சிறிதளவு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் நன்மையை விட தீமையே அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிகிறது. மேனாட்டுக் கைத்தொழில்களின் அபிவிருத்தியினால் சாமான்கள் மலிவாயின; ஏழை மக்களுக்குச் சௌகரியமா யிருக்கும்படி சாமான்கள் விற்கப்படுகின்றன. உலகத்திலுள்ள எல்லாப் பாகங்களுக்கும் போக்கு வரவு சுலபமாக நடைபெறுகிறது. இவைகள் நன்மைகளேயாம். ஆனால் இந்தக் கைத்தொழில் அபிவிருத்தியினால் முதலாளி தொழிலாளி பிணக்கு அதிகமாயிற்று. நாட்டுவாழ்க்கையில் வெறுப்பும் நகர வாழ்க்கையில் விருப்பும் ஏற்பட்டன. இயந்திர சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் ஒழுக்க நிலை கெட்டுப்போகிறது. இவைகள் தீமைகளாம்.

* * *

மேனாட்டு நாகரிகம் ஜனநாயக உணர்ச்சியை அதிகப்படுத்தியது. பதினெட்டாவது நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாவது நூற்றாண்டின் முற்பகுதியிலுமே, ஐரோப்பா கண்டத்தில் ஜனநாயக அரசாங்கங்கள் தோன்றின. 1820-ம் வருஷத்தில், ஸ்பேயின் தேசத்து ஜனங்கள் அந்நாட்டு அரசனுக்கு விரோதமாகக் கலகம் செய்தனர். இதனால் ஜனங்கள் எல்லாருக்கும் வாக்குரிமை கிடைத்தது. பிறகு, கிரீஸ் துருக்கியின் ஆதிக்கத்தினின்று விடுபட்டது. 1830-ம் வருஷம் பிரஞ்சுக்காரர் செய்து கொண்ட ஓர் உடன்படிக்கையின் பயனாக ஐரோப்பாவிலேயே ஒரு புதிய ஜனநாயக உணர்ச்சி தோன்றியதென்று கூறலாம். இங்கிலாந்திலும் 1832-ம், வருஷத்தில் சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதற்குப் பிறகு ஐரோப்பா ஜனநாயக உணர்ச்சி பெற்றதொரு கண்டமாக மாறியதென்று கூறலாம்.

* * *

இந்தியாவிலும் முற்காலத்தில் குடியரசுகள் இல்லாமல் இல்லை. கிராம நிருவாகம் ஒருவித ஜனப்பொறுப்பாட்சி முறையைத் தழுவியதேயாகும். ஆனால் கீழ்நாட்டில், மத்திய அரசாங்கம் அதாவது தலைமை அரசாங்கம் சுயேச்சாதிபத்தியத்தைக் கொண்டதாகவே இருக்கிறது. மேனாட்டில் அரசியல் விஷயங்களில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமான ஜனநாயக உணர்ச்சி பரவி வருகிறதோ அவ்வளவுக் கவ்வளவு பணக்காரன் ஏழை என்ற வேற்றுமைகளும் முதலாளி வித்தியாசங்களும் அதிகமாகிவருகின்றன என்று கூறலாம். ஆனால் தொழிற்கட்சியார் வலுத்து வந்தால் அவர்களுடைய நிருவாகத்தின் கீழ் ஒரு புதிய மாறுதல் காணலாம் என்பது நிச்சயம். உலகத்தின் பழைய சரித்திரப்படி, நாகரிக முன்னேற்ற மென்பது கீழ் நாட்டிலிருந்து மேனாட்டுக்குச் சென்றிருக்கிறது. இங்ஙனம் சென்ற நாகரிகம் மேனாட்டில் இடத்துக்கு இடம்மாறிய வண்ணம் தன் ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டுவருகிறது. தற்கால நாகரிகம், பழைய நாகரிகத்தின் அம்சங்களை விடாமல், அதனைக் கூடியவரையில் பலப்படுத்திக்கொண்டு வருகிறதென்று கூறலாம். எதிர்கால நாகரிகமும்—அஃது எந்த இடத்தில் வலுத்து நின்ற போதிலும்—தற்போதைய நாகரிக நன்மைகளைக் கைவிடாது என்று சொல்லவேண்டியிருக்கிறது.—நவசக்தி.

* * *



# புருஷோத்தமன் அல்லது புன்சிரிப்பு.

சகோதரி வி. பாலம்மாள்.

(149-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 5-வது அதிகாரம்.

உலக காரணர்களாகிய திரிமூர்த்திகளில் பிரம்மதேவனுக்கே முதன்மை யளிக்கவேண்டியிருக்கிறது. பிரம்மன் சிருஷ்டித்தாலன்றி ரக்ஷிப்பதற்கு விஷ்ணுவும் சங்கரிப்பதற்கு உருத்திரனும் ஏற்பட முடியாது. பிரம்மன் எல்லாம் வல்ல நிபுணத் தன்மை வாய்ந்தவர். பெண்களைச் சிருஷ்டிக்கும்போது பிரம்மன் இழைக்கும் பிழையை மட்டும் பெண்ணுலகம் மன்னிக்கவே முடியாதென்பது நிச்சயம். முதலில் சிருஷ்டித்துப் பிறகு அதன் தலையில் எழுதவேண்டியது சம்பிரதாயமா, அல்லது சிருஷ்டித்த உயிர் உருவடையும் முன்னதாகவே அதன் தலையில் பிரம்மன் எழுதி விடுகிறாரா என்பதை நாமறிந்துகொள்ள முடியாமலிருக்கிறது. நல்ல அதிருஷ்டமுள்ள பெண்களின் அமைப்பில் சில சமயங்களில் அசட்டையாயிருக்கும் பிரம்மன் அதிருஷ்ட ஹீனமுள்ள பெண்களைப் படைக்கும்போதுதானா தனது முழு சாமர்த்தியத்தையும் வெளியிடவேண்டும்? ஐயோ இஃதென்ன கொடுமை! அதிருஷ்டமுள்ள விடத்தில் அழகு குறைந்துவிடுவதால் பாதக மேற்படுவதில்லை யானாலும் அழகுள்ள பெண்களுக்குத் துரதிருஷ்டத்தைக்கூசாது எழுதிவிடும் பிரம்மதேவனை என்னென்று நோவது? இதையறிந்துதானே "அதிருஷ்டம் செழிக்கும்; அழகு அழும்" என்று உலகில் ஒரு பழமொழியும் ஏற்பட்டிருக்கிறது.

அழகு நிறைந்து அதிருஷ்டம் இல்லையுமற்று ஒரு பெண் தன் காலத்தை வீணில் கானகத்தின் நிலவைப்போல் கழிப்பதில் மனவுறுதியும் தைரியமும் கொண்டிருப்பது இந்தியத்தாய் பெற்ற இணையற்ற தவப்பயனேயானாலும் அதிருஷ்டத்தைப்போல் அழகும் அவளுக்குக் குறைவு பட்டிருக்குமானால் நிர்ப்பயமாய் இம்மூடத் தன்மையும் அஞ்ஞான சிந்தையும் படைத்த உலகில் காலந்தள்ள சௌகரியமாயிராதா?

இத்தகைய சொல்லொணாத் துயரம் வாய்க்கப் பெற்ற கட்டழகியின் உச்சநிலையை நமது காந்திமதி அடைந்திருந்தாள். செயற்கை அழகு ஒரு சிறிது மில்லாமலிருந்தும் அவளது இயற்கை அழகு ஜகன்மோஹனாகாரமாய் விளங்கியது. காந்திமதியின் ஒவ்வொரு அங்கமும் தனித்தனியே அழகைச் சேர்த்துச் செய்ததுபோல ஒப்பற்று ஒளிவீசிற்று. பூரண சந்திரனைப் பழிக்கும் முகமும், அழகிய நாசியும், சிவந்த அதரமும், சிறிய வாயும், தந்தம்போன்ற பல் வரிசையும், செம்பொன்னிறமான தேகமும், தேவகன்னியோ கந்தர்வமாதோ என்று எண்ணும்படி அதிரூப சுந்தரியாக அம்மங்கை நல்லாள் காணப்பட்டாள். மெல்லிய இடையுடன் அசைந்தாடும் தங்கக் கொடிபோன்ற சரீரத்தையுடைய அவ்வழகியின் முக காந்தியானது ஆனந்த மயமாயிருந்தது. நாள் தவறாது ஸ்நானஞ் செய்வதால் ஈரங்காயும் நிமித்தம் அவிழ்த்து விடப்பட்டிருக்கும் கேசபாசம் படிப்படியாய்ச் சுருண்டு நீண்டு மினிமினிப்புள்ள கருமை நிறத்துடன் கருங்கடலின் அலைகளோ கார்மேகக் கூட்டமோ என்று கண்டோர் பிரமிக்கத்தக்க வண்ணம் குதிகால்வரை அலைந்துகொண்டிருக்க அந்தமாதரசி நடமாடும்போது ரவிவர்மாவால்

சித்திரிக்கப்பட்ட வடிவழகிகளின் ஞாபகமுண்டாகாமலிராது. உத்தம ஸ்திரீலக்ஷணங்களவ்வளவையும் ஒருங்கே பெற்றிருக்கும் காந்திமதியின் தலையில் வாழ்நாள்முடிய நீச்சு நிலையின்றித் தொடர்ந்திருக்கும் துர்ப்பாக்கியத்தை விதித்த பிரம்மனின் மறக்கருணையை எண்ணி விசனியாத மனம் இராதென்றாலும், புருஷோத்தமன் மனதிற்குமட்டும் அவ்வனப்பு உள்ளத்திலாழ்ந்து மனக்கிளர்ச்சியையும் உண்டாக்கிவிட்டது. தந்தையின் சிந்தைகுளிரத் தந்தியை மீட்டி அக்காந்திமதி இனிய குரலில் பாடும்போதும் வடமொழியிலுள்ள சிறந்த காவியங்களுக்கு வியாக்கியானம் செய்யும்போதும், சமூக சீர்திருத்தங்களைப்பற்றி சமத்காரமாயும் சமயோசிதமாயும் உபமானங்களோடும் எடுத்துரைக்கும்போதும் புருஷோத்தமன் தேன்குடித்த குள்ளநரிபோலத் தத்தளித்துத் தடுமாறினான். பரிசுத்தமனமுள்ள அப்பெண்மணியின் முகம் இயற்கையிலேயே புன்சிரிப்புடனே எப்போதும் காணப்படுவதால் புருஷோத்தமன் எதை மறந்தாலும் காந்திமதியின் புன்சிரிப்பை மட்டும் மறக்கமுடியாதவனாகத் திகைத்தான். இவன் கஷ்டம் இதனுடன் நிற்கவில்லை. காந்திமதி தன் கையால் நூற்று நெசவு செய்த உடைகளையே தரிப்பது வழக்கம். அவள் விசேஷமாக ராட்டினத்தில் நூல்நூற்றவண்ண மிருப்பாளாகையால் இச்சமயம் ராமகர்ணாம்ருதம், கிருஷ்ணகர்ணாம்ருதம் இவைகள்போன்ற சுலோகங்களை மெல்லிய குரலுடன் பல ராகங்களில் அமைத்துப் பாடும் குரலோசை புருஷோத்தமனின் உள்ளத்தைப் பிளந்து தகர்க்க வாரம்பித்தது. தான் என்ன செய்கிறோம், என்ன நினைக்கிறோம் என்றும் அறியாதபடி இவனை ஆட்டிவைக்கும் பேயினால் புருஷோத்தமன் காந்திமதியை அடிக்கடி சந்திக்கவும் அவளுடன் சம்பாஷிக்கவும் வழிதேடி வந்தான். கள்ளத்தனமற்ற வெள்ளை நெஞ்சம் படைத்த அவ்வுத்தமியும் இதையறியாது மலர்ந்த முகத்தில் மந்தகாசம் தவழ்ந்த வண்ணம் புருஷோத்தமனுடன் பேசுவதும் பலவிஷயங்களை எடுத்துரைப்பதுமாக விருந்தாள். பாவசிந்தையிலீடுபட்டிருக்கும் புருஷோத்தமனுக்கும் கற்பரசியெனக் கையெடுத்துவணங்கக்கூடிய காந்திமதியின் பரிசுத்தம்வாய்ந்த புன்சிரிப்பிற்கும் இடையே ஒரு வாரம் கழிந்தது.

### 6-வது அதிகாரம்.

காந்திமதி அபலாச்ரமம் செல்லும் நாள் சமீபித்துக்கொண்டிருந்தது. தீபாவளி பண்டிகையும் கழிந்துவிட்டது. புருஷோத்தமன் ஒன்றும் தோன்றாதவனாகத் தவித்தான். தான் சென்னைசெல்வதை இஷ்டம்போல் தாமதப்படுத்திக் கொள்ளுவதால் வேட்டகத்தின் உபசாரமும் மரியாதையும் ஒரு சிறிதும் குறைவுபடமாட்டாதென்பதை இவன் நன்கறிவான். பூரணகர்ப்பிணியாகிய மனைவி சிறிதும் சலிப்பென்பதில்லாமல் உள்ளன்புடன் தன்னை கவனித்து வருவதோடு சென்னைப் பிரயாணம் தாமதப்படுவது கண்டு அவள் சந்தோஷப்படுவதையும் உணர்ந்திருந்தான். இவ்வித சௌகரியங்களாலிவனுக் கென்ன பயன்? இரண்டு மூன்று தினங்களில் காந்திமதி பம்பாய்க்குச் சென்றுவிடப்போகிறாள். தகாதவழியில் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கும் புருஷோத்தமனுக்குக் காந்திமதியின் மதிமுகத்தைக்காணாது இனி அரைக்ஷணமும் தனித்திருக்க முடியாதென்ற ஏக்கமும் எண்ணமும் மேலிட்டுவிட்டன. புருஷோத்தமன் தனது விவாக சமயத்திற்குப் பின்பு காந்திமதியை இதுவரை கண்டதில்லை. அச்சமயம் இவனுக்குப் பதினாறு வயதுதான் ஆகியிருந்தது. காந்திமதிக்குப் பதின்மூன்று வயது நிரம்புவதற்குள் அவள் கணவன் இறந்து ஒருவருஷமாயிருந்ததால், வீட்டிலுள்ளவர்



களும் மாணிக்கவல்லியின் கலியாணத்திற்காக வந்திருக்கும் இஷ்டமித்திர பந்துக்களும் காந்திமதியைக் குறித்து கண்ணீர் விடுவதைத் தமது குழந்தை யறியாவண்ணம் சுந்தரேசன் காந்திமதியைக் கலியாணச் சந்தடியில் அதிகம் கலக்கவிடாது கவனித்துகொண்டார். அடுத்த வருஷம் காந்திமதி அபலாச்ரமம் சென்றுவிட்டாள். ஆறுவருஷகாலம் அவ்விடத்திலே அவளை இருக்கச்செய்து இஷ்டமானபொழுது சுந்தரேசன் தனது மனைவியுடனும் சில சமயம் தான் மட்டும் பம்பாய் சென்று மகளைப் பார்த்துவிட்டு வருவது வழக்கம். காமக்குரோதம்போன்ற துர்க்குணங்கள் சற்றும் ஏற்படாவண்ணம் அவ்வாச்ரமத்தில் காந்திமதி பாதுகாக்கப்பட்டு வந்ததினால் தன் நிலைமையைப்பற்றித் துக்கமாவது உலக வாழ்க்கையில் புத்தியாவது காந்திமதிக்குச் சிறிது முண்டாகவில்லை. படிப்பதும், கடவுளைத் துதிப்பதும், தோட்டம் பயிரிடுவதும், ராட்டினத்தில் நூற்பதும், கைத்தறியில் நெய்வதும், தன்னைப்போன்ற நிலைமைக்காளாயிருக்கும் அவ்வாச்ரமத்திய இதர பெண்மணிகளோடு விளையாடுவதும் இவ்விதமாகக் காலங்கழித்த காந்திமதிக்கு இப்பாழுலகத்திலுள்ள சூதுவாதுகளும் கெடுமதியும் இத்தகையதென்றே தெரிந்துகொள்ள ஏதுவில்லாமலிருந்தது. காந்திமதியின் புத்தியும் நடவடிக்கைகளும் எவ்வளவுக்கெவ்வளவு அடக்கமாயிருந்தனவோ அவ்வளவுக்கவ்வளவு அவள் தேகவனப்பும் சௌந்தரியமும் பெருகியிருந்தன. தலைமுடி வளரவேண்டுமென்று கண்டகண்ட தைலங்களை எல்லாம் பூசித் தலைவலியும் மண்டையிடியுமாகப் பல பெண்கள் கஷ்டப்படும் நாளில், போஷித்தல் ஒரு சிறிது மற்றிருக்கும் காந்திமதியின் அளகபாரம் தரையில புரளக்கூடியதாயிருப்பது தெய்வசோதனை போலும். இவ்வாறு அதிரூபசுந்தரியாக விளங்கும் காந்திமதியை இச்சமயம் காணப்பெற்ற புருஷோத்தமன் சிறுகச் சிறுக மனவேற்றுமையை யடைந்ததுடனில்லாது அவள் ஊர் சென்றுவிடுவதற்கு நாள் நெருங்கிவிட்டதே என்றும் வருத்தப்படலானான். தன்னைப் போலவே காந்திமதியின் மனமும் மாறியிருப்பதினாலேயே தனக்கிவ்வளவு ஆதங்கமுண்டாவதாகத் தீர்மானித்தான். அவள் ஊருக்குச் செல்லுமுன் தன்னிடம் ஏதேனும் ஜாடையிலாவது உற்றபிரியத்தை வெளியிடுவாளென்று நினைத்தான். இவன் இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டு தனதறையில் உட்கார்ந்திருக்குஞ் சமயம் மூடியிருந்த கதவு திடீரெனத்திறக்கப்பட்டது. மின்னலொளிபோல் அவனெதிரில் காந்திமதி வந்து நின்றாள். பேதை புருஷோத்தமனின் பாடு அவலமாயிற்று. அவனுக்குண்டான சந்தோஷத்தில் ஒன்றுமறியாதவனாகி வாயைத் திறந்தபடி இருந்தான். “நீ இன்று மாலை அப்பாவுடன் வெளியில் சென்றுவிட்டாயென்றல்லவோ நான் எண்ணியிருந்தேன். கதவை அடைத்துக்கொண்டு தனியே என்ன யோசித்துக்கொண்டிருக்கிறாய்?” என்று தனதழகிய வாய்திறந்து காந்திமதி வினவினாள். முழு மூடத்தன்மையில் உழன்றுகொண்டு அச்சமயம் மதிகலங்கியிருந்த புருஷோத்தமன் ‘இல்லை, நான் வெளியே செல்லவில்லை ; நீ எங்கு வந்தாய் ? என்ன விசேஷம்? ஏன் நின்றுகொண்டிருக்கிறாய் ? இந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பேசு’ என்று உளறி வழிந்தான். ‘மாணிக்கம் பிரசவவேதனையிலிருக்கிறாள். அவள் பெட்டியிலிருந்து கோரோசனை எடுத்துப்போக வந்தேன். சென்னையில் கோரோசனை நேர்த்தியா யிருக்குமென்று நீ வாங்கிக் கொடுத்திருக்கிறாயாமே ; பிள்ளை பிறக்கு முன்னதாகவே எவ்வளவு ஆசையப்பா’ என்று கூறி புன்னகைபுரிந்தாள். இயற்கையிலேயே புன்னகை பூத்து ஒளி வீசிக்

கொண்டிருக்கும் அம்மதிமுகத்தில் அச்சமயமுண்டாகிய புன்சிரிப்பு புருஷோத்தமன் மனதை ஒரே கலக்காய் கலக்கிவிட்டது.

## 7-வது அதிகாரம்.

மழை காலமாகிய ஐப்பிசி மாதமென்றாலும் ஆகாயத்தில் சந்திரன் தண்ணொளி வீசப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். அன்று மாணிக்கவல்லிக்கு புத்திரோற்சவமானது பற்றி இரவில் விருந்து சாப்பிட்டு முடிவதற்கு ஒன்பது மணியாயிற்று. காந்தி விலாசத்தில் அவரவர்கள் படுக்கைக்குச் சென்றுவிட்டார்கள். புருஷோத்தமன் மட்டும் தூக்கம் பிடியாமல் படுக்கையில் கிடந்தான். இவன் மூடத்தனம் கண்டு பரிகசிப்பான்போலச் சந்திரன் தனது கிரணங்களை சாளரத்தின் வழியாக இவன்மீது வீசிக்கொண்டிருந்தான். சற்று குளிர்ச்சியுடனும் தோட்டத்தில் மலர்ந்திருக்கும் பற்பல மலர்களின் நறுமணத்துடனும் இளங்காற்று வீசிக்கொண்டிருந்தது. புருஷோத்தமனுக்குக் காந்திமதியின் தியானம் தவிர்த்து வேறொன்றிலும் நினைப்பில்லாதவனாக யோசிக்கலானான். "ஐயோ! நான் எவ்வளவு மூடனாயிருக்கிறேன், காந்திமதியை நினைப்பது தகுமா? சீ! சீ! இது கூடாத காரியம். அடடா! என்ன அழகு, என்ன வனப்பு! என்ன காந்தி! ஆகா! எவ்வளவு இனிய சங்கீதம்! இஃதென்ன அநியாயம். மாணிக்கவல்லியை மனைவியாய் வாய்க்கப் பெற்ற எனக்கு என்ன குறை? இல்லை; என்ன இருந்தாலும் காந்தியின் அழகிலுள்ள வசீகரம் அவள் தங்கையிடமமைந்திருக்கவில்லையே, கடவுளே எனக்கு இத்துர்ப்புத்தி உண்டாகலாமா? ஏன், இது மனித சுபாவத்திற்கு சகஜந்தானே. இதனால் தானே பெண்ணாசை பொல்லாதென்று பெரியோர்களே எழுதிவைத்திருக்கிறார்கள். காந்திமதி என் கண்களில் படாமலே இருந்திருக்கலாகாதா? நான் சென்னையிலிருந்து இங்கு வாராமலிருந்தால் இச்சங்கடமேற்பட்டிராதே. ஆகா! என்ன புன்சிரிப்பு! பாழும் சிரிப்பல்லவோ என் மனதைக் கெடுத்து விட்டது. ஒருகால் அவளுக்கு என்னைப்போல இவ்வெண்ண மில்லாமலிருக்குமானால்........ இல்லை, இல்லை. இல்லாமலா நான் தனித்திருக்கும் சமயமறிந்து என்னறைக்குள் வந்தாள். வாஸ்தவத்தில் கோரோசனை எடுத்துச் செல்லவே வந்திருந்தால்—ஒரு நாளுமில்லை. அபிப்பிராயமிருந்ததினாலேதான் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்திருக்கிறாள். எப்படியாவது என்னெண்ணத்தை யவளிடம் வெளிப்படையாகத் தெரிவித்து விடுவதே அனுகூலம். இவ்விதம் இன்னமும் யோசித்துக் கொண்டே யிருந்தால் வழி என்ன? காந்திமதி ஊர் சென்று விட்டால் என்ன செய்கிறது? நமதபிப்பிராயத்தை முன்னதாகவே தெரிவித்து விட்டால் காந்திமதி இனி பம்பாய் செல்லாமல் இவ்விடமே தங்கிவிடவும் கூடும். இனிச் சிறிதும் தாமதியாமல் என் மனதிலிருப்பதை காந்திமதிக்குத் தெரிவித்தே தீருவேன்" என்று தனக்குள் புருஷோத்தமன் தீர்மானித்துக்கொண்டான்.

## 8-வது அதிகாரம்.

மாணிக்கவல்லி ஆண் குழந்தை பெற்றது கண்டு அவள் மாமியாரும் தாய் தந்தையரும் ஆனந்தக் கடலிலாழ்ந்தனர். தன் தங்கைக்குப் பிள்ளை பிறந்த சந்தோஷத்தினால் காந்திமதி தனது பம்பாய் பிரயாணத்தை அச்சமயம் நிறுத்திக் கொண்டாள். அவ்விளஞ் சிசுவை மடிமீது வைத்துச் சீராட்டுவதும் தாலாட்டுவதும் அக்குழந்தையின் அழகிய முகங்கண்டு ஆனந்திப்பதுமாக இருந்தாள். இவ்விதமாகக் காந்திமதி தன் தங்கையிருக்கும் பிரசவ அறையிலேயே இருந்து வந்ததினால் புருஷோத்தமன் அவளை அடிக்கடி காணமுடியவில்லை. குழந்



தை கொடி சுற்றிப்பிறந்ததால் சாந்தி செய்யுமுன் தகப்பன் தன் குழந்தையைப் பார்க்கக் கூடாதென்று சாஸ்திரிகள் சொன்னதால் பிரசவ அறையிலிருக்கும் குழந்தையைச் சாக்கிட்டாவது காந்திமதியைக் காணப் புருஷோத்தமனுக்குச் சந்தர்ப்ப மேற்படவில்லை. "என்று காந்திமதியைக் காண்போம், கடிதத்தை என்று அவளிடம் சேர்ப்பிப்போம்" என்று ஏக்கமடைந்தான்.

ஏழாவது நாள், பிறந்த குழந்தைக்குக் காப்பிடுவதற்காகச் சில நகைகள் செய்யவேண்டிய நிமித்தமும் தன்னால் தனியே ரயிலேறிப் பெங்களூர் வரமுடியாதது பற்றியும் மகனைச் சென்னைக்கு வந்து தன்னை அழைத்துப் போகும்படி புருஷோத்தமன் தாய் கடிதமெழுதியிருந்தாள். மருமகப் பிள்ளை ஊர் செல்வதால் வழிவிடுவதற்காக மாமன் மாமி இருவரும் தெருவாயிற்படியில் நின்று கொண்டிருந்தார்கள். புருஷோத்தமன் மோட்டார்கார் ஏறிச் செல்லவேண்டிய சமயமாயிருந்தது. காந்திமதிக்காகத் தான் அருமையாய் எழுதி வைத்திருந்த கடிதத்தை யவளிடம் சேர்ப்பியாது ஊர்செல்லவேண்டியிருக்கிறதே என்று யோசித்தான். இச்சமயம் கையில் பணப்பையுடன் காந்திமதி அவ்விடம் வந்து அவசரமாய் ஒரு மருந்து வாங்கிவர வேண்டியிருப்பதால் தானும் அவ்வண்டியிலேயே வருவதாகக் கூறினாள். எதிர்பாராத இச்சம்பவம் புருஷோத்தமனின் எண்ணத்தையும் ஆவேசத்தையும் இரட்டிப்பாகப் பெருகச் செய்தது.

மோட்டார் செல்ல வாரம்பித்ததும் யோகக்ஷேமங்கள் பற்றிக் காந்திமதியுடன் அவன் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தான். 'என் மனதிலுள்ள விஷயங்களை வாய்விட்டுச் சொல்ல நேரமில்லை. ஏதோ சுருக்கமாக எழுதிவைத்திருக்கிறேன்' என்று புருஷோத்தமன் சொல்லிக்கொண்டு வரும்போது ரயிலடி வந்து விட்டது. கூடவந்திருந்த வேலைக்காரன் டிக்கெட் வாங்குவதற்காக வண்டி விட்டிறங்கி ஓடினான். சாமான்களும் மோடாரிலிருந்து இறக்கி வைத்தாயிற்று. 'நேரில் சொல்ல முடியாத விஷயத்தைக் கடிதத்தி லெழுதி விடுதல் சுலபமாக உனக்குத் தோன்றியதா' என்று காந்திமதி அவனை வினவி புன்னகை புரிந்தாள். 'இதோ அக்கடித மிருக்கிறது. உன் பதிலைக் கண்டுதான் நான் என் தாயுடன் சென்னை விட்டுப் புறப்படுவேன். தவறாது நீ பதிலளிக்க வேண்டு'மென்றுகூறி வண்டி விட்டிறங்கிச்செல்லும் புருஷோத்தமன், காந்திமதியின் கரத்தில் அவள் விலாஸமிட்டிருக்கும் கடிதத்தை யளித்து விட்டு ரயிலேறச் சென்றான்.

புருஷோத்தமனளித்த கடிதத்தைப் பிரிக்காமல் மடியில் சொருகிக் கொண்டு காந்திமதி மருந்துக்கடைசென்று வாங்கவேண்டியவைகளை வாங்கிக்கொண்டு மெத்த அவசரமாக வீடு திரும்பினாள். மாணிக்கவல்லியிடம் சென்று அவளுக்கு வேண்டிய மருந்துகளைக் கொடுத்து உபசரித்துவிட்டுக் குழந்தையை மடியில் படுக்கவைத்துக்கொண்டு கொஞ்சினாள். ஐந்தச்சு பாவனையும் புருஷோத்தமன் போலவே அமைந்திருக்கும் அக்குழந்தையைக் கண்டு சந்தோஷித்தாள். தனக்கேற்ற கணவனை மணந்து அவனைப்போலவே உருக்கொண்டு விளங்கும் புத்திர ரத்தினத்தைப் பெற்றெடுத்திருக்கும் தன் தங்கையின் அதிருஷ்டத்தைப் பற்றி புகழ்ந்து கொண்டாடினாள். இவைகளால் தன தருமைத் தங்கைக்கு கண் திருஷ்டி தோஷம் ஏற்படுமோ வெனப் பயந்து திருஷ்டி பரிகாரம் செய்தாள்.

இனி அவளுடம்பையும் குழந்தையையும் எவ்விதம் கவனித்துக்கொள்ள வேண்டுமென்பது பற்றித் தங்கைக்கு புத்திமதி கூறினாள்.

"இன்னமிரண்டு தினத்தில் உன்மாமியார் வந்துவிடுவாள். எங்களைக் காட்டிலும் உன் மாமிக்கேற்படும் சந்தோஷம் அளவு கடந்ததாகவே இருக்கும். பருவவயதில் கணவனையிழந்த துக்கத்தையும் சகித்து ஏழ்மைத் தனமுள்ள சிறு குடும்பத்தில் தன்னருமை மகனையே கதி என்று நம்பியிருந்து அவன் எப்போது வளருவான்; அவனுக்குக் கலியாணமாவதெப்போ; அவன் சம்சாரியாய்க் குழந்தை குட்டிகளுடன் சந்தோஷமாயிருப்பதைக் கண்ணால் காண்பதெப்போ என்றிவ்வித மெல்லாம் எண்ணி உன் மாமியார் காலங்கழித்து வந்திருப்பாள் அல்லவா. அடக்க வணக்கமுள்ள மருமகள் கிடைத்தது போலவே பத்தரைமாற்றுத் தங்கம்போல் பேரப் பிள்ளையும் பிறந்திருக்கிறான். உன்னால், உன் குணத்தால்,உன் பணிவால், உன் புத்திசாலித்தனத்தினால் பிறந்த வீடு புருஷன் வீடு இரண்டிற்கும் மணி விளக்குப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாய். என் கண்மணியே! நீ க்ஷேமமாயிருக்க வேண்டுமென்று நான் சதாகாலமும் கடவுளைப் பிரார்த்தித்த வண்ணமிருக்கிறேன். வளர்ந்து தழைந்த ஆலமரம்போல் நீ வேரூன்றி க்ஷேமமாயிருந்தால்தானே பக்ஷி போலிருக்கும் என்னையும் நீ ஆதரிக்கலாம்" என்று இவ்வாறு காந்திமதி விஸ்தாரமாகப் பேசிமுடித்தாள். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மாணிக்கவல்லியும் "அக்கா, என் புருஷன் மிகவும் நல்லவர். உன்னைத் தன் சகோதரிபோல மதித்து நடந்து கொள்வார். என் மாமியாரின் குணம் தங்கக்கட்டிபோன்றது. நீ இருக்கும்போது எனக்கென்ன குறை, எல்லாம் உன் ஆசீர்வாதம். நான் பெற்றதன்றி இக்குழந்தையும் உன்னுடையதுதான். நீ இனிப் பம்பாய் செல்லாமல் இவ்விடமே இருப்பாயாகில் நான் இன்ன மெவ்வளவோ சந்தோஷத்துடனிருப்பேன். இம்முறை உன்னை விட்டுப் பிரிவதென்றால் என்னால் முடியாது போலிருக்கிறதே. நீ அபலாச்ரமம் சென்றவுடன் நான் படுக்கையில் படுத்துக்கொண்டு அழுவேன். அப்பா அம்மா எங்கே தெரிந்துகொண்டு விடுவார்களோ என்று ஜாக்கிரதையாயிருந்தாலும் அழுகை மிகுதியால் தேம்பித் தேம்பித் திணறுவேன். உன்னை நினைத்துக்கொண்டுவிட்டால் எனக்கு என்னை யறியாமலழுகை வந்துவிடுவது வழக்கம்" என்றாள். இச்சமயம் மடியில் வைத்திருந்த கடிதத்தின் நினைவு உண்டானதும் காந்திமதி அதைப்பிரித்து நோக்கினாள். அதில் வடமொழியில் எழுதப்பெற்ற இரண்டு பாக்கள் இருந்தன.

वदनं दरमन्दस्मितमनोहरं पूर्णचन्द्रसंकाशं -
अधरं विद्रुमसदृशं सुदीर्घनयनद्वयं स्मरामि तव ।
जानासि मामिह त्वं त्वद्रूपविमोहितं मम स्वान्तं -
दहति शरैर्मदनो मां परिहरणीयस्त्वयैव सन्तापः ॥

(ஆசிரியர் இயற்றியது.)

(உன் அழகை நினைந்துருகுமென்னை நீ காப்பாற்றல் வேண்டுமென்பது கருத்து)

என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டதும் காந்திமதி சற்று திகைப்படைந்தாள். ஒன்றும் தோன்றாது சிறிது நேரம் அசைவற்றிருந்தாள். இரண்டொரு நிமிஷங்களுக்குள் அவள் முகம் முன்போல் தெளிவடைந்து விட்டது. இதற்கிடையில் கடிதம் எங்கிருந்து வந்திருக்கிறதென்று மாணிக்கம் கேட்டதற்கு உன்புருஷன் உன்னையும் குழந்தையையும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளும்படி எனக்கெழுதியிருக்கிறான். இதை என்னிடம் நேரில் சொல்ல அவனுக்குச் சங்கோசமாயிருந்ததாம் என்று காந்திமதி சொல்லிவிட்டுத் தன்னை யறியாமல் நகைத்தாள்.

(தொடரும்.)



# மேனாடுகளில் சிசு சம்ரக்ஷணை.

ஸ்ரீமான் எஸ். ஆர். வேங்கடரமணையர், B.A.

நம்மிந்திய நாட்டில் சிறு குழந்தைகள் சரியானபடி போஷிக்கப்படாததால் பிறந்த சில மாதங்களுக்குள்ளேயே மரித்துப் போவது (Infantile Mortality) யாவரும் நன்கறிந்ததே. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இவ்விஷயமாக ஜனங்கள் அதிக ஊக்கங்கொண்டு சிசுக்களைச் சரிவர சம்ரக்ஷிக்கும் வகைகளைத் தேடி, அவற்றைக் கையாண்டு வருவதால் குழந்தைகள் சிறு வயதில் நம் நாட்டில் மரிப்பதுபோல் அவ்வளவு அதிகமாக மரிப்பதில்லை. குழந்தைகள் சிறு வயதில் இறப்பதற்குக் காரணத்தையும், அங்ஙனம் குழந்தைகள் இறவாமலிருக்க அனுசரிக்கவேண்டிய பாதுகாப்பு முறைகளையும் ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லி வருகின்றனர். இங்ஙனம் பிரசாரம் செய்து வருவதன் பயனாக, சிசுக்கள் மரண ஜாபிதாவில் எண்கள் குறைந்து வருகின்றனவாம்.

மேனாட்டில் தாய்மார்கள் குழந்தைகள் பிறப்பதன்முன், (Pre-natal) சுகாதாரபாதுகாப்பு முறைகளை அனுசரித்து வருகின்றனர். கர்ப்பிணிகள் எவ்விதமாய் தங்கள் வாழ்நாட்களையும், ஊண், உறக்கம், நடவடிக்கைகளையும் சுகாதார முறைகளுக் கொப்பஅமைத்து, அம்மாதிரி ஒழுகிவருகின்றார்களோ, அதற்கொப்ப அவர்களுக்குப் பிரஜைகளுண்டாகின்றன. இதைப்பற்றிய விஷயங்களைத் துண்டுப் பத்திரிகைகளில் பிரசுரித்து ஜனங்களுக்குப் பிரசாதித்தருளி வருகின்றனர். அநேக சமயங்களில், இவ்விஷயங்களை நன்றெடுத்துக் கர்ப்பிணிகளுக் குறைக்கும்படி சொல்ல அநேகம் செவிலித்தாய்களையும் (Nurses), மருத்துவச்சிகளையும் (Midwives) அரசாங்கத்தாரும் நியமித்திருக்கின்றனர். மேற்கூறிய செவிலித்தாய்களும், மருத்துவச்சிகளும் கர்ப்பிணிகள் வீட்டிற்குச் சென்று, இவ்விஷயங்களை எடுத்துரைத்து வருகின்றனர். மேலும் சில நகரங்களில், ஆரோக்கியவிஷயமாயும், குழந்தை சம்ரக்ஷணை சம்பந்தமாகவும் அநேக கண்காட்சிசாலைகள் ஏற்படுத்தப்பட்டு, ஜனங்கள் வந்து பார்த்து ஆனந்தித்து, நன்மை எய்துமாறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

குழந்தைகளுக்கு முக்கியமான ஆகாரம் பால். ஆதலால், பால் சுத்தமாயும் ஆரோக்கியமாயும் இருக்கவேண்டியதவசியம். இதற்காகச் சில நகரங்களில் பாலைப் பரிசோதிக்க நிலையங்களை ஸ்தாபித்து, ஜனங்களுக்கு முதல்தரமான பாலை விலைக்கும் இலவசமாகவும் கொடுத்து வருகின்றனர். உதாரணமாக, நியூயார்க்கில் குழந்தைகளின் ஆரோக்கிய அபிவிருத்தி மண்டலம் (Bureau of Child Hygiene) என்ற ஒரு சங்கம் உள்ளது. அதில் சுமார் 300 செவிலித் தாய்மார்களும், அநேகம் பல் வைத்தியர்களும், 187 பரிசோதனை வைத்தியர்களும், இரண்டு இரண வைத்தியர்களும், 58 உதவிச் செவிலித் தாய்மார்களும், மற்றும் நூற்றுக்கணக்கான பெண்களும் அதன் சார்பாக உழைத்து வருகின்றனர். இந்த மண்டலமானது குழந்தைகளின் க்ஷேம அபிவிருத்தியின் பொருட்டும், வைத்தியம் செய்வதற்கும், தாய்மார்களுக்குப் புத்திமதி சொல்வதற்கும், 58 கிளைநிலையங்களை ஸ்தாபித்து நன்மையைச் செய்து வருகின்றது. இம்மண்டலம் செய்துவந்த பிரசாரத்தின் பயனாக, ஒவ்வொரு வருஷமும், அந்நகரின் சிசுமரண எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்திருக்கிறதாம். உதாரணமாக, 1898-ம் வருஷம் ஆயிரத்துக்கு 200 குழந்தைகள் இறந்தனவாம். பிறகு 1910-ம் வருஷத்தில் அதே நகரத்தில் 125-ம், 1914-ல் 94·6-ம் ஆகக் குறைந்

தது எல்லாரும் கேட்டு ஆனந்திக்கவேண்டிய விஷயம்.

"முதலில் ஆரோக்கியம், பிறகு கல்வி" என்பது அமெரிக்கர்களின் கொள்கை. மிக பலமும் ஆரோக்கியமுமற்ற குழந்தைகளை, யந்திர சாலையை யொக்கும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதைக்காட்டிலும், கொடிய பாவம் வேறொன்றுமில்லை. ஒரு சிறுகுழந்தைக்குக் கண் திருஷ்டி குறைவாயிருந்தாலும் சரி, அல்லது காது செவிடாயிருந்தாலும் சரி, அவைகளைக் கவனித்து அவற்றிற்கேற்ற பரிஹாரம் செய்வது பள்ளிக்கூட அதிகாரிகளின் பொறுப்பு.

சாதாரணமாய் மேனாடுகளில், அதிலும் முக்கியமாய் அமெரிக்காவில், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், வருஷத்திற் கொருமுறை எல்லாக்குழந்தைகளின் தேகஸ்திதியைப் பரிசோதிக்க (annual medical examination) வைத்தியர்களை நியமித்திருக்கின்றனர். அங்ஙனம் பரிசோதித்த குழந்தைகளுக்கு, கண் திருஷ்டிக் குறைவு போன்ற குறைகள் ஏதேனுமிருப்பின், உடனே அக்குறையைப்பற்றி அக்குழந்தைகளின் பெற்றோர்க் கறிவித்து, அக்குறையை நீக்கும் வகையையும் சொல்லி, அதற்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்கின்றனர்.

உதாரணமாக, குழந்தைகளின் பலவிஷயத்தைப்பற்றிக் கவனிப்போம். குழந்தைகளுக்குப் பல்விழுந்து இரண்டாந்தடவை முளைக்கவேண்டுவது, அவர்களின் தேக சௌக்யத்திற்கு மிகவும் இன்றியமையாதது. இவ்விஷயத்தைக் கவனிக்க, அமெரிக்காவில் இலவசமாகப் பல் வைத்தியர்கள், குழந்தைகளுக்கு அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடங்கள் வாயிலாக, மருந்து கொடுத்து உதவி வருகின்றனர். இவையெல்லாம் செய்வதென்றால் அதிகப் பணம் செலவாகும். ஆனால் அமெரிக்காவில் வித்யா இலாகா அதிகாரிகள் சொல்வதென்ன வென்றால், குழந்தையின் தேக சௌக்கியத்திற்கே முக்கியமான பல் ஆரோக்கிய நிலைமையிலிருப்பதால், குழந்தைகள் கல்வி விஷயத்தில் அதிகத் திருப்தியான நிலைமையை அடைவதுடன், அவர்கள் படித்து வரும் காலத்தில் அவர்கள் நல்ல தேக சௌக்கியத்துடன் இருந்தால், பிற்காலத்தில் இவர்களுக்கு ஒரு விதமான வியாதியும் வரமாட்டாது' அவர்கள் அதன் நிமித்தமாக வைத்தியர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணமும் லாபமாகும். ஆகவே இதனால் தேசத்திற்கும் ஜனங்களுக்கும் நன்மையே தவிரக் கெடுதலில்லை என்பது வெளிப்படை.

அமெரிக்கா முதலிய தேசங்களில், பள்ளிக்கூடத்துக் சென்று வரும் குழந்தைகளின் தேகஸ்திதிக்குக் காரணர்களாயிருப்பவர்கள் செவிலித்தாய்மார்களே (Nurses). தேக பரிசோதனை நடக்கும்போதெல்லாம் பல விதத்திலும் குழந்தைகளுக்கு உதவி புரிந்து, சடுதியில் ஏற்படும் சில தேகபாதைகளுக்கு அப்போதைக்கு வேண்டிய பரிகாரங்களைச் செய்து வருகின்றனர். மேலும் அச்செவிலித்தாய்மார்கள், சில வேளைகளில் வைத்திய முறைப்படி வேண்டிய சிகிச்சைகளையும் செய்து வருகின்றனர். மேலும், இவர்கள் வீடு வீடாய்ச்சென்று தாய்மார்களுக்குச் சிசுசம்ரக்ஷணையைப் பற்றிய விஷயங்களையும் முறைகளையும், அவரவர் குடியிருக்கும் வீட்டையும், வீட்டைச் சுற்றியிருக்கும் இடத்தையும் சுத்தமாயும், ஆரோக்கியமாயும் வைத்துக்கொள்ளும் வழியையும், சொல்லி, செய்துகாட்டி உதவிபுரிந்து வருகின்றனர். இங்ஙனம் செவிலித்தாய்மார்கள் இல்லாத பள்ளிக்கூடங்களில், குழந்தைகளுக்குள்ள குறைகளைக் கவனித்து அவற்றைத் தீர்க்க முடிவதில்லையாம். செவிலித்தாய் இல்லாத பள்ளிக்கூடங்களில் நூற்றுக்கு 15 முதல் 25 வரை, பள்ளிக்கூடத்தாரின் சிபார்சின்பேரில் குழந்தைகளின் குறைகள் தீர்க்கப்படுகின்றனவாம். செவிலித்தாய்மார்கள் உள்ள பள்ளிக்கூடங்களிலோ



வெனின் நூற்றுக்கு 75 முதல் 90 வரை குழந்தைகளின் குறைகள் தீர்க்கப்படுகின்றனவாம்.

"ஒரு குழந்தையை நாம் பட்டினிபோட்டால் நாம் நம்மைப் படைத்த கடவுளையே பட்டினி போடுகிறோம்" என்று ஒரு பிரசித்த ஆங்கில ஆசிரியர் கூறுகிறார் எனினும், நம்மிந்திய நாட்டில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பட்டினியாய்ப் பள்ளிக்குச் செல்கின்றனர். நெடுங்காலம் போஷணையற்றிருப்பின், தேகவலிமை நிரந்தரமாய்க் கெட்டுப்போவதுடன், அவர்களின் புத்தியின் அபிவிருத்தியும், சூக்ஷ்மமும் சீக்கிரத்தில் கெட்டுப்போகின்றன. இதையறிந்தே, அமெரிக்காவில் அநேகம் பள்ளிக்கூடங்களில் தக்கபோஷணையற்ற குழந்தைகளுக்கு சிற்றுண்டி கொடுத்துதவுகின்றனர். நியூயார்க்கில் இம்மாதிரிப் பள்ளிக்கூடங்கள் 50 க்கு மேல் இருக்கின்றனவாம். பள்ளிக்கூடங்களிலேயே சமயலறைகளை ஏற்படுத்தி, நியமித்த வேளைக்குச் சிற்றுண்டி தயார் செய்து, குழந்தைகளுக்கு அளிக்கின்றனர். இவையெல்லாம் மிகவும் ஆரோக்கியமானவை. தேகத்திற்குப் புஷ்டியைத் தரக்கூடியவை; மிகவும் ருசியும் உள்ளவை. குழந்தைகள் இதைவிட வேறு எதை விரும்புவார்கள்? இவைபோன்ற சிற்றுண்டிகள் குழந்தைகளுக்கு மிகவும் இன்றியமையாதவை.

நம் நாட்டிலே நமது தாய்மார் குழந்தைகளுக்குச் சௌக்கியத்தைக் கொடுக்கும் உணவு இது என்று உணர்ந்து அதைக் கொடுப்பதில்லை. நினைத்த பொழுதெல்லாம் குழந்தையின் வாயில் எதையாவது அடைத்து அதன் அழுகையை நிறுத்தி அதன் வயிற்றை நிரப்பவேண்டியது தான் அவர்களின் முக்கிய நோக்கம். அது முற்றிலும் பிசகு. நியமித்த வேளையில் கிரமமாய் ஆகாரம் நம் குழந்தைகளுக்குக் கொடுத்து வரின், நாம் குழந்தைகளின் வருத்தங்களையும் வியாதியையும் குறைக்கலாம் என்பதில் ஐயமில்லை.

(தொடரும்.)

## சாரதாவின் நிருபம்.

(ஸ்ரீமதி பாகிரதி அம்மாள்)

பாரதகண்டம் முன்போல் உன்னத ஸ்திதியை அடைய வேண்டுமாயின் ஸ்திரீகளது கல்வி விர்த்தியாகவேண்டுமென எல்லோரும் ஒரு மனதுடன் சொல்லுகின்றார்கள். இப்பொழுது சிறு பெண்களுக்கும் ஸ்திரீகளுக்கும் அநேக ஸ்கூல்களும் கலாசாலைகளும் நாலா பக்கங்களிலும் ஏற்படுத்தி யிருப்பதால் இந்தியா கூடிய சீக்கிரத்தில் நல்ல ஸ்திதிக்கு வந்து விடுமெனக் கூறுவதும் வாஸ்தவமே. ஆயினும் [illegible]ல நாகரிகத்தை அனுசரித்துப் போதிக்[illegible]ம் ஸ்திரீகள் தமது தேசத்தை எவ்வாறு [illegible]த பதவிக்குக் கொண்டு வருவார்கள், எவ்விதமாய்த் தமது குழந்தைகளுக்குப் போதித்து நல்ல வழியைக் காட்டுவார்கள் என்பதை யோசித்துப் பார்ப்பது அவசியம். எனது சகோதரிகளுக்கு உபயோகமாகும் பொருட்டே இச்சிறு நிருபத்தைச் 'சிந்தாமணி' யிற் பிரசுரஞ் செய்யலானேன்.

எனது மித்திரனாகிய வாசுதேவன் தற்சமயம் சென்னை சட்ட கலாசாலையிற் படித்து வருகின்றான். இவனது மனைவியோ இப்பொழுது இவன் வீட்டில் அதாவது அவளது மாமனார் வீட்டில் கோயமுத்தூரிலிருந்து வருகின்றனள். எனது அன்பு மிக்க சகோதரி

சாரதா சென்னையில் ஒரு மிஷன் ஸ்கூலில் ஸ்கூல் பைனல் (School Final) வகுப்புவரை வாசித்து வந்தாள். கல்யாணமான பிறகும் தன் மனைவி பள்ளியிற் சேர்ந்து கல்வி பயில வேண்டுமென தற்கால சம்பிரதாயப்படி வாசுதேவன் ஆவலுற்றான். ஆனால் கர்னாடகமாகிய இவனது தந்தை இதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. வக்கீல் பரீக்ஷையிற் தேர்ந்து கொஞ்சம் வரும்படி கிடைக்கும்வரை தன் தந்தையுடன் இதைக் குறித்துச் சண்டையிட வாசுதேவனுக்குத் தைரியமுண்டாகவில்லை. ஆகவே சாரதா கல்வியை விடுத்துக் கோயமுத்தூரி லிருக்கும்படி நேர்ந்தது.

படித்திருக்கும் பெண்கள் தங்கள் துக்கத்தைப் போக்கடிக்க தற்கால நாகரிகத்தில் தங் கணவருக்குக் கடித மெழுதுவது ஓர் நல்ல உபாயமே. இக்கடிதங்களால் காளிதாசனது மேகதூதம், ஹம்ஸ சந்தேசம் அல்லது துஷ்யந்த சகுந்தலை முதலிய சரித்திரங்களிற் காணப்படும் நிருபங்களின் உண்மையான ஸ்வாரஸ்யம் இன்னதென்று எளிதில் தெரியவரும். அடியிற் காணப்படும் சாரதாவின் நிருபத்தையும் எனது சகோதரிகள் வாசிப்பது அத்யாவசியமே. சௌகரியப்பட்டால் மற்ற நிருபங்களையும் வரிசையாய் வெளியிட 'சிந்தாமணி' இடமளிப்பாளென நம்புகிறேன்.

கோயமுத்தூர்,
19-2-'24.

எனது பரமப்ரிய பிராண நாதா !

தாங்களனுப்பிய பேசரி சரியான சமயத்தில் வந்து சேர்ந்தது. நாளைக்கடுத்த நாள் பாலகிருஷ்ணய்யராத்து விசேஷத்திற்கு அணிந்து கொண்டுபோக உபயோகப்படும். அயலாத்து அலமேலு தன் பேசரியைப் பற்றிப் பிரமாதமாய்ப் பெருமை பேசிக்கொண்டிருந்தாள். ஆனால் என் பேசரியைப் பார்த்து அவளது முகம் உடனே இறங்கவே, எனக்குண்டான ஆனந்தத்தை உங்களிடம் எப்படிச் சொல்லுவேன்? உங்களை அச்சமயம் நான் எவ்விதமாய்ப் புகழ்ந்து கொண்டேன் தெரியுமா? ஆனால்—இந்தளவு—இன்னுங் கொஞ்சம் பெரிய வைரத்திற் பார்த்து வாங்கியிருக்கக்கூடாதா? யாருக்கு வேண்டியிருக்கு இந்த அற்ப நகைகளெல்லாம்! உங்கள் மேல் எனக்கு வந்த கோபத்தைப் பற்றிக் கேட்க வேண்டாம். கல்யாணம் நிச்சயமாவதற்கு முன் உங்கள் அப்பா உங்களைப் பற்றிப் பிரமாதமாய்ப் புகழ்ச்சி செய்தார். "வாசுதேவன் தன் பத்தினியைப் பூமாதிரி உயர்வாய் வைத்திருப்பான்" என்றார். ஆனால் இந்த பேசரியைப் பார்த்தது முதல் நானுங்களைக் கல்யாணம் செய்து கொள்ளாமலேயே யிருந்திருந்தால் நன்றாயிருந்திருக்குமென எனக்குத் தோன்றுகிறது. முத்து மாத்திரம் சுமாராயிருக்கிறது. என் மனதிற்கு இது கொஞ்சங்கூடப் பிடிக்காவிட்டாலும் அலமேலு முகம் மாத்திரம் இதுகண்டு தொங்கிப்போய்விட்டது. இதை வாங்கும் பொருட்டு சொற்ப கடன்பட நேர்ந்ததென எழுதியிருந்தீர்கள். ஆனால் நான் சொல்லுவது யாதெனில், தங்கள் மனைவிமார்களுக்கு இந்த அற்ப காரியத்தைச் செய்யத் தைரியமில்லாத புருஷர்கள் நமது தேசத்திற்கு என்ன செய்யப்போகின்றார்கள்? சேரிட்டி பிகின்ஸ் அட் ஹோம் (Charity begins at home) என்ற ஆங்கிலேய பழமொழி தங்கள் ஞாபகத்திலிருக்கும். ஆங்கிலேய அகமுடையான் தன் மனைவியின் சுகத்தைக் கருதி என்ன வேண்டுமாயினும் செய்வானென எனது உபாத்தியாயனி 'மிஸஸ் கார்டினர்' நிதமும் சொல்லுவார். ஆடவன் மனைவியை யல்லவோ முதலிற் சந்தோஷிப்பிக்க வேண்டும்! அதனால் கடன் பட்டாலென்ன? பின்னால் கொடுத்தாலாச்சு!



சரி—பட்டுப் புடவையைப் பற்றி என்ன? எனது பார்சி சிநேகிதி கட்டிக் கொண்டிருக்கும் சில்க் புடவை மாதிரி எனக்கும் ஆசையாயிருக்கிறது. விலை என்னவானாலுமாகட்டும். நாளை வக்கீல் பரீட்சை பாஸ் ஆனால் பணங் கூடைகூடையாய் வாரலாம். இப்பொழுது கடன் வாங்குவதாலென்ன? சென்னை ஹைகோர்ட்டிலேயே பிராக்டிஸ் செய்ய சந்நது வாங்கவும். உங்கள் தகப்பனார் சொல்படி இங்கு வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டாம். எனக்கு இந்த பாழும் கோயமுத்தூரிலிருக்கக் கொஞ்சங்கூடப் பிரியமேயில்லை. இங்கே நல்ல ரீடிங் ரூம் கிடையாது; சுற்றிவர பார்க்(Park) கிடையாது; உலாவிவர பீச் இல்லை; அரட்டை யடிக்கப் படித்த சிநேகிதர்களுமில்லை. டென்னிஸ் கோர்ட்டும் கிடையாது. உங்கள் கோயமுத்தூரிலிருக்கிற ஸ்திரீகளுக்குக் கல்வியின் மகிமை யென்னவெனத் தெரியவில்லை; அதில் அவர்களுக்கு இஷ்டமுமில்லை. சென்னையிலிருக்கும் எனது சிநேகிதிகளைப் பாருங்கள். நன்றாய் உண்டும், உடுத்தியும், ஒரு பூவிலிருந்து மற்றொரு பூவிற்குப் போய்க் கொண்டிருக்கும் வண்டைப்போல ஆநந்தமாகச் சுற்றிவருகின்றார்கள். பின்னால் நடப்பதைப் பற்றி அவர்களுக்கென்ன கவலை? தலையி லெழுதியிருக்கிறபடித்தான் நடக்குமாகையால் பின்னால் வரப்போகிறதைப்பற்றிக் கவலையேன் கொள்ளல் வேண்டும்?

சில்க் புடவையைத் தவிர எனக்கு இன்னுஞ் சில சாமான்களுந் தேவை. கடன் எப்படியும் வாங்கவேண்டி யிருப்பதால் ஒரேயடியாய் அதிகமாகவே வாங்கவும். நல்ல ஹேர் ஆயில் ஆறு பாட்டில்கள், விதம் விதமான செண்டு புட்டிகளிற் பன்னிரண்டு, முகத்திற்குப் போட வயலட் பவுடர்—இவைகளையும் அனுப்பவும். உங்கள் ஊரிலிருக்கும் ஸ்திரீகளுக்குக் கொஞ்சமேனும் நாசூக் என்பதே கிடையாது. இதை நான் சொல்லக்கூடாது. ஆனாலும் சொல்லாமலிருக்க முடியவில்லை. உங்கள் அம்மா என்னை நேற்று சமயலறையை மெழுகும்படி சொன்னாள். நான் கண்டிப்பாய் முடியாதென்று நேருக்குநேராய்ச் சொல்லி விட்டேன். சாணியிற் கையை வைத்தால் நாற்ற மடிக்காதோ? இன்னுஞ் சொல்ல வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. பெரிய நாத்தனார் இங்கே பரிவாரங்களுடன் பிறந்த அகத்திற்கு வந்திருக்கிறாள். அவ்வளவு குழந்தை குஞ்சுகளையு மழைத்தே வந்திருக்கிறாள். இரண்டு மூன்று குழந்தைகளை மாமனார் வீட்டில் விட்டுவரக் கூடாதா? ஆங்கிலேய ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளைக் கையாலுங்கூடத் தொடமாட்டார்கள். ஆகையால் அக்குழந்தைகள் சிறு பிராயமுதற்கொண்டே ஸ்வதந்தர மின்னதென அறிகின்றன. நமது தேசத்துக் குழந்தைகளைப் பாருங்கள். உங்கள் சகோதரியாகையால் நான் சொல்லக் கூடாதுதான்; ஆனாலுஞ் சொல்லுகிறேன். இவளுக்குச் சுத்தம் என்பதின் அர்த்த மென்னதென்றே தெரியவில்லை. நேற்றையதினம் தன் புடவையாற் குழந்தைகளின் மூக்கைத் துடைத்தாள். எல்லாப் புடவைகளும் ஒரே அசிங்கமாகத்தானிருக்கு. என்ன ஏழெட்டு ரூபாய்க்குள்ளாகத் தானிருக்கும். இதுவுமன்றி பெரிய கர்னாடகமாயிருக்கிறாள். நான் சென்ற ஞாயிற்றுக் கிழமையன்று அவளை, "இன்று மாலை நாடகமிருக்கிறது. நாம் போய் வரலாம்" என்றழைக்க "வீட்டு வேலையை விடுத்து நான் வரமாட்டேன். நீயும் போகவேண்டாம். நாடக மெல்லாம் இப்பொழுது வரவரப் பாழாய்ப் போய்விட்டன. குடும்ப ஸ்திரீகள் நாடகங்களுக்குப் போகலாமோ" என்றனள். என்ன பேச்சு வேண்டி

யிருக்கிறது? அஞ்ஞானமே ஸ்வரூபமாக வந்திருக்கிறது.

எப்பொழுது தாங்கள் இங்கே வருவதாக இருக்கிறது? இப்பொழுது கோயமுத்தூரில் ஒரு நிமிஷங்கூட இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. இந்த ஊர் பூக்காரனுக்கு சரங்கூடத் தொடுக்கத் தெரியவில்லை. மறுமுறை உங்களுடன் நானும் பட்டணத்திற்குக் கண்டிப்பாய் வரப்போகிறேன். நீங்கள் இங்கு வரும்பொழுது நானெழுதியுள்ள மற்ற சாமான்கள் எல்லாவற்றையும் வாங்கிவரவும். இல்லாவிடில் இங்கே வரவேண்டாம்.

தங்களது பிரேம நாயகி,

சாரதா.

# அகலிகை.

ஸ்ரீமான் எ. சொக்கலிங்கம் பிள்ளை.

(காபி ரைட்)

(160-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவ்வறம் இல்லறம் துறவறமென இருவகைத்தாம். அவற்றுள் இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் செல்லுகின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படும் அறமாம். துறவறமோ, இல்லறத்தில்வழுவாதொழுகி, அறிவுடையவராய்ப் பிறவாநெறிக்கு ஏதுவாய் வீடுபேற்றின் பொருட்டு அகப்பற்றுப் புறப்பற்று என்பவற்றை அறவே விட்டுத்துறந்தார்க்குரியதாய அறமாம். இல்லற ஒழுக்கத்திற்குரிய நடையில் தவறிலாதொழுகுகிறவர்க்கே, துறவறவொழுக்கத்திற்குரிய நடையில் தவறிலா தொழுகுதல் வாய்ப்பதாம். அவ்வாறு மனிதர், மனையறவொழுக்கத்தை மேற்கொள்ளாது, துறவறவொழுக்கத்தை மேற்கொள்வாராயின், அது முற்றுப்பெறுவது அரிதாம்; ஆகலின், மேன்மையடையும்படி நடக்கின்ற இல்லறவொழுக்கமானது, முறையுடன் செய்கின்ற அரிய தரும மார்க்க மெல்லாவற்றினும் சிறப்புடையதாம். கற்புடைய மனைவியோடு கூடி வாழும் இல்லொழுக்கத்தினர், ஒருவருக்குத் துன்பஞ்செய்யின் தமக்குத்துன்பம் வருமென வுணர்ந்து எல்லாப் பிராணிகளையுந் தங்கள் பிராணனைப்போல பாவித்துத் துன்பஞ் செய்யாதிருத்தல், மனத்தையும் ஐம்புலன்களையும் நன்மார்க்கமல்லாத தீயவழியில் மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம்பொறிவாயிலாகச் செல்லவிடாமல் அடக்குதல், எப்போதும் மெய்யையே பேசுதல், எவரிடத்துஞ் சீற்றங்கொள்ளாதிருத்தல், எவரிடத்தும் பகை பாராட்டாமை, எவரிடத்தும் வஞ்சக வார்த்தையாடாதிருத்தல், ஒருயிரையும் கொல்லாமை, ஒருவர் மனம் வருந்த உரையாமை முதலியன வழுவாதொழுகித் துறவறத்தை மேற்கொண்டாலல்லது, துறவறம் சித்திப்பது எவ்வாற்றானுங் கூடாதாம். இதனை,—

நற்றவம தாகுமிலறந்தனை நடாத்திச்
சுற்றமற நீங்கு துறவே துறவதம்மா
மற்றது புரிந்திடி னுனக்கு வலை வாரா
வற்றது மறுத்து ரையலானை நமதென்றான்

என்று ஆன்றோர் கூறியிருத்தலால் இல்லறமே நல்லறமாமென்றறிக.

அகலிகை:— சுவாமி! தேவரீர் கூறிய வெல்லாம் உண்மையேயாம். வாமதேவர், சுகர் முதலிய மகான்கள் இல்லொழுக்கத்தை மேற்கொள்ளாது துறவொழுக்கத்தை மேற்



கொண்டு தத்துவ ஞானிகளாக விளங்கினரென்று நூல்கள் கூறுகின்றனவே; அஃதெப்படி?

கௌதமர்:— அவர்கள், கடந்த பிறவிகளில் செய்யவேண்டிய நற்கருமங்களை யெல்லாஞ் செய்து முடித்து, ஏதோ ஒரு கருமத்தின் பயனால் பிறந்தவர்களாதலின், அவர்கள் இல்லொழுக்கத்தை மேற்கொள்ளாது துறவொழுக்கத்தையே மேற்கொண்டு முத்தராயினர். இதனை,

“தவமுந் தவ முடையார்க்காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள்வது”

என்ற பெரியார் திருவாக்கானும் நீ நன்குணர்வாய். இனி இல்லறத்திலொழுகுவார் முக்கியமாக மேற் கொள்வதற்குரியவற்றைக் கூறுகின்றேன்; கேட்பாயாக. அவர்கள் எப்போதுந் தெய்வ வழிபாடுசெய்தல், சோம்பலின்மை, பிறனில் விழையாமை, வடிவத்திலும் குலத்திலும் கல்வியிலும் செல்வத்திலும் குறைந்துள்ளவர்களைத் தாழ்வாகப் பேசாமை, பசியோடிருப்பவர்களை இரிற் புசியாமை, எல்லாவற்றின் மேலும் ஆசைகொள்ளாமை, ஒருவர்மேற் கோபங்கொண்டு புறங்கூறாமை, தற்புகழ்ச்சி செய்யாமை, வேதங்கள், வேதியர், தேவர், மன்னர், தவசிகள், மாதர்கள் இவர்களை நிந்தியாமை, அறிவிற் பெரியாரோடுகூடி வாழ்தல், நன் மொழியே கூறுதல், மனதிலெப்போதும் நற்கருமங்களையே சிந்தித்தல், சண்டையுண்டாக்குஞ் சூதாடுதலை யொழித்தல், விருந்தினரை யுபசரித்தல், ஆசாரியன், தாய் தந்தையர், மனைவி மக்கள், இரவும் பகலும் வழிபாடுசெய்வோர், அதிதி முதலிய இவர்களை அன்புமிகுந்து இனிதாகக் காத்தல், புலாலுண்ணாமை, அறிவைக்கெடுக்கும் ஆவேச நீர் முதலிய பொருள்களை அருந்தாமை, பிறர் தீங்குசெய்யினும் அதனைப் பொறுத்துக்கொள்ளல் முதலிய ஒழுக்கங்களில் வழுவாது ஒழுகுதல் வேண்டும். இத்தகைய ஒழுக்கங்களோடு இல்லறத்தில் வாழுநர் இம்மையிற் புகழும் மறுமையிற் சொர்க்கமும் எய்துவர்.

“இம்மையிற் சுகத்தையும் மறுமையில் சாஸ்வத புண்ணிய லோகத்தையும் எவன் விரும்புகின்றானோ அவன் அந்தக் கிருகஸ்தாஸ்ரமத்தை முயற்சியுடன் காப்பாற்றல் வேண்டும்; அஃது இந்திரியக்கட்டுப்பாடில்லாதவர்களால் காப்பாற்றுவதரிதாம்” எனவும்,

“இருடிகள், பிதுர்க்கள், தேவர்கள், பூதகணங்கள், அதிதிகள் இவர்களெல்லாரும் கிருகஸ்தனிடமிருந்து உதவியை எதிர்பார்க்கின்றார்கள்” எனவுந் தரும நூல் கூறுகின்றது.

‘துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புரவு நல்கி
யிறந்தவர்கள் காமுறு மிருங்கடனியற்றி
யறம்பலவு மாற்றி விருந்தோம்பு முறையல் [லால்,
பிறந்த நெறியாலுளதோர் பேருதவியாதோ”

என்று ஆன்ற அறிவுடையோருங் கூறுகின்றனர்; ஆதலால், அஹல்யா! இல்லறமே நல்லறமாமென்பதை யறிந்துகொள்வாய்.

அகலிகை:— சுவாமி! தேவரீருக்கு மிக்க சிரமங்கொடுத்தேன்; மன்னிக்கவும்.

கௌதமர்:— இல்லுக்கிசைந்த நல்லொழுக்கமுடையாளே! கணவனானவன் தன் மனைவிக்கு இல்லறதருமத்தையெடுத்துச்சொல்ல அவனுக்குக் கடமையாதலால், அதைப்பற்றி நான் பொதுவாகச் சிறிதுகூறினேன்; அஃதெனக்குச் சிரமமாகாது. இல்வாழ்க்கையுடைய பெண் தன் கணவன்பால் நடந்துகொள்ளவேண்டிய வொழுக்கங்களை

யான் உனக்குக்கூறுமுன்னரே, நீயவற்றைச் செவ்வனே தெரிந்திருக்கின்றாயென்று அறிந்துகொண்டேன்; அஃதெவ்வாறெனின், நாள்தோறும் யான் துயில் நீத்து எழுவதன் முன் "வைகறைத் துயிலெழு" என்றபடி நீ நித்திரை விட்டெழுந்து ஆச்சிரமத்திலுள்ள வேலைகளையெல்லாம் முடித்து விடுகின்றாய். யான் ஸ்நானத்திற்குக் கங்கைக்குச் சென்று திரும்பி வருமுன்னரே பூஜா பாத்திரங்களைச் சுத்தஞ்செய்து சித்தமாய் வைக்கின்றாய். ஓமாதிகட்கு வேண்டிய உபகரணங்களெல்லாம் என் முன்னிருக்கின்றன. எந்தெந்தப்பொருள்கள், எந்தெந்தப் பண்டங்கள் எங்கெங்கேயிருத்தல் வேண்டுமோ அங்கங்கே அவை ஒழுங்காய் வைக்கப்பட்டு, நமது ஆச்சிரமம் மிக்க அழகாகவும் விமரிசையாகவும் விளங்குகின்றது; அன்றியும், நமது ஆச்சிரமம் மற்ற ஆச்சிரமங்களுக்கு ஓர் உவமையாக விருக்கின்றது. பெண்களுக்குரிய மடம், அச்சம், நாணம், பயிர்ப்பு, என்னும் நாற்குணங்களாகிய வேலிக்கு நடுவிருந்தே நீ வளர்ந்து வருகின்றனை. "ஏவுமுன்னர்க் குறிப்பினியற்றுவார்" என்றபடி உனக்கு என்மீதிருக்கும் பதிபக்தியினாலும் அன்பினாலும் யான் எவ்வித பதார்த்தங்களை விரும்பி யுண்டு இன்புறுவேனோ அவ்வித பொரிக்கறி முதலிய பதார்த்தங்களையே நீ குறிப்பாக வுணர்ந்து உனது மலர்க்கரத்தாலேயேசமைத்துக் காலமறிந்து எனக்கு அறுசுவை பதார்த்தங்களோடு அன்னம்பாலிக்கின்றாய். நீ யுன் நடக்கையிலும் விவேகத்திலும் மேம்பட்டவள். என் மீதிருக்கும் உன் அன்பை எண்ணற்கும் புகழ்தற்கும் அளவிடற்கும் என்னாற் கூடாது.

அகலிகை:— "குலமகட்குத் தெய்வங் கொழுநனே" என்பது போலக் கற்புடைப் பெண்டிர் தங்கள் கணவரையே தெய்வமென்று பக்தியோடு வணங்குவார்கள்; அன்றியும், அவர்கள் தங்கள் கணவர் விரும்பிய செயல்களைச்செய்யும்படி அவர் கட்டளையிடுவதன் முன்னே குறிப்பாலுணர்ந்து அவற்றைச் செய்து முடிப்பார்கள். "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்று பெரியோர் கூறியிருக்கின்றாரன்றோ? அவ்வாறு நடந்துகொள்வது ஒவ்வொரு பெண்ணின் கடமையேயாம்.

கௌதமர்:— குணவதி! உனது மெல்லிய வடிவத்திற்கேற்ற பெயரும் அப்பெயரினுக்கேற்ற அழகும், அவ்வழகினுக்கேற்ற குணமும், அக்குணத்திற்கேற்ற ஒழுக்கமும் அமைந்திருக்கும் மேன்மையைக் கண்டு, என் மனம் மகிழ்ச்சியாற் பூரித்தது. அதனை யுனக்குக் கூறவேண்டிய நியதியில்லையாயினும், எனக்குண்டாய களிப்பின் மிகுதி அதனை யுரைக்கத் தூண்டுகின்றது.

அகலிகை:— அடிகளே! என்பால் அவ்வகைக் குண மேன்மை என்ன கண்டீர்கள்? அதனையுரைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

கௌதமர்:— சொல்லுகிறேன் கேள். நீ என் மீதுவைத்துள்ள காதல் மிகுதியால் பிறர் சமையல் செய்வதற்கு உடன்படாது, வற்றக்காய்ச்சிய கட்டித்தயிரைச் செங்காந்தள் முகைபோற் சிவந்த உன் மெல்லிய விரல்களால் நீயே பிசைந்தனை; யான் பசித்திருப்பேன் என்னும் அவசரத்தால் சமையல் விரைந்து செய்யும்போது உன் இடையிற் கட்டிய உயர்ந்த ஆடை சிறிது அவிழ்ந்து நெகிழ்ந்ததால், தயிரைப் பிசைந்தகையினைக் கழுவிவிட்டு உடுப்பதற்குத் தாமதமாகுமென்று, அக்கையுடனே அதனைக் கட்டிக் கொண்டனை. அங்ஙனம் பிசைந்து திருத்திய குழம்பினைத் தாளிக்கும்போது



மேலெழும் அத்தாளிப்புப் புகை குவளைப் பூப்போன்றமை தீட்டிய உன் கண்ணிற்படவும் முகத்தை அப்புறந்திருப்பினால் புளிக்குழம்பு பக்குவங்கெடுமென்று முகந்திரும்பாமல், அதனை விரைந்து துடுப்பினாலே துழாவினாய்; அங்ஙனம் உன் வருத்தத்தினையும் பாராமல் அன்போடு சமைத்த அக்குழம்பினை யான் அன்னத்தோடு கலந்து மிக உருசியாயிருக்கின்றதென்று மகிழ்ந்து சொல்லிக்கொண்டே உண்டேன். நீ அதனைப் பார்த்து உள்ளுக்குள்ளே நுட்பமாய் மகிழ்ச்சியடைந்ததை உன் மலர்முகங்காட்டியது. பிராணோபகாரி! இது போலும் நீ பல பண்டங்களைச் சேகரித்துச் செய்துவந்த அரிய சமையல் வேலையை யான் பலமுறையுங் கவனமாய்ப் பார்த்து என்மனதில் குறித்து வைத்திருக்கின்றேன். உனது பேரன்பினுக்கு யான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்? உன்னைப் பெற்று வளர்த்துஎனக்குக் கொடுத்த உன் தாய் தந்தையரைப் பலகாலும் பணிகின்றேன். உன்னையும் வாழ்த்துகின்றேன். நீ எல்லாச் செல்வங்களும் நிறைந்துள்ள சத்திய லோகத்தில், பிரமனார் மகளாகப் பிறந்து, எல்லா வேத நூல்களையுங் கற்றுணர்ந்து, மேம்பட்ட இடத்துப் பெண்ணாயிருந்தும், எல்லாச்சீருஞ் சிறப்பும் இச்சிறு குடிலுக்கு அளிக்கவல்ல இலக்குமி போல நுழைந்தும், நான் என்னும் உட்செருக்குங் கல்விச்செருக்கும், அழகில் மிகுந்தோமென்ற வீண் செருக்கு மில்லாது "அறிவோர்க்கழகு கற்றுணர்ந் தடங்கல்" என்னும் மூதுரையின்படி அடக்கம், பொறுமை, இன்சொல், கருணை முதலிய நற்குணங்களாற் பெருமை வாய்ந்து, இல்லொழுக்கத்திற்கேற்ற இல்லாளாயிருக்கின்றாய். என் தவப்பயனே நீ யொரு பெண்வடிவாகி எனக்கு வாய்த்திருக்கின்றாய். எனக்குக்குறைபாடொன்று மில்லை. அமிர்தவசனீ! நேரமாகின்றது. இன்றைய சம்பாஷணையை இவ்வளவில் நிறுத்துவோமாக.

(இன்னும் வரும்.)

# பர்வத குமாரி.

[டாக்டர் அவிநாச சந்திரதாஸ், எம். ஏ. அவர்கள் வங்க மொழியில் இயற்றிய 'நாவலி'ன் தமிழ் மொழி பெயர்ப்பு.]

மொழிபெயர்ப் பாசிரியன்: மஹேச குமாரா சர்மா.

(எல்லா உரிமைகளும் ஆசிரியனதே)

## முதற் பாகம்.

### முதல் அத்தியாயம்.

**வ**ங்காள தேசத்தின் மேற்குதிசையில் ஒரு மலைப்பிரதேசம் இருக்கிறது. அதன் காற்றும் நீரும் தேகாரோக்கியத்துக்கு மிகச் சிறந்ததென்று பிரசித்தம்; இயற்கை வனப்பும் மிகவும் ரமணீயமானது. பர்வதம், சாரல், மேடும் பள்ளமுமான நிலங்கள், சிற்றாறுகள், வனம், உபவனம், ஸந்தாலர் முதலிய காட்டில் வாழும் பூர்வ குடிகள், அவர்களின் குடிசைகள்—இவைகளெல்லாம் அந்தப் பிரதேசத்தின் விசேஷக் காட்சிகளாம். கல்கத்தாவைப் போன்ற ஜனக்கூட்டம் நிறைந்த கோலாஹலமயமான பெரும் பட்டணத்தை விட்டுத் திடீரென்று இந்தப் பிரதேசத்திற்கு வந்து பார்த்தால், அது ஏதோ இந்திரஜாலத்தால் தோன்றிய அபூர்வ ராஜ்யம் போலும், அதன் காட்சி

கள் மனக்கற்பனையினால் அமைத்த தோற்றம் போலவும் புலப்படும். பெரிய பெரிய உந்நதமான மாளிகைகளும், திரளான ஜனக்கூட்டங்களின் கோலாஹலமும் நிறைந்த கல்கத்தா நகரத்தின் இராஜ மார்க்கங்களெங்கே, நிர்ஜனமான அகன்ற மைதானங்களோடும், நாற்புறமும் சூழ்ந்துள்ள வனத்தோடும், ஆகாயத்தை அளாவிய பர்வதத்தோடும், குயில் கூவும் சாந்தமான சோலைகளோடும் கூடி விளங்கும் இந்தப் பிரதேசமெங்கே! இது சொப்பனக் காட்சியோ, சுவர்க்க பூமியோ, சாந்தி தேவியின் களியாட்டிடமோ, அல்லது பவித்திரத் தன்மையின் பள்ளியறையோ, யாதோ ஒன்றுமே தெரியவில்லை! இங்கே வாழும் கள்ளங்கவடற்ற பூர்வ குடிகள் சந்துஷ்டியின் சாக்ஷாத் அவதாரவடிவமாய் விளங்குகிறார்கள். அவர்களிடத்தே துவேஷமில்லை. கபடமில்லை, அவிசுவாசமில்லை, பாவத்தின் விஷஜ்வாலையுமில்லை. இதோ பாருங்கள், அவர்களின் மாதர்கள் பூங்கொத்துக்களால் சிங்காரித்துக்கொண்டு காட்டினின்று வெளியே வந்து சஞ்சரிக்கிறார்கள். அவர்களின் இனிய குரலோசையும் இன்ப நகையும் எத்திசையும் பரவி எதிரொலி செய்யா நிற்கின்றன. அவர்களைப் பார்த்தால், சாக்ஷாத் ரிஷிகன்னிகைகளோ அல்லது சுந்தரத்தன்மையின் பவித்திர சுவரூபங்களோ என்று கருதவேண்டியிருக்கிறது. இவ்விடத்தில் இயற்கை பிராட்டியார் என்ன மனோகரமான பொலிவுடன் விளங்குகின்றாள் பாருங்கள். இவ்வரிய புண்ணிய வடிவத்தைத் தரிசனம் செய்தவளவில் உலகத்தின் வீண் பகட்டெல்லாம் மறந்துபோய் விடுகின்றது; நமது போலி நாகரிகத்தில் அவமதிப்பு உண்டாகின்றது; நெடு நாள் பழக்கமான குறுகிய கொள்கைகளின் எல்லையைக் கடந்து செல்ல மனம் துணிகின்றது; இருதயம் விசாலமாகி உலகமெங்கும் வியாபிக்கின்றது; ஆத்மாவின் ஆழமான உள்ளுணர்வினின்று இதற்கு முன் என்றும் கேட்டிராத ஒரு சுவர்க்கலோகத் தொனி எழத் தொடங்குகின்றது. நண்பரே, நீர் எப்போதாகிலும் தாய் மடியில் அமர்ந்த குழந்தையின் ஆநந்தத்தையும் உல்லாசத்தையுங் கண்டிருக்கிறீரா? பிரகிருதி மாதாவின் இந்த பவித்திரமான மடியில் உட்காருகையிலும், உள்ளத்தின்கண் அதே விதமான ஆநந்தமும் உல்லாசமும் உண்டாகின்றன. அந்தோ! இத்தகைய தூய்மை பொருந்திய ஆநந்தத்தை நாம் நெஞ்சார வீணே இழந்து உழல்கின்றோமே!

பூதத்துவமுணர்ந்த பண்டிதர்கள் நிச்சயித்துள்ள சித்தாந்தத்தின்படி மிகப் பண்டைக் காலத்திலே, அதாவது இலக்ஷம் ஆண்டுகளுக்கு முன், இப்பொழுது காணப்படும் வங்கபூமி இம்மைப்பொருளாயிருந்ததாம். எங்கே இக்காலத்தில் செழிப்பான பூமிகளும், பசுமையான வயல்களும், கோலாகலம் நிறைந்த நகரங்களும் விளங்குகின்றனவோ, அங்கே அக்காலத்தில், கரையில்லாக் கடல் அலைவீசி ஆர்த்துக் கொண்டிருந்தது. இதன் வடவெல்லையில் இமாலய மலையும், கிழக்கு மேற்கெல்லைகளில் நீண்ட மலைத்தொடர்ச்சிகளும் இருந்தன. மேற்குப் பக்கத்தில் முன் பர்வதமயமான பிரதேசம் இருந்த இடத்திலே இப்போது வீரபூமி (பீர்பூம்), சோட்டா நாகபூர், உத்கலம் (உடிஸ்ஸா) முதலிய பிராந்தங்கள் நிலைத்திருக்கின்றன. நினைவுக்கெட்டாத ஏதோ ஒரு பூர்வ யுகத்தில் இந்தப் பிரதேசத்தின் மலைத்தொடர்ச்சிகளின் மேல் கடலின் உயரமான அலைகள் மும்முரமாய் மோதி நுரைத்திரளை உமிழ்ந்துகொண்டிருக்கும்; அல்லது கடலினின்றெழும் பயங்கரமான புயற்காற்றின் கொடுமையினால் இந்தப் பிரதேசத்துப் பர்வதங்கள் சிகரங்களோடு கூட நடுங்கிக்கொண்டும், நீர் வாழ்வனவும் நிலத்தில் சஞ்சரிப்பனவுமான எண்ணிறந்த பறவைகளின் கோரமான கூவுதலினால் அநவரதமும் சத்தமயமாய்



விளங்கிக்கொண்டுமிருக்கும். இப்பொழுதோ அந்தக்கடலுமில்லை, அந்தப் பயங்கரமான பேரலைகளுமில்லை, அந்தப் புயற்காற்றுமில்லை, அந்தப் பறவைகளுமில்லை, அவற்றின் கோரமான கூவுதலுமில்லை. இக்காலத்தில் கடல் அடங்கி அமைதியுற்றிருக்கிறது. மலைத்தொடர்களும் கடலுடன் நிகழ்த்திய போரில் அதை வென்று தூரத்தில்—வெகுதூரத்தில்—ஒதுக்கிவிட்டு, இனி வருங்காலத்தில் உற்பவிக்கப் போகின்ற மனிதர்களின் உபகாரார்த்தம் போலும் தம் சரீரத்தின் இரத்த மாம்சங்களைக் கொண்டு தற்காலத்து வங்கபூமியை உண்டாக்கிக் கடலின் பெயரை அடையாளங்கூட வில்லாது துடைத்து விட்டன.

இந்த சாந்தமும் ரமணீயமுமான பிரதேசத்திலே சிறியவையும் பெரியவையுமான எண்ணிறந்த பர்வதங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒரு பர்வதம் தன் நீட்சியாலும், கம்பீரத்தன்மையினாலும், உயர்ச்சியினாலும் எல்லோரின் உள்ளங்களையும் தன்பால் கவரா நின்றது. தூரத்தினின்று பார்த்தால், இப்பர்வதம் கரிய மேக மாலையை நிகர்த்து விளங்கும். மாரிகாலத்தில் வெண் மேகங்கள் இதன் சிகரத்தைக் கவிந்து கொண்டிருக்கும் காட்சியைத் தூரத்திலிருந்து கண்ணுற்றால், இமாலயத்தின் பனிமுடிய ஒரு பாகம்போலத் தோற்றும். இம்மலையின் நீளம் ஏறக்குறைய ஏழு மைல்; அகலம் இரண்டு மைல். மலை முழுவதும் அடிமுதல் உச்சிவரையில் அடர்ந்த வனமயமாய் இருக்கின்றது. இதில் இங்குமங்கும் அநேக குகைகளும், கந்தரங்களும், சுனைகளும், கொடிகளாலும் புதர்களாலும் கவியப்பெற்ற ஆழ்ந்த நீர் வாய்க்கால்களும் காணப்படுகின்றன. இதில் அநேக இடங்களில் மேலே ஏறிச்செல்வது மிகக் கஷ்ட சாத்தியம். சிற்சில ஸ்தானங்களில் மிகவும் ரமணீயமான குகைகள் காணப்படுகின்றன. ஜனங்கள் அவற்றை ரிஷி குகைகளென்று கூறுகிறார்கள்; ஆனால் இக்காலத்தில் அவற்றில் ஒரு ரிஷியாவது தவசியாவது வசிப்பதில்லை. மலையின் உச்சியில் சுசியான சிறிய சமதரைப்பூமியும் நிர்மலமான நன்னீர்த் தடாகமொன்றும் இருக்கின்றன. இத்தடாகம் மலர்ந்த தாமரைப்பூக்களால் சோபையுற்று நீர்வாழ் பறவைகளின் நீங்குரலால் சப்திக்கப்பெற்று விளங்குகின்றது. மலையின் மேலுள்ள காட்டில் பன்றி, புலி, கரடி, சிறுத்தை, மான், குரங்கு முதலிய நாநாவிதமான விலங்குகள் சஞ்சரிக்கின்றன. புலி, சிறுத்தை முதலிய துஷ்ட மிருகங்கள் இரை தேடும் பொருட்டுச் சிற்சில சமயங்களில் மலையின் கீழே இறங்கி வருகின்றன; குரங்குகளோ தங்கள் உபத்திரவமற்ற உலாவிடங்களாகிய கதலி வனங்களைவிட்டு ஒருகாலும் வெளியே செல்வதில்லை.

இந்த மலைக்குக் குமாரி பர்வதம் என்று பெயர். இந்தக் குமாரி என்னும் பெயர் இதற்கு ஏன் வந்ததென்று முதலில் நாம் எவ்வளவு யோசித்துப்பார்த்தும் அறியமுடியவில்லை. ஆனால் ஒரு நாள் நாம் இம்மலையின் பக்கமாய் உலாவிக்கொண்டிருக்கையில், அதன் வடிவம் ஒரு விசாலகாத்திரமுள்ள கும்பீர (முதலை) த்துக்குச் சமானமாய் இருப்பதைக்கண்டு பெரிதும் வியப்புற்றோம். கும்பீரத்தின் துதிக்கை வடிவமான அந்த முகம், தட்டையான அந்தத் தலை, சிறிது கீழே தொங்கிய அந்தப் புஜங்கள், உயர்ந்தும் நீண்டுமுள்ள அந்த முதுகெலும்பு, முட்களோடு கூடி நீண்டும் அகன்றுமுள்ள அந்த வால், அந்தச் சின்னஞ்சிறிய கால்கள்—இவ்வாறு அதன் சரீர முழுதும் இந்தப் பர்வதத்தின் ஆகிருதிக்குச் சமானமாயிருப்பதாகத் தோன்றியது. இதைக் கண்டு யாம் இவ்வாறு கருதலாயினோம்:—

நினைவுக்கெட்டாத ஏதோ ஒரு பூர்வ யுகத்தில் ஏதோ ஒரு விசால காத்திரமுள்ள கும்பீரம் கடலின் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டு திடீரென ஜடரூபமாய்ப் பரிணமித்து விட்டிருக்கவேண்டு மென்றும், பிறகு ஒரு ஆரிய ரிஷி இந்தக்கடற்கரையிலுள்ள பர்வதத்தின் மேல் தவம் புரியும் பொருட்டு வந்து, இதன் ஆகிருதியும் உருவமும் கும்பீரத்துக்குச் சமானமாயிருப்பதைக் கண்டு இதற்குக் கும்பீர மென்று அவசியம் பெயரிட்டிருக்கவேண்டு மென்றும் நினைத்தோம். இந்தக் "கும்பீர பர்வதம்" என்னும் தொடர்மொழியே நாளாவில் ஜனங்களின் உச்சாரண தோஷத்தினால், சிறிது சிறிதாய்க்கெட்டு "குமாரி பர்வதம்" என்று மருவிவிட்டதென்பதில் ஆச்சரியமில்லை. இல்லாவிடில், இவ்வளவு கடினமும் பயங்கரமும் கரடுமுரடுமான மலைக்குக் 'குமாரி' என்னும் சுகுமாரமான பெயர் எவ்வாறு ஏற்பட்டிருக்கக்கூடும்?

அஃதெவ்வாறாயினும், இப்பர்வதம் தன் இயற்கை வனப்பின் பொலிவினால் மிகமனோகரமாய்த் திகழ்கின்றது. இதன் பாரிசத்தில் அமைந்துள்ள பிரதேசத்திலே பூர்வ குடிகளின் மிகப் பெரிய கிராமங்கள் இருக்கின்றன. இவர்களை நாம் அனைவரும் அநாகரிகரென்றும் அநாரிய ரென்றும் கூறுகின்றோம். ஆனால் உள்ளபடியே இவர்கள் அநாரிய ரென்னும் பெயருக்கு உரியவர்களா அல்லவா வென்பது ஆராயத்தக்க விஷயம். ஆரியரென்னும் பெயர் பூண்ட பலர் வம்சக்கிரமமாய் இந்தப் பிரதேசத்திலே சிற்சில கிராமங்களில் வசித்துக்கொண்டு, கபடமற்ற இந்தப்பூர்வ குடிகளின் மேல் ஆதிபத்தியம் செலுத்தி வருகின்றார்கள். ஆனால் இவர்களுக்குள் பெரும்பான்மையோர் அநாரியரினும் இழிந்தவர்களென்று நினைக்கத்தக்க விதமாய் நடந்து கொள்ளுகிறார்களென்பதைக் குறிப்பிட எமக்கு வெட்கமாயிருக்கிறது.

பர்வதத்தின் அடிவாரத்தில் கல்லாற்கட்டிய ஓர் அழகிய மாளிகை விளங்குகின்றது. இந்தப் பிரதேசத்தின் ஜமீன்தார் கல்கத்தாவாசியாகிய ஓர் சற்புருஷன். முன்னே அவர் குடும்பசகிதமாய் இந்த மாளிகையில் வசித்து வந்தார்; இப்பொழுதோ அவரும் அவர் பத்தினியும் பரகதி யடைந்துவிட்டனர். அவர்களின் வம்சத்தில் இப்பொழுது ஒரே புத்திரனும் ஒரே கன்னிகையுந்தான் இருக்கின்றனர். இந்தத் தமையன் தங்கை இருவரும் கல்கத்தாவில் வாசம் செய்து கொண்டு கல்விகற்று வருகிறார்கள்; கலாசாலை விடுமுறைக்காக மூடப்படும் பொழுது அவகாசமிருந்தால், அவர்கள் சில சமயம் இங்கே வந்து வசிப்பதுண்டு.

(தொடரும்.)

# சுவர்க்கவாசினீ ஸ்ரீமதி ரமாபாய் ரானடே.

(152-ம் பக்கத் தொடர்ச்சி.)

கோபால ராவ் சேவாசதன சங்கம் மேல் மேலும் விருத்தி அடையும் பொருட்டு அநேக இடங்களில் சென்று இதன் நோக்கங்களைப்பற்றி நன்றாய் எடுத்துரைத்தும், அனைவரும் சேர்ந்து உழைக்குமாறு பிரசாரம் செய்தும் வந்தார். மேலும், அங்குள்ள கனவான்களிடம் சென்று அதன் அபிவிருத்திக்காக அவர்களிடமிருந்து ஆயிரக்கணக்காக திரவிய உதவிபெற்று அச்சங்கத்தை அபிவிருத்தி செய்தார். ரமாபாயோ வென்றால் அச்சங்கத்தின் உள்ளும் புறமும் நன்றாய் ஆராய்ந்து பார்த்து ஒவ்வொரு காரியத்தையும்



யோசித்து மிக சிரத்தையுடன் அதன் காரியங்களைச் செய்து வந்தார். அங்குக் கல்வி பயிலும் வித்தியார்த்தினிகளைத் தன்னுடைய அருமை புத்திரிகள்போல் மிகுந்த அன்புடன் கவனித்து வந்தார்.

அனைவருடைய வேண்டுகோளுக்கிணங்க 1919 வருஷத்தில் பம்பாய் கவர்னராயிருந்த மேன்மை தங்கிய ஸர் ஜார்ஜி லாயட் அவர்கள் இச்சேவாசதன சங்கத்தைப் பார்வையிட்டிருக்கின்றனர்.

ரமாபாய் இச்சேவாசதனத்தைப்பற்றி தம் நண்பர்களுடன் உரையாடும்பொழுது "நான் மிகுந்த பொறுப்புடன் வேலை செய்யவேண்டியிருக்கிறது. இதில் பயின்று வரும் பெண்மக்களும் அவர்களுடைய பெற்றோர்களும் என்மீது பூரண நம்பிக்கை வைத்து இருக்கின்றனர். அவற்றைக் காப்பாற்ற நான் கடமைப்பட்டவளாய் இருக்கிறேன்" என்று கூறுவார்.

ரமாபாயிக்கு வெறும் புஸ்தகத்தைப் படித்துக்கொண்டு போவதில் நம்பிக்கை இல்லை. அவர் படித்த பிறகு அவற்றிலுள்ள தர்மம், சீலம், நற்குணம் முதலிய நன்னடைக்கைகளைச் செய்கையில் செய்து நிரூபித்துக்காட்டவேண்டுமென்ற சிறந்த சித்தாந்த முடையவர். மேல்நாட்டு நாகரிகப்படி தற்காலம் ஆடவரும் பெண்டிரும் ஒருங்கே ஒரேகலாசாலையில் பயின்று வருவதினால் ஏற்படும் விபரீதங்கள் ஒருபுறமிருக்க அத்தகைய கல்வியினால் நம் தேயத்து சகோதரிமார்களின் முன்னேற்றத்துக்கு யாதொரு விதமான வழியும் இல்லை என்பதை நன்கு அறிந்து எத்தகைய கல்வியானது ஸ்திரீகளை நல்வழிப் படுத்தி நற்குண நற்செய்கைகளில் ஈடுபடும்படி செய்கின்றதோ அத்தகைய கல்வியை வித்தியார்த்தினிகளுக்குப் போதித்து வருமாறு திட்டம் செய்திருந்தார்.

அவ்வித்தியார்த்தினிகள் தங்களுக்கென ஏற்பட்டிருக்கும் பரீக்ஷைகள் அனைவற்றிலும் தேற வேண்டுமென்பது அவரது முக்கிய நோக்கமல்ல. ஆனால் அங்கு அவர்கள் நல்ல குணசாலிகளாகவும், ஈசுவர பக்தியுடையவர்களாகவும், தங்கள் சக்திக்குத் தகுந்தவாறு தேசத்தொண்டு புரியவேண்டுமென்பதும் அன்னாருடைய முக்கிய நோக்கமாகும்.

அவர் எல்லாக் காரியங்களையும் முடித்துக்கொண்டு படுக்கைக்குப் போவார். பிறகு தூக்கம் வரும்வரையில் பகவானை துதிசெய்வார். அவர் சமயத்திற்கேற்றவாறு தன் அபிப்பிராயத்தைச் சரிப்படுத்திக்கொண்டு காரியத்தைச் சாதித்துக் கொண்டுபோகும் திறமையுடையவர். அச்சங்கம் உன்னத தசையையடைய அடைய அவருக்கு விசேஷபொறுப்பும் மிகுந்த வேலையும் ஏற்பட்டுவிட்டது. அவையனைத்தையும் சிறிதும் லக்ஷியம் செய்யாது திறமையுடனும் உற்சாகத்துடனும் உழைத்து வந்தார்.

அன்றியும் அவர் சிறைச்சாலை பார்வையிடும் உத்தியோகஸ்தர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைதோறும் எரவாடா சிறைச்சாலையை பார்வையிடச் செல்வார். அவ்விடத்தில் அரசாங்கத்தாரால் சிக்ஷிக்கப்பட்டுக்கிடக்கும் நாகரிகமற்ற ஏழை ஸ்திரீகளின் நிலைமையைக்கண்டு கண்ணீர் வடிப்பார். பிறகு அவர்களுக்குச் சிறந்த புத்திமதிகளைப் புகட்டுவார். மேலும் அவர்களுடைய மடமைத்தனத்தைப் போக்கடித்து ஞானம் ஊட்டிக்கொண்டும், ஆண்டவனுடைய முன்னிலையில் அனைவரும் சமம்தான் என்கிற சூத்திரத்தை நன்குணர்ந்தவராகையால் அஞ்ஞானக் கடலில் மூழ்கி பலவித கஷ்டங்களுக்காளாகி இருக்கும் அப்பெண்டிர்களுக்

குத் தன்னால் இயன்ற உதவிபுரிந்தும், அவர்களை ச்சன்மார்க்கத்தில் திருப்புவது தன்னுடைய கடமையென நினைத்தும் வந்தார். கடைசியாக பூனாவில் கூடிய "நேஷனல் லிபரல் பெடரேஷன்" (National Federation of India) என்னும் தேசீய சபை யொன்றில் சட்டசபைகளுக்குப் பெண்களைத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவர மிகப் பிரயத்னப்பட்டார்.

மேலும் அக்காலத்திய கல்வி அபிவிருத்தி இலாகாவில் வர்னகுலர் டெக்ஸ்டு புக் கமிடியின் (Vernacular Text-Book Committee) அங்கத்தினராக விருந்து வேலையை மிகுந்த திறமையுடன் செய்து வந்தார். அக்காலத்திய வித்வான்கள் அநேக புஸ்தகங்களை அச்சிட்டு வெளிப்படுத்தி அவ்வறிஞர்கள் ரமாபாயின் அபிப்பிராயத்தை நாடுவார்கள். அவர்களால் அனுப்பப்பட்ட புஸ்தகங்களை நன்குய்ப் படித்து அலசிப் பார்த்துவிட்டு பாரபக்ஷமன்னியில் புஸ்தகத்தின் போக்கை கவனித்து அதற்குத் தகுந்தவாறு தன் அபிப்பிராயத்தை எழுதி ரமாபாயி அவர்களை உற்சாகப்படுத்தி விடுவார்.

ரமாபாய் அவர்கள் கி. பி. 1910-ம் வருஷத்தில் "தமது ஆயுளின் நினைவு" என்கிற ஓர் அரிய புத்தகத்தை மகாராஷ்டிர பாஷையில் எழுதி வெளியிட்டிருக்கிறார். அவர் அதை எழுதி முடிப்பதற்கு சுமார் ஒன்றரை வருஷகாலம் ஆயிற்று. அது ஸாஹித்திய உலகத்திற்கு இன்றியமையாத புஸ்தகமாய் இருந்து வருகிறது. அப்புத்தகத்தை எழுதிவரும் தருவாயில் அவருடைய அபிமானப்பெண்ணாகிய "சக்கூபாய்" என்பவர் மிகுந்த பிரயாசப்பட்டு அவருடன் கூடஇருந்து எழுதி முடித்தார். ஆனால் அப்புத்தகம் அச்சிடப்பட்டு வெளிவரும் தருவாயில் திடீரென அச்சக்கூபாய் காலகதி அடைந்து விட்டார். ரமாபாயி அவர்கள் தன் பெண்ணாகிய சக்கூபாயின்மீது வைத்த அன்பின் மிகுதியால் அப்புத்தகத்தை அவருடைய ஞாபகார்த்தத்திற்காக சக்குபாய்க்குச் சமர்ப்பித்தனர். பெரும் தேசாபிமான சிங்கமாகிய 'கோபால கிருஷ்ண கோகலே' அவர்கள் அப்புத்தகத்திற்கு முகவுரை எழுதியிருக்கின்றார். மேலும் அப்புத்தகத்தில் தன் கணவனார் செய்துள்ள அரியவேலைகளைப்பற்றி விஸ்தரித்திருக்கின்றார். "ஸர்தின் ஷா வாச்சா" வினால் எழுதப்பட்ட ஒரு முகவுரையில் அவர் கூறுவதாவது "புருஷனுடைய காரியத்தை முகக்குறியினால் அறிந்துகொண்டு தொண்டு செய்பவளும் புருஷனுடைய விருப்பப்படி நடப்பவளுமே உண்மையான பத்தினியாவள். அவ்வாறே நமது ரமாபாய் நடந்து வந்தது மன்றித் தன் கணவனார் இறந்த பின்னரும் உலக அஞ்ஞானக் கடலில் கடந்து ழலாமல் அவரால் அரைகுறையாய் விட்டு வைத்திருந்த காரியத்தை உடனே மேற்போட்டுக்கொண்டு தன் கணவனுடைய உண்மையான மன நிலையை அறிந்து அதன்படி நடந்து வந்திருக்கின்றார்" என்று குறிப்பிட்டுள்ளார். முற்கூறியவாறு ரமாபாயி எழுதுகிறவேலையில் எவ்வளவு நிபுணரெனப் பெயர் படைத்திருந்தனரோ அம்மாதிரியே வியாக்யான கிளையிலும் நல்ல வல்லமையுடையவரென அனைவராலும் மதிக்கப் பெற்றுவந்தார்.

அவர் ஆயிரக்கணக்கான படித்தவர்களுடைய முன்னிலையில் பிரசங்கம் புரிவார். படித்தவர்களும் பாமரர்களும் அதைக்கேட்டு மெச்சுவார்கள். தான் வாசாமகோசரமாய் பிரசங்கஞ் செய்துகொண்டு வரும் பொழுது உபன்னியாசத்தைக் கேட்க வந்தவர்கள் இருக்குமிடத்தை விட்டுச் சற்றும் அகலாமல் பொறுமையுடன் கேட்டுக்கொண்டு இருக்கு



மாறு செய்து விடுவார். அனைவரும் மெச்சும்படி பிரசங்கம் புரிவது மிகக் கஷ்டமான காரியம். ஆனால் ரமாபாய், பலதரப்பட்ட அபிப்பிராயமுடையவர்களுடைய மனதையும் தன் வாக்சாதுர்யத்தால் சரிப்படுத்திக் கொண்டு சமயத்தில் அனைவரையும் திகைக்கும்படி செய்யும் சாமர்த்தியமுடையவர். தவிர அவரிடம் தன்னுடைய அபிப்பிராயங்களை ஜனங்களுடைய மனதில் படும்படி எளிய நடையில் புகட்டி அவர்களுடைய மனதைத் தன் வசப்படுத்திக்கொள்ளும் சாமர்த்திய முமுண்டு. அவர் டம்பங்களில் மிகுந்த வெறுப்புள்ளவர்.

## தினசரிவேலை.

இவர் தன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சேவாசதனத்திற்குச் சென்று அவ் வேலைகளைசரிவரக்கவனித்துவிட்டு மத்தியானம் வீட்டிற்கு வந்து ஸ்னானபானங்களை முடித்துத் தன்னுடைய பர்த்தாவின் உருவப் படத்திற்கு முன்னிலையில் ராமாயணம், பாகவதம், கீதை முதலிய புத்தகங்களை வைத்துக்கொண்டு பாராயணம் செய்துவிட்டுப் பிறகு சேவாசதனத்திற்கு மறுபடியும் சென்று மற்றக் காரியங்களையும் முடித்துக்கொண்டு மாலைப்பொழுதில் வெளியில் உலாவிவிட்டு, பின்னர் உலக நடவடிக்கைகளைக் கவனிப்பதும் பத்திரிகைகளைப் பார்ப்பதும் உலக விஷயமாகத் தர்க்கிப்பதிலும் காலத்தை செலவழிப்பார். பிறகு இரவு போஜனத்தை முடித்துக்கொண்டு படுக்கைக்குச் செல்லுவார். தூக்கம் வரும்வரையில் பகவானை தியானம்செய்துவிட்டு உறங்குவார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃது தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்று திருவள்ளுவ நாயனார் கூறியபடி, சகோதரிகளே! ரமாபாயின் புத்திகூர்மையும், ஞாபக சக்தியையும், பதிபக்தியும், வாக்சாதுர்யத்தையும், இந்திய ஸ்திரீ ரத்தினங்கள் உலகின் கண் முன்னேற்ற மடையவேண்டுமென்ற பேரவாவையும் படைத்திருந்த அன்னை பாரததேவியின் புத்திரிகளாகிய நாம் அனைவரும் எந்நாளும் மறவாமலிருக்கக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

# குடியிருப்பு வீடும் சுகாதாரமும்.

(வி பாலம்மாள்.)

மனித வாழ்க்கையில் முக்கியமாக வழங்கும் இல்லற மென்ற சொல் வீட்டில் குடும்பத்துடனிருந்து செய்யும் காரியங்களுக்கெனப்படும். இவ்விதம் மனிதன் தனது பிறவியைப் பயன்படுத்தும் வண்ணம் நடந்துகொள்ளக்கூடிய வழிக்குச் சொந்த வீடு ஒன்றென்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணமாகும். இதையனுசரித்தே நமது பூர்வீகர்களும் அவர்களைப்பின்பற்றியே பெரும்பாலும் நடந்துவரும் கிராமவாசிகளும் குடியிருப்பு வீட்டில் மெத்த சிரத்தை யுள்ளவர்கள் என்று தெரிந்து கொள்ளுகிறோம். பூர்வ காலத்தவர்களுக்கும் தற்காலத்துக் கிராமவாசிகளுக்கும் ஊர் ஊராகச் சுற்றியலையவேண்டிய கஷ்டமில்லை. பாரம்பரையாகப் பெரியோர் வாழ்ந்திருந்த வீடுகளிலேயே தங்கள் வாழ்நாட்களைக் கழித்து சந்தோஷிப்பவர்களை இக்காலத்திலும் கிராமாந்தரங்களில் காணலாம்.

கிராமவாசிகள் தங்கள் கஷ்ட நிலைமையில் உள்ள சொத்துக்களை விற்க நேரிட்டாலும் சொந்த வீட்டைமட்டும் விற்கத் துணியார்கள். சௌகரியமாய்க் காலங்கழிப்பதற்கு சொந்த

வீடு முக்கியமென்று அவர்கள் நினைக்கிறார்கள். ாகற்றும் வெளிச்சமுமுள்ள தனி வீடுகளில் வசிப்பதினாலேயே கிராமாந்தரங்களில் சுகாதாரம் கெடாமலிருக்கிறது. தெளிந்து ஓடும் ஆற்றுத் தண்ணீரும், வீட்டில் குத்திய அரிசியும், காற்றோட்டமும் ஜனநெருக்க மின்மையுள்ள வீடும், வீட்டில் கறக்கும் பாலும் அவர்களை திடசரீரிகளாக இருக்கச்செய்கின்றன. நாகரிக தோரணையில் கைவிடப்பட்ட சௌகரியங்களில் குடியிருப்பு வீடும் ஒன்றாக நம்மில் இருந்து வருகிறது. நகர வாழ்க்கையில் குடியிருப்பு வீட்டை ஒவ்வொருவரும் சொந்தமாக வைத்துக்கொள்ள முடிவதில்லை. சாதாரண சம்பளத்தில் வூர் வூராகச் சுற்றியலையவேண்டியவர்கள் குடியிருப்பு வசதியற்று கஷ்டப்படுவதை எடுத்துரைக்கவும் முடியாமலிருக்கிறது. நகர வாழ்க்கையில் தனவந்தர்கள் மட்டுமே சுகவாசிகளாக இருப்பதன்றி சாதாரண வருமான முள்ளவர்கள் படுந் துன்பமளவற்றதாகும். குடும்ப நிர்வாகத்திற்கே பற்றும்பற்றாதாக விருக்கும் மாதவருவாயை யுள்ளவர்கள் குடியிருக்கு மிடங்கள் மிகக் கேவலமாகவும் ஆரோக்கிய மற்றும் இருக்கின்றன. ஒரு சிறிய அறைக்கும் பெருத்த குடிக் கூலி வாங்கப்படுவது நகரங்களில் சகஜம். சிறிய அறை ஒன்றிலேயே குடித்தனம் செய்பவர் பலர். அடியிற் கண்ட படங்கள் போல



FOULING SLEEPING APARTMENT.

படுக்கை யறையில் அசுத்தம்

ஆரோக்ய தீபிகை.



INSANITARY SLEEPING ROOM.

சுகாதார மற்ற படுக்கையறை

ஆரோக்ய தீபிகை.

குடும்பம் நடைபெறுமாயின் அங்குச் சுகாதாரமிருக்க நியாயமுண்டா? இத்தகைய குடியிருப்பை சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களிலும் விசேஷமாகக் காணலாம். இக்குறை நீங்கவேண்டுமானால் இதன் பொறுப்பு நகர நிர்வாகிகளைச் சேர்ந்ததாகும். மனிதன் ஆரோக்கியத் துடனிருந்தால்தான் [illegible] கொண்டு அவன் மற்ற சௌகரியங்களை யடைய இடமுண்டு. தற்காலம் நகர நிர்வாக ஸ்தானங்களில் போட்டி போடுவோர் ஜனங்களுக்கு நன்மை செய்யப்போவதைப்பற்றி வாசாமகோசரமாக வர்ணிக்கிறார்கள். ஒரு சிலர் தங்க



ளாலான உதவிகளை நகர சபைமூலம் செய்வதற்குத் தயாராயிருக்கவும் கூடும். இதை நன்கு கவனித்து நகர மகா ஜனங்கள் தங்களுக்குக் குடியிருப்பு வசதியிலுள்ள குறைகளை நீக்கிக் கொள்ள முன் வந்தாலன்றி நடுத்தர வருமானமுள்ளவர்கள் நகர வாசத்தில் குடியிருப்பு வசதியற்றும் அதனால் சுகாதார வாழ்க்கையற்றும் நோய் வாய்ப்பட்டு வருந்துவதில் நின்றும் தப்பமுடியாது. ஓட்டுச் சேர்க்கும்போதும் வீட்டு வரி உயர்த்தும் சமயங்களிலும் சந்து பொந்துகளிலும் மூலை முடுக்கிலும் சுற்றிவரும் நகர நிர்வாகிகள் சாதாரண சமயங்களில் ஒவ்வோரிடமும் சென்று குடியிருப்பு வசதியும் சுகாதாரமும் எப்படியிருக்கின்றனவென்பதைக் கவனித்து வருவார்களானால் கூடிய சீக்கிரம் குடியிருப்பு வசதிகள் சௌகரியத்துடனிருக்கும்படிக்கும் சுகாதாரம் நகரில் நிலைக்கும்படிக்கும் தொத்து நோய்கள் பரவிவிடாவண்ணமும் செய்யலாம். நகரவாசிகளை சுகஜீவிகளாக்கி நகர சுகாதாரத்தை நிலை நிறுத்தி நகர பிதாக்கள் என்ற பட்டத்தைப் பொருள்படும்படி செய்துகொள்ளல வசியம்.

# பக்தர் சோதனை அல்லது பொறுமையின் பெருமை.

மாதுஸ்ரீ ராஜம்மாள்.

பக்த வசீகரனென்னும் ஸௌலப்ய குணத்தை இக்கலியிலும் பண்டிதர்முதல் பாமரர்களும் கண்டு அறிந்து உஜ்ஜீவிக்க வரமருளும்படி ப்ரார்த்தித்த புண்டரீக பக்தனுக்கு உகந்து அனுக்ரஹித்த திருவுருவத்துடன் சந்திரபாகா நதியில் ஒற்றைச்செங்கல்லின் மேல் விளங்கும் ராதா ருக்மணி சமேதனான பாண்டுரங்கநாதன் எழுந்தருளிய பண்டரீபுரத்தைச் சேர்ந்த ஒரு சிறிய கிராமத்தில் சகல சாஸ்திர ஸம்பன்னரும் சர்வஜீவராசிகளையும் ஸமமாய்ப் பார்ப்பவரும் பண்டரீநாதனை ஸதா ஹிருதயத்தில் ஸ்மரிப்பவரும் பார்த்தனுக்குக் கண்ணனால் உபதேசிக்கப்பட்ட பகவத் கீதையை ஸதா பாராயணம் செய்பவருமாகிய ஒரு உத்தம வேதியரிருந்தார். அவருக்கு ஸகல உத்தம குணங்களும் நிரம்பிய மகா பதிவிருதையாகிய சதி கிருஹஸ்த தர்மத்தை சந்தோஷமாகவும் குறைவில்லாமலும் நடத்த சகாயமாய் அமைந்திருந்தாள். சந்தான பாக்கியமும் குறைவில்லாமலிருந்தது. பகவானுக்கு எல்லா ஸத்குணங்களும், ஸத்கர்மங்களும் நிரம்பிய இச்சதிபதிகளின் கிருஹத்தில் ஸ்ரீலக்ஷ்மிதேவி இருந்து விட்டால் தன்னையும் மறந்து விடுவாளோ என்ற பயத்தினாலோ, அல்லது ஐச்வர்யமாகின்ற மதுவினால் மயங்கி அறிவாகிய கண்மூடி விடுமென்ற அனுக்ரஹத்தினாலோ ஸ்ரீ தேவிக்கு முன்பிறந்த ஜ்யேஷ்டாதேவியை அவர்களுக்குச் சகாயமாய் அமைத்திருந்தார். அவ்வுத்தம வேதியருக்கு பிராம்மணர்களுக்கு உத்தமமான குல விருத்தியாகச் சொல்லப்பட்ட உஞ்ச விருத்தியே அவரது சுக விருத்தியாயிருந்தது. தினந்தோறும் ப்ராதக்காலத்தில் எழுந்து கண்ணனைக் களித்த மனதுடன் துதித்து, ப்ராதஸ்நானம் முதலிய நித்திய கர்மானுஷ்டானங்களைக் குறைவர முடித்துக் கொண்டு பகவன் நாமஸ்மரணையுடன் வெளிப்பட்டு ஒரு இல்லத்திலும் நுழையாமல் உத்தம பிராம்மண வீதிகள்தோறும் சென்று உத்தம கிருஹஸ்தர்களால் உகந்து அளிக்கப்பட்ட அக்ஷதையைத் தனது தர்ம பத்தினியிடமளித்துத் திரிகரணசுத்தியோடும், மனோவாக்காயங்களினாலும் கமலாகாந்தனை ஆராதித்து

பகவத்கீதையைப் பாராயணம் செய்வார். அவரது பத்தினியோ தனது பிரத்தியக்ஷ தெய்வமாகிய பர்த்தாவினால் அளிக்கப்பட்ட அமுதுபடியை சந்தோஷத்துடன் வாங்கி அன்றாடம் நைவேத்தியத்துக்கு வேண்டியதை வைத்துக்கொண்டு மிகுதியிருப்பதைப் பண்டங்களாக மாற்றி அன்னத்துக்கு உபகரணங்கள் செய்து போஜன காலத்தில் அதிதிகள் வந்தால் அவர்களுக்கும் அன்புடன் அமுதளித்துப் பிறகுத் தன் குழந்தைகளுக்குப் பசியாற்றி மிகுதியாக உள்ள சேஷத்தைத் தான் புசித்து கிருஹகிருத்தியத்தில் தன் பர்த்தாவுக்கு யாதொரு கஷ்டமும் தெரிய வொட்டாமல் நடந்து வந்தாள். கடவுள் தமது அந்தரங்க பக்தர்களிடத்தில் அனுக்கிரஹம் செய்வதானால் முந்திப் பலவித கஷ்டங்களைக் கொடுத்து சோதித்து அவர்களைப் புடம்போட்ட ஸ்வர்ணம் போல் பரிசுத்தர்களாக்கிப் பிறகே அனுக்கிரஹம் செய்வது அவரது திருவிளையாடலி லொன்றாகையினால் அவ்வுத்தம தம்பதிகளை அனுக்கிரஹம் செய்யத் திருவுள்ளம் கொண்டு உஞ்சவிருத்தியில் வரும் அக்ஷதையை ஒவ்வொரு நாளும் குறைந்துகொண்டே வரச்செய்தார். மகா ஸாதுவாகிய வேதியர் தனக்குக் கிடைத்ததைக்கொண்டு தன் கிருஹத்தில் வரவும் அவரது சதி அதை அன்புடன் ஏற்றுத் தன் பர்த்தாவுக்கும் அதிதிகளுக்கும் படைத்து மிகுதியை குழந்தைகளுக்கு ஊட்டி மிகுந்தால் உண்பதும் இல்லாவிட்டால் தீர்த்தபானம் மாத்திரம் செய்தும் வந்தாள். ஒரு நாள் பகவான் பின்னும் சோதிக்க, உஞ்சவிருத்தி பாத்திரத்தில் ஒன்றும் கிடைக்காமல் சூன்யமாய் கிருஹத்திற்கு வரவும் அக்ஷய பாத்திரத்தில் யாதாவது இருப்பதும் இல்லாததும் கூடப்பாராமல் தம் பத்தினிகையில் அளித்து வழக்கப்படி பகவானை ஆராதித்து பகவத்கீதைப் பாராயணம் செய்து நைவேத்தியம் கொண்டுவரத் தன் பத்தினியை அழைத்தார். அவ்வுத்தமியோ வென்றால் அக்ஷய பாத்திரம் வெறும் பாத்திரமாய் கிருஹத்திலும் ஒரு பதார்த்தமும் இல்லாமல் சுத்த சூன்யமாயிருக்கவும் இன்னது செய்வதென்று தோன்றாமல் தான் வெளியில் போய் ஏதாவது யாசிக்கலாமென்றாலோ தன் பர்த்தாவையன்றி தான் யாதொரு காரியமும் செய்தவளல்லவாகையால் யாதும் தோன்றாமல் தன் பதியிடம் ஒன்றுமில்லை யென்று சொல்லப் பயந்து தான் பசிக்கு மூன்று நாளாய் அருந்திவந்த சுத்த தீர்த்தத்தை பகவானுக்கு நிவேதனமாய்க் கொண்டு வந்து வைத்தாள். அப்பொழுதுதான் அவ்வேதியருக்கு அல்பாகாரத்தினால் மெலிந்த தன் குழந்தைகளையும் பசியினால் களைத்தும் இளைத்தும் தன் பர்த்தாவுக்குத் தன் வருத்தங்கள் தெரியக்கூடாதென்று புன்சிரிப்புடன் ஒடுங்கி நின்ற தன் பார்யையையும் பார்த்தவுடன் தனது கிருஹத்தின் நிலைமை தெரிந்தது. மனுஷ்யர்களுக்கு தாரித்திரியத்தின் கொடுமை மிகவும் பொல்லாததல்லவா? "கொடிது, கொடிது வறுமை கொடிதெ" ன்று நமது ஔவையே மொழிந்திருக்கிறார். அதிலும் குழந்தைகள் படும் கஷ்டம் ஸகிக்கவியலாததாகையால் சாந்த சீலராகிய அவ்வேதியருக்கும் மனது சற்று நிதானம் தவறி யோசிக்கின்றார். ஆகா என்ன கொடுமை, என்ன கஷ்டம், நான் எனக்கு நல்ல நினைவு தெரிந்தது முதல் ஸ்ரீயப்பதியைத்தவிர வேறு தெய்வத்தைக் கனவிலும் நினைந்தறியேன். தாவாக்கினிக்குச் சமானமான இத்தாரித்திரியத்தைக் கொடுத்த தெய்வம் இச்சந்தான பாக்கியத்தை எனக்கு அளிக்காமலிருக்கக்கூடாதா? நாவுணர்ந்து, நல்லுணவற்று எ . ம்பும் தோலுமாகிய இச்சிறுவர்களுக்கும், சுகமென்பதையே அறியாத உத்தம விருதசீலையான இம்மெல்லியாளுக்கும் இரங்காத இத்தெய்வத்தை ஆராதித்து என்ன



19036 600 018

பலன் என்று சொல்லி பக்கத்தில் கிடந்த எழுத்தாணியொன்றை எடுத்துத் தன் பிராணனுக்குச் சமானமாய் பூஜித்து வந்த பகவத்கீதையைக் கிழித்து விட்டு எழுந்து வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டார். இவ்வாறு இன்னவிடம் போகிறோமென்று தெரியாமல் போய்க்கொண்டிருக்கையில் அங்கொரு மடத்தில் பாகவதர்கள் ஹரி பஜனை செய்துகொண்டிருக்கக்கண்டு தன்னை மறந்து பகவத் குணத்திலீடுபட்டு மனது சாந்தியடைந்து தானும் அவர்களுடன் சேர்ந்து பகவத்யானம் செய்துகொண்டிருந்தார். கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதினால் சரீரம் பாவனமாகும்: ஸாதுக்களுடைய தரிசனத்தினாலேயே மும்மலங்களும் தகிக்கப்பட்டு ஜென்மமே பாவனமாய்விடுமன்றோ? இவ்வுத்தமரிவ்வாறு பகவத்தியானபாராய்நிஷ்டையிலிருக்கவும் உத்தம விருத சீலையாகிய இவரது பத்தினியோ தன் பர்த்தா யாதொன்றும் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியே போனதைப் பார்த்து ஒன்றும் தோன்றாமல் பூஜா கிருஹத்தில் சென்று பார்க்கவும் பரம்பரையாய் தங்கள் பெரியோர்களால் பாராயணம் செய்யப்பட்டுத் தன் பர்த்தாவினாலும் சதா காலமும் பாராயணம் செய் [illegible] பட்டதுமான பகவத்கீதைப் புஸ்தகம் கிழிக்கப்பட்டுக் கிடப்பதைப் பார்த்தவுடன் மனது கலங்கி பகவதபசாரம் வந்துவிட்டதே என்று மிகவும் நடுங்கிய ஹிருதயத்துடன் கருணாநிதியாகிய பக்தவத்சலனை நித்திய வஸ்துவை மெத்தவும் துதித்துத் தன் பர்த்தாவின் மனதிற்குச் சாந்தியை அளித்து அபராதங்களை க்ஷமித்துத் தன் பக்கலில் சேர்த்துக் காத்து ரக்ஷிக்கும்படி மெத்தவும் வேண்டி துதிக்கவும், லோகமாதாவாகிய கமலா தேவியை கருணைக்கண் பார்க்கும்படி வேண்டி வணங்கி வருந்தி நின்ற அருந்ததியொத்த பெருங்குணவதியின் முறையைக் கேட்ட கருணாநிதியாகிய கமலாகாந்தன் மலையைத் தாங்கி மழையினின்று காத்த திருக்கரத்தில் தாங்கிய சிறிய கூடை யொன்றில் கொஞ்சம் தானிய வகைகளும் காய்கறி பதார்த்தங்களும் நிரப்பி கண்டோர் களிந்துருகும் கருணை பொருந்திய லாவண்ய ரூபத்துடன் அவ்வேதியரின் கிருஹத்தில் தன்னை தியான யோக சமாதியினால் தியானம் செய்யும் பக்தர்களுடைய ஹிருதயத்தில் ஆவிர்ப்பவிப்பது போல் எழுந்தருளினார்.

(தொடரும்.)

# விவேகாநந்தரின் வீர வாழ்வு.

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியது.

## விவேகாநந்தரின் இளமையும் கல்வியும்.

பூமியின் ஞானவொளியான நமது பாரத நாட்டின் மாலையாய் இலங்கி புண்ணிய கங்கை வளஞ்செய்யும் வங்காளத்தில், கல்கத்தா நகரில், காயத்த சாதியில், தத்தர் என்ற சிறந்த மரபினர் சீர்பெருகி வந்தனர். இம்மரபில், ஞானமும், ஈகையும் மிகுந்த விசுவநாத தத்தர் என்ற ஒரு வக்கீல் இருந்தார். இவருடைய பத்தினி கற்பிற் சிறந்த சிவபக்தையான புவனேஸ்வரி என்னும் பெயருடையவள். இவ்விருவரும் இல்லற தர்மம் வழுவாது நடந்து வந்தனர். இவர்களுக்கு இரண்டு பெண்குழந்தைகள் பிறந்தன. ஆயினும், ஒரு ஆண் குழந்தை வேண்டுமென்ற அவாவினால் புவனேஸ்வரியம்மையார் சிவபிரானைவேண்டி நோன்பிருத்

தனும், ஒரு இரவு, கனவில் எம்பெருமான் உலகுய்யப்பிறக்கப் போகும் திருமைந்தனை விவேகாநந்தரின் உருவோடு அம்மையாருக்குக் காட்சியளித்தார். சில நாட்கள் சென்றதும் வீரவடிவும், நல்ல திருவும் செறிந்து ஒரு தெய்வீக மைந்தன் பிறந்தான். இப்புண்ணிய தினம் 1863-ம் ஆண்டு ஜனவரிமீ 12-ம் தேதியன்று நிகழ்ந்தது. புத்தர், ஏசுநாதர் முதலிய பெரியோரின் குறிகளைத்தாங்கிய வீர மைந்தனை வீரேஸ்வரன் என்றழைத்தனர். பின்பு, குழந்தைக்கு நரேந்திரநாதனென்ற பெயரிட்டனர். அளவற்ற துணிவும் சுறுசுறுப்புமுள்ள நரேந்திரனுக்கு, புவனேஸ்வரியார், அடிக்கடி இராமாயண, பாரதக் கதைகளைப் புகட்டிவந்தாள். நமது நரேந்திரருக்கு இராமர் பேரில் அளவற்ற பக்தி ஏற்பட்டது. இராமரின் உருவை நினைந்து அடிக்கடி வெகுநேரம் தன்னை மறந்து எண்ணியிருப்பார். சிறுவயதிலே ஆரியக்கவிகளையும், அமரத்தையும் கேட்டுப்பாடம் செய்து பயின்றார். தன்வீட்டிற்கு வரும் மகம்மதிய கட்சிக்காரருடன் அன்போடு பழகி, அவர்கள் சொல்லும் இஸ்லாமியக் கதைகளை வெகு கவனமாகக் கேட்பார். ஆஞ்சநேயர் போல் இவருக்கு அளவற்ற பக்தியிருந்தது. துறவிகளிடத்திலும், தெய்வீகப்பாட்டுக்களைப் பாடிவரும் அன்பர்களிடமும் நரேந்திரருக்கு வணக்கம் மிகுதி. பிறர்க்குதவி செய்வதில் பெருமகிழ்ச்சியடைந்தார். தாம் துறவுக்கோலம் பூண இளமையிலேயே ஆவல்கொண்டார். இடம்பத்தையும் கோழைத்தனத்தையும் வெறுப்பார்.

ஏழு வயதுள்ள நமது நரேந்திரரை ஆங்கிலப்பள்ளிக்கு அனுப்ப ஏற்பாடு செய்தனர். நரேந்திரர் ஒரே பிடிவாதமாக “ நான் அன்னிய பாஷையான ஆங்கிலத்தைக் கற்கமாட்டேன் ” என்றார். நெடுநாள் வற்புறுத்தியபின்னரே ஆங்கிலக் கல்வி கற்க மனம் வைத்தார். ஆங்கிலம், ஆரியம் சரித்திரபாடங்களில் மிகுந்த திறமை வாய்ந்தார். தன் வகுப்பு மாணவர்களெல்லாம் இவரைக் காணுந்தோறும் மதிகண்ட கடலாவார்கள். மேல் நாட்டு விளையாட்டுகளிலும், சிலம்பம், குஸ்தி முதலானவற்றிலும் சிம்மம் போல் சிறந்து விளங்கினார். சங்கீதத்தில் தெளிந்த ஞானமும், இனிய ஞாலுமுடையவரானார். பதினாறு வயதில் மெட்ரிகுலேஷனில் தேறி, உயர்தரக் கல்லூரியிற் பயின்றார். ஆழ்ந்த கருத்துடன் கல்லூரிப் படிப்பில் தேர்ந்து, பி. ஏ. பட்டம் பெற்றுப் பிறகு சட்டப்படிப்பைத் தொடங்கினார். இந்நாட்களில், நரேந்திரர் சங்கீத ஞானம் மிகுந்து கேட்டோர் மனத்தை உருக்கும்படியான இனிய பாடல்களைக் கவனம் செய்து பாடுவார்.

இப்படிக்களிசிறந்த நாட்களில், ஒருநாள், விஸ்வநாததத்தர் திடீரென்று மேலுலகுக்கேகினார். அன்று முதல் குடும்பக்கவலை நமது வீரரைச் சூழ்ந்தது. வறுமைப்பிணி குடும்பத்தைப் பற்றிக்கொண்டது. நரேந்திரர் இன்னும் சட்டப் பரீக்ஷைக்கே படித்தார். தன் குடும்பத்தில் நிறைந்த மிடிப்பிணியைக்கண்டு அடிக்கடி வருந்துவார். ஆயினும், வீரத்துடன் பொறுத்தார். தன் கலாசாலைக்கு வெறுங்காலால் நடந்தே செல்வார். தன் நிலைமைக்குச் செருப்புப் போட்டுக் கொள்வதுகூட டாம்பீகமெனக் கருதினார். வீட்டில் போதிய உண இல்லாவிடில், மற்றோரை உண்ணும்படி வி துத் தான் சிநேகிதர் வீட்டில் உண்டதா சாக்குச்சொல்லி பட்டினியிருப்பார். மிகவு சாதாரணமான உணவையே உண்பார். ஏழ போல் உடுப்பார். தன் வீட்டின் மேல் ஒரு உறவினர் தொடுத்த வழக்கைப் பொறுமையுடன் வென்றார். தன் வறுமையையும், உலகின் பந்த வாழ்வையும் எண்ணி உலகைத்துறக்க



அடிக்கடி உறுதி பூணுவார். ப்ரம்மச்சரிய விரதத்தை உயிர்போல் நேசித்தார். விவாகம் செய்துகொள்வதில் இயற்கையான வெறுப்பைக் காட்டினார். தன் வறுமையின் மிகுதியால் சட்டப்படிப்பை விட்டுவிட அடிக்கடி எண்ணுவார். அப்படிப்பு அவருக்கு ஒரு பெரிய பந்தமாகத் தோன்றியது.

## குருதரிசனம்.

அக்காலத்தில் மேல்நாட்டுக் கல்வியோடு அதன் நாத்திகமும் எங்கும் பரவியிருந்தது. நமது பழைய கொள்கைகளெல்லாம் தள்ளப்பட்டன. சுதர்மம் சிதைந்தது. உலகாயதன் வெற்றிகொண்டான். இந்தியாவின் உயிராகிய ஆத்மஞானம் தீய நாகரிகத்தால் மறைக்கப்பட்டது. வாலிபர்கள் இந்து தர்மத்தில் நம்பிக்கையற்றனர். அறிவுநூலாளர் கடவுளை யறிவதற்குப் பதிலாக மக்களைக்கொல்லக் கூடிய பொறிகளைக் கண்டு பிடிப்பதில் மனதையூன்றினர். வாதமும், மமதையும், கோபமும், டாம்பீகமும், அடிமைத்தனமும் எங்கும் குடிகொண்டன. சத்யம், சாந்தம், அஹிம்ஸை, சுயேச்சை முதலிய தர்மங்கள் மறைந்தன. நம் நாடு இருள்மூண்டு வறுமையாலும், அடிமைத்தனத்தாலும் வருந்தியது. நமது நரேந்திரருக்கும் ஆங்கிலப் படிப்பின் நாத்திகச் சாயம் சிறிது ஏறியது. நமது மதவுண்மைகளைச் சந்தேகிக்கத் தொடங்கினார். யாரையும் விதண்டாவாதமான கேள்விகளைக் கேட்பார். ஜாதி வித்யாசத்தையும், இந்துமதச் சடங்குகளையும், ஆசாரங்களையும், வெறுத்துத் தள்ளிய ப்ரம்ம சமாஜத்திற் சேர்ந்தார். ஆயினும் உண்மையான மதம் இன்னதென்று அறியப் பேராவல் பூண்டு பல மதங்களைப் பரிசோதிக்கத் தொடங்கினார். இந்து, கிருஸ்தவ முகம்மதிய மதத்தினிரிடம் வெகு நேரம் வாதாடுவார். “ நீங்கள் கடவுளைக் காட்ட முடியுமா? நீங்கள் சொல்வதை அனுபவத்தில் காட்டுவீரா? என்ற கேள்விகளையே யாரையும் கேட்பார். தன் மனது மத விஷயமாய் ஒரு முடிவுக்கு வரவியலாது தவித்தது. வாய் நாத்திகமே பேசிற்று.

உலகாயதம் ஓங்கி உயர்ந்த பாரத தர்மம் சிதையவே, நமது அறத்தையும் மறுபடி நிலைநிறுத்த பகவான் இராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவதரித்தார். இவர் தீவிர பக்தியுடன் தக்ஷிணேச்வரத்தில் காளிமாதாவைத் தொழுது, எண்ணி, எங்குங் கண்டு, தவமிருந்து, அவள் அருட் பெருக்கினால் சின்மயானந்தமாகி, உலகிலுள்ள நாத்திகம் நீங்குமாறு உண்மையான வேதாந்த மதக்கொள்கைகளை எம்மதத்திற்கும் சம்மதமாகும்படி எளிய உபமானங்களாலும், கதைகளாலும் மனத்திற் பதியும்படி வந்தவருக்கெல்லாம் உபதேசித்து வந்தார். இவருக்குப் பள்ளிப் படிப்பேயில்லை. தன்னைத் தானறிந்ததே இவர் கற்ற கல்வி. எப்படிப்பட்ட மேதாவிகளுக்கும், எப்படிப்பட்ட சிக்கலான கேள்விகளுக்கும் ஒரு சிறிய உதாரணத்தினால் தக்க விடை யளிக்கும் தெய்வீக ஞானமுடையவராக இருந்ததைக் கண்ட பலர் இவரை வணங்கித் தமது சந்தேகங்களைத் தெளிவித்துக் கொண்டனர். நரேந்திரரின் மாமனான இராமச்சந்திரதத்தர் அடிக்கடி பரமஹம்ஸரின் வாக்கமிழ்தைக்காதாற்பருகி மனமுருகி நிற்பதுவழக்கம். நரேந்திரரின் நாத்திகப்போக்கையறிந்த மாமன் அவரைபரமஹம்ஸரிடம் வரும்படி கேட்டார். நரேந்திரர், தனது ஆங்கிலப் படிப்பின் செருக்கால், பரமஹம்ஸரைப் பைத்தியக்காரனென்றும், மூடபக்தியுள்ளவனென்றும் முதலில் இகழ்ந்தார். பின்பு, பல முறைகள் வற்புறுத்தவே, தக்ஷிணேச்வரத்தில் இராமகிருஷ்ணரின் சந்நிதிக்கு வந்தார். இராமச்சந்திரர், நமது நரேந்திர

னின் கல்வித் திறமைகளையும், மனச் சந்தேகங்களையும் சொல்லி பரமஹம்ஸருக்கு இவரை அறிமுகப்படுத்தினர். பரமஹம்ஸர் இனிய மொழிகளால் பேசி, நரேந்திரரைச் சந்தேகம் கேட்கும்படி சொன்னார். பல விஷயங்களைப் பற்றி நரேந்திரர் பரமஹம்ஸருடன் பேசினார். பரமஹம்ஸரும், "நமது காரியத்தை ஒப்புக்கொள்ள இவரே தக்கவர்" என்று தீர்மானித்தார். நரேந்திரரும், பரமஹம்ஸர் பயித்தியமல்ல, ஒரு தெய்வீகத் துறவி யென்று கண்டுகொண்டார். தான் கேட்பதற்கெல்லாம் பரமஹம்ஸர் வெகு எளிதாக விடையளித்ததால், நரேந்திரருக்கு அவரிடத்தில் ஒரு மதிப்பு ஏற்பட்டது. இருந்தாலும் இவரைப் பலவிதத்தில் நரேந்திரர் சோதித்தார். இன்னும் அவரிடத்தில் உறுதியான நம்பிக்கையேற்படவில்லை.

ஒரு நாள் நரேந்திரர் ப்ரம்ம சமாஜத்தில் அமர்ந்து பாடிக்கொண்டிருந்தார். மதிப்புள்ள செல்வர் பலர், நாகரிகவுடைகள் பூண்டு, விசிவியப் பாட்டுகளைப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். அப்போது, இடுப்பில் ஒரு கந்தை யணிந்து, பரமஹம்ஸர் வெளியே நின்று, நரேந்திர! என்று இருமுறை கூவியழைத்தார். நரேந்திரர், வெளியே வந்து, பரஹம்ஸரைக் கண்டார். பரமஹம்ஸர் "என் அருமையான நரேந்திர! ஏன் நீ என்னைக் காணவில்லை? உன்னைக் காண மிகுந்த ஆவலோடிருக்கிறேன்" என்றார். நரேந்திரர், பரமஹம்ஸரின் உள்ளத்தை அறிந்திலர். "இவர் ஏன் நமது சபையில் வந்து என்னைத் தொந்திரவு செய்கிறார். யாராகிலும் நான் இவரோடு பேசுவதைக் கண்டால், என்னையும் பைத்தியமென்றல்லவோ என்னுவர்" என்று மனதுள் எண்ணினர். ஆயினும் இவர் ஒரு பெரியவரென்பது நரேந்திரருக்கு உறுதியானது. சில நாட்களுக்கு முன்னர், "கடவுள் இருப்பது உண்மையா? நாம் அவரைக் காணமுடியுமா?" என்ற கேள்விகள் இவருடைய மனதைப் பற்றின. இக்கேள்விக்கு ப்ரம்மசமாஜத்தலைவரான தேவேந்திரநாதரும் விடையளிக்க முடியவில்லை, புத்தக அறிவும் தனக்குச் சமாதானந் தரவில்லை. அவற்றையும் எறிந்து, மனது கடவுளைக் காணத் துடித்துக் கொண்டிருக்கும் நிலைமையில் பரமஹம்ஸரை நினைத்தார். உடனே தாயாரிடம் விடை பெற்றுக்கொண்டு, பரமஹம்ஸரிடம் ஓடினார். அவரை வணங்கி, ஆர்வமுடன், "ஸ்வாமி! தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீரா?" என்றார். பரமஹம்ஸர் "ஆம், உன்னைக் காண்பதுபோல் கடவுளையும் கண்டிருக்கிறேன்" என்றார். மிகவும் வியந்து, மறுபடியும், "ஆயின் கடவுளை எனக்குக் காட்டமுடியுமா?" என்றார். "காட்டமுடியும்" என்று பரமஹம்ஸர் சொல்லவே, இவர் நமது தாகத்தைத் தீர்ப்பார் என்று களிப்புற்றார். ஆயினும், இன்னும் பரமஹம்ஸரிடம், நரேந்திரனுக்குத் தீவிரபக்தி ஏற்படவில்லை. மற்றொரு நாள், நரேந்திரர், ப்ரம்ம சமாஜத்தில் கூட்டத்தோடு தொழுதுகொண்டிருந்தார். அப்பொழுதும், நரேந்திரனைப் பரமஹம்ஸர் அழைத்து, தாம் கொண்டுவந்த பிட்டாவை அவருக்குக் கொடுத்து ஒரு பாட்டுப் பாடச் சொ[illegible]. நரேந்திரர் பராசக்தியின் மேல் பாடினார். பரமஹம்சர் தன்னை மறந்து சமாதியி[illegible]தார். இந்த சமாதி இன்னதென்று [illegible] நரேந்திரருக்குப் புரியவில்லை. ஆயினும், அன்[illegible]முதல் அடிக்கடி நரேந்திரர் தக்ஷிணேச்வரத்துக்குப் போய்க்கொண்டிருந்தார். இந்துமதத்தின் சமரசக்கொள்கைகளைத் தெளிவாக பரமஹம்ஸர் போதித்துவந்தார். நரேந்திரனிடம் அவர் தாயினும் அதிக அன்பு பாராட்டி வந்தார். அவரை அடிக்கடி பாடச் சொல்லிப் பரவசப்



படுவார். ஒரு நாள், பரமஹம்ஸர், நரேந்திரரைக் கோவில் தோட்டத்திற்குள் அழைத்துச் சென்று, "உன்னிடம் சிவன் இருப்பதைப் பார்; என்னிடம் சக்தியிருக்கிறது!" என்றார். நரேந்திரர் இதைக்கேட்டு சிரித்தார். இருவரும் கோயிலில் ஒரு அறைக்குள் சென்றனர். பரமஹம்ஸர் மௌனமாகத் தன் வலது கையை நரேந்திரரின் மார்பிலும், தன் திருவடியை அவர் தோளிலும் வைத்தார். உடனே நரேந்திரர் தன்னை மறந்தார். அவர் உள்ளத்தில் ஜோதி பாய்ந்தது, நாத்திகம் ஓடிற்று. சமாதி கூடிற்று. தனக்கொரு புதிய சக்தி வந்ததை உணர்ந்தார். மறுபடி பரமஹம்ஸர் தொட்டார். சமாதி கலைந்தது. பரமஹம்ஸர் இருக்கரல்ல, தேவரென்றறிந்தார். அவரிடம் உண்மையான மதோபதேசம் பெற்றார். தன் அகந்தையைச் சிதைத்தார். பரமஹம்சர் நரேந்திரருக்குப் பல யோக சித்திகளையும், ஆத்ம தர்சனத்தையும் ஈந்தார். அடிக்கடி இருவரும் காடுகளிற் சென்று தியான சமாதியிலாழ்ந்திருப்பார்கள். தான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பார்த்த ஐந்து வருஷத்திற்குள் (அதாவது 24-வது வயதில்) நரேந்திரர் காஷாயம் பூண்டு "விவேகானந்த" ரானார். தன் குடும்பத்தைப் பராசக்தியின் கையில் ஒப்புவித்தார். சஞ்சலப்படும் தன் தாயாருக்கு உலகிற்குத் தான் செய்யவந்த வினையைச் சொல்லி சமாதானமீந்தார். பரமஹம்ஸர், விவேகானந்தருக்கு அபாரசக்தியை யீந்தார். தன் எண்ணங்களை நிறைவேற்ற சரியான சீடனை படைத்ததற்குப் பேரானந்தப்பட்டார். கடைசி நாளில் ஸ்ரீராமகிருஷ்ணர் கண்டமாலையோடு காசிப்பூர் தோட்டத்தில் வசிக்கும்போது விவேகானந்தர் தன் குருவின் பக்கத்திலேயே அமர்ந்து வேண்டியபணிகள் செய்தார். பரமஹம்ஸரின் சீடரெல்லாரும் தங்கள் குருவைக் கடவுளெனவென்றெண்ணி வழிபட்டனர். பரமஹம்ஸர் தன் சீடர்களுக்கெல்லாம் காஷாயத்தையும், கமண்டலத்தையும் ஈந்து பிக்ஷை யெடுக்கச் சொன்னார். அப்படியே அவர்கள் பக்தியுடன் செய்து பிக்ஷான்னத்தை குருவிற்கு ஊட்டினர். விவேகானந்தரைப் பற்றி எப்போதும் புகழ்ந்து "நீ என்னைப்போலவே ஆவாய். தாயார் உன்னிடம் இருக்கிறள்" என்பார். விவேகானந்தருக்கும் காளியின் அருள் கிடைத்தது. பராசக்தியிடம் விவேகானந்தரை ஒப்புவித்தார். தான் மகா சமாதி படையுமுன் தன் சீடர் முன்னே, "நரேந்திர, உன்னிடம் என் குழந்தைகளாகிய இச் சீடர்களைக் கொடுத்துவிட்டேன். நீ எல்லாரிலும் ஞானியிருந்தவன், அவர்களைப் பாதுகாத்துக்கொள். நீதான் உலகிற்கெல்லாம் உண்மையைப் பரப்ப வேண்டும். உன் மூலமாகவே என் சக்திகளெல்லாம் உலகிற்கு விளக்கப் போகிறது" என்று சொல்லி விவேகானந்தரை மட்டும் தனியே தன் அறைக்குள் வைத்துக்கொண்டு கதவுகளை அடைத்துவிட்டு தியானம் செய்யச் சொன்னார். பிறகு, "ஏ நரேந்திர! என் சக்தி முழுதையும் நான் உனக்கே தந்தேன்! நீ உலகில் பல அற்புதங்களைச் செய்வாய். உலகிற்குப் பெருத்த நன்மையை செய்தே இவ்வுடலை நீப்பாய்" என்றார். பரமஹம்ஸரின் சக்தி முழுதும் விவேகானந்தருக்குப் போயிற்று. 1886-ம் ஆண்டு ஆகஸ்டு மீ 16-ம் தேதி இரவு பத்து மணிக்கு பரமஹம்ஸர் மகா சமாதி படைந்தார். வெகு மரியாதையுடன் தங்கள் குருநாதனை பாங்கரில் அடக்கம் செய்து அந்த இடத்தினருகே ஒரு மடம் அமர்த்திக்கொண்டு அங்கு யோக சாதனைகளும், தியானமும், மத ஆராய்ச்சியும் செய்து விவேகானந்தரின் தலைமையின் கீழ் சீடரெல்லாமிருந்தனர். பரமஹம்ஸரின் உருவத்

தை வழிபட்டனர். அவருடைய சாம்பல், துணி, இவற்றைப் பூசித்தனர். இராமகிருஷ்ணர் உபதேசம் செய்த வேதாந்த மதத்தை உலகமெங்கும் பரப்ப உன்னினர். போக சுகங்களை முற்றும் துறந்தனர். உருசியற்ற பிக்ஷான்னத்தையே உண்டனர். இரவெல்லாம் பஜனையிலும் யோக சாதனங்களிலும் களித்தனர். புத்தமதம், கிருஸ்தவமதம், முகம்மதிய மதம், அத்வைதம், விஸிஷ்டாத்வைதம் முதலியவற்றை முறைப்படி கற்று எல்லாவற்றிற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிந்தனர். வடமொழியை முறைப்படி பயின்றனர்.

(தொடரும்.)

# வறுமையிற் செம்மை.

ஸ்ரீமான் ஜி. எஸ். ராஜநாயகம்.

உடைமை யென்பதின் எதிர் மறைபாகிய வறுமை என்னும் பண்புப் பெயர் இன்மை, ஏழ்மை, எளிமை, மிடி எனப் பொருள்படும். அழியும் பொருளாகிய செல்வத்தையும் அழியாப் பொருளாகிய கல்வியையும் ஒன்றுபடுத்தி 'கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு செல்வமுஞ் செல்வ மெனப்படும்' என்று குமர குருபர சுவாமிகள் அருளிச் செய்த காரணம் காண்க. 'சுதியில்லார் பாட்டும், தங்கள் சுற்றமில்லாத நாடும், மதியில்லார் கவியும், நல்ல மனையாளில்லாத வீடும், பதியில்லா ரழகும் பாழ்' என்று திருவாய் மலர்ந்தருளினவர்

'பார்க்கி னிவைப் போலல்ல,
நிதியில்லாக் கெவையும் பாழே
நினைக்கின் மூவுலகினுள்ளும்'
(பஞ்ச தந்திரப்பாடல்)

என்றும் கூறியுள்ளார்.

"கதிரவனில்லையேல் கண்ணிற் காண்பன மறையுமா [போல்
நிதிய மொன்றில்லையேல் யார்க்கும் நீதிமா ஞானம் [போதம்
துதிபெரு கீர்த்தி ஆண்மை சூழ்ச்சி மந்திர விலாசம்
சதுரமான மெல்லாந் தன்னிலே மறைந்து போ [மால்"
(பஞ்ச தந்திரப்பாடல்)

என்றும்,

"சத்துவம் புத்திவித்தை சதுர் விதார்த்திகளான
இத்தனை விதமுஞ் செல்வம் இல்லையேல் இல்லை [யாகும்"
(பஞ்ச தந்திரப்பாடல்)

என்றும் அப்பெரியோரே பாடியுள்ளார். பொருளுடைமையின் பெருமையை எவரும் அறிவர். செல்வத்தின் சிறப்பை விவரிக்க ஆயிரம் நாவுள்ள ஆதிசேடனுமாகா தென்றால் வேறு எவர் அதை வர்ணிக்கத் துணிவர். இது இங்ஙன மிருக்க வறுமையின் கொடுமையை,

"திருவிற் றிறவுடைய தில்லை யொருவதற்குக்
கற்றலின் வாய்ந்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லை"

என்று ஆருத் துயரோடு விளம்பினர் விளம்பிநாகனார். ஆகவே வறுமையால் வரும் கஷ்டநஷ்டத்தைக் கூறவும் வேண்டுமோ?

வறிஞரில் பெரும்பான்மையோர் பிறப்பிலேயே அந்நிலை யுடையராவர். வேறு சிலர் எய்ப்பில் வைப்பில்லாமல் 'குடை நிழலிலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர், நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்' என்னும் வாக்கிற் கிலக்காய் இடையில் வறிஞரானவர்கள். புலவரின் வறுமையைப் புகலப்புகின் அது மனதிற் சஞ்சலத்தையே யுண்டாக்குகிறது. உடைமையிருந்தும் உலோபிகளான வறிஞரை அறிஞர் அவமதிப்பர்.



'வறியோர்க்கழகு வறுமையிற் செம்மை.' நற்குடியிற் பிறந்து சீருற்றிருக்கும் ஓர் ஆடவன் அஷ்டதரித்திரமுள்ள ஓர் பெண்மகளை மணக்க நேரிடினும் நேரிடலாம். பெருந்த குடியிற் பிறந்து பெரும் பாக்கிய மனுபவித்த ஓர் மங்கை இன்மையால் பிடிக்கப்படும் ஓர் மனிதனைப் பெற்றோர் கட்டாயத்தினாலோ அல்லது உற்றார் ஆலோசனையினாலோ மணந்திருக்கலாம். ஆயிரக்கணக்காய் ரூபாயைச் செலவு செய்து என் பெற்றோர் என்னை இந்த வெறும் பெண்டிற்கா மணஞ்செய்து வைத்தார்களென்று ஓர் புருஷன் கவலை கொண்டிருக்கலாம். ஐயோ! செல்வத்திலே பிறந்து வளர்ந்த என்னை என் பிதா இந்த மிடியனுக்கா விவாகஞ் செய்துவைக்கவேண்டுமென்று ஓர் பெண் மனம் வருந்தலாம். இப்படிப்பட்ட சமயங்களில் அவர்கள் ஒருவரையொருவர் நொந்து கொள்வதனால் விளையும் பயன் யாது. மனக்கவலையே யன்றி பிறிதொன்று மில்லை. கணவனுக்கும் மனைவிக்கும் சமாதான மில்லாவிட்டால் அவர்களில் அன்பிருப்பது சந்தேகம். எவ்விடத்தில் அன்பில்லையோ அங்கு பரஸ்பர நம்பிக்கையு மற்றுப்போம். அப்படியானால் அவர்கள் வாணாள் முழுவதும் சஞ்சலமாகவே கழியும். புருஷர் செல்வந்தராயிருந்தால் மட்டும் அவர்களை மேதை மரியாதையுடன் நடத்துவது சில மனைவிகளின் தன்மை. அப்பேர்ப்பட்டவர்கள் குசேல முனிவரின் பத்தினியாகிய சுசீலையிடமிருந்து கணவரை ஆதரிக்கும் ஆற்றலை அறியக்கடவர்கள். உண்ணவுணவற்று உடுக்க உடையற்றிருந்த ஓர் நித்திய தரித்திரனை மாசில்லாக் குலத்துதித்தாரும் வருவிருந்துவப்ப ஊட்டும் நேசமிக்குடையாளும் கொண்கன் நினைப்பறிந் தொழுகுநீராளும் தேசுறு வாய்மையை விரதமாகக் கொண்டவளும், சின மென்பதைக் கனவிலும் நினையாதவளும், பேசுதின் கற்புடையவளும், பெற்றதே கொண்டுவப்பவளுமாகிய ஓர் பருவ மங்கை மணந்ததும் அவ்விதம் மணந்ததில் நிதியைக்கண்டதுபோல் அகமகிழ்ந்ததும் ஓர் விபரீதமாகவே தோன்றலாம். குசேல முனிவருக்கும் அவர் பத்தினிக்கும் உலகம் வியக்கத்தக்க அவ்வளவு அன்பு ஊன்றி யிருந்ததற்குக் காரணம் அவர்களிடம் அமைந்து கிடந்த குணாதிசயமே. சதிபதிகள் ஒருவரையொருவர் நொந்து மனம் வருந்துவதினும் எல்லாம் வல்ல இறைவனருள் அவன் ஆணைப்படியே சகலமும் நடக்கிறது. நாம் இப்படித் தரித்திரத்தினால் வருந்தவேண்டு மென்பதுவும் அவன் சித்தம் என்று தேறி ஆறுவது வறுமையிற் செம்மையாகும்.

தரித்திர திசையிலிருக்கும் பெற்றோர்க்குப் பிறந்த மக்கள் தங்கள் பெற்றோரின் நிலைமையைக் கண்ணுற்று அவர்களை அவமதிப்பது அருமையெனினும், கலிகாலத்தில் பிறந்த சில சிறுவர்கள் தம்மை ஈன்றோரின் இன்மையைக் கண்டு அவர்களை நிந்திப்பது அருச்சஞ்சலத்தை யுண்டாக்குகின்றது. பெற்றோரின் வறுமையைப் பார்த்து வருந்துவதினும் அரைவயிறும் குறைவயிறுமாய் அணிய ஆடையற்று பனியிலும் வெயிலிலும் படாத பாடுபடும் ஆயிரக்கணக்கான ஏழைப் பிள்ளைகளைப் பார்க்கிலும் பகவான் நம்மை இந்த நல்ல நிலைமையில் வைத்திருப்பது நாம் எய்த பாக்கியமோ நம் அன்னை பிதாக்கள் செய்த தருமமோ அல்லது வேறு எவர்செய்த தவமோ என்று நினைத்து மனந்தேறுவது வறுமையிற் செம்மையாகும்.

" இல்லாளகத்திருக்க
இல்லாத தொன்றுமில்லை "
(பஞ்சதந்திரப் பாடல்.)

யென்பது பெரியோர் கண்டறிந்த உண்மை. ஓர் குடும்பம் எவ்வளவோ தரித்திர திசையிலிருந்தாலும் அதின் சிறுஞ்சிறப்பும் உயர்வுந் தாழ்வும் இல்லாளின் திறத்தைப் பற்றியதே

யாகும். ஆவதற்கும் அவளே காரணம், அழிவதற்கும் அவளே காரணம்.

"மனைத்தக்க மாண்புடையாளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை"

என்பது இல்லாள் இலக்கணம். இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாய் நடந்துகொள்பவர் மிகச் சிலரேயாவர். இவர்களின் தொகை அதிகரித்தாலன்றி ஒரு நாடாவது நகரமாவது ஊராவது முன்னுக்கு வருவது அரிது. வறுமையைச் செம்மையாக்குவது மனையாளே யாகும்.

பிறப்பிலேயே வறிஞரானவர்கள் தம்மிலும் வறிஞரானவர்களைக் கண்டு தேறுவதும், இடையில் மிடியென்றும் பிடியிலகப்பட்டவர்கள் அந்நிலையைக் கண்ணுற்று சோர்ந்து போகாமல் தாங்கள் அந்நிலைக்குவரக் காரணமாயிருந்த தீய வொழுக்கங்களைக் கைவிட்டு நன்னெறியிற் செல்வதும் புலவரின் வறுமையைத் தீர்க்க அன்பும் தயாள சிந்தையும் ஜீவகாருண்யமுமுள்ள பலர் எழும்புவதும், உலோபிகளான வறிஞரின் வறுமை தீர்க்க நியாயஸ்தலங்களும் நியாயவாதிகளும் பன்மடங்கு பெருகுவதும் வறுமையைச் செம்மையாகச் செய்யும் சாதனங்களாம்.

கலைமகள் துணை.

# ராட்டினம் சுற்றவேண்டாம்

தேசமெய்த்தொண்டன்.

1. ராட்டினம் சுழற்றலாலே நம்மவருளத்திலுள்ள
மீட்டிட வரியதான யிழிகுண மடிமை சென்னி
காட்டிடாதொழிவதாலே கவலையை யடையவேண்டின்
ராட்டினந்தன்னைச் சுற்றுதிருப்பது நன்று நன்றே.

2. ஜயம்புகழோங்கு ராட்டைச் சுற்றிடின் மனதிலுள்ள
பயமெலா மகன்றுநீங்கி பாரினில் புகழுமுண்டாம்
புயவலி மிகுவர்மேன்மைப் புகழினையடையவேண்டாற்
ஜயம்புகழோங்குராட்டை சுற்றிடாதிருத்தல் நன்றே.

3. சுதந்திரமடையவேண்டித் தோன்றிய கருவியென்றே
சுதந்திர வாஞ்சையென்னத் தோன்றிய காந்தியென்பார்
சுதந்திர மடையவேண்டின் சுற்றுவீரென்ற ராட்டை
சுதந்திர மடையவேண்டாற் சுற்றிடாதிருத்தல் நன்றே.

4. சுதந்திரமாக நாட்டில் சுழற்று கைராட்டினாலே
சுதந்திர வாஞ்சையுண்டாய்த் தேகமும் வலுவுமுண்டாய்
சுதந்திரமடைய வேண்டாத் தீயவர் கனவிலேனும்
சுதந்திர கருவிராட்டைச் சுற்றிடாதிருத்தல் நன்றே.

5. புகழ்பெறு ராட்டினத்தைப் போற்றுவர் மனதி லென்றும்
புகழ்பெற வெண்ண முண்டாய் புயவலி மிகவு முண்டாய்
புகழ்பெறச்செய்வதாலே புகழுற விருப்ப மில்லார்
புகழ்பெறு ராட்டினத்தைப் போற்றிடா திருத்தல் நன்றே.



6. சோம்பலையொழித்துநிற்கும் துய்யநல்லறிவுதோன்றும்
வீம்புடன் விதண்டவாதம் முழுவதும் அறவேசெய்யும்
சோம்பலையொழிப்பதற்குச் சித்தமில்லாத பேர்கள்
வீம்பினை விரும்புவோர்கள் ராட்டினஞ் சுற்றாரன்றே.

7. மூதுரைமுனிவரென்றும் மொழிவதற்குரியதான
சாதுவாம் மகாத்மாகாந்திதன் மொழிதன்னையெண்ணி
மீதுணாறிவையுள்ளோர் புகழுகைராட்டைச் சுற்றின்
தீதுகளகன்றுபோகும் தெளிவுறும் பின்னுமிக்க.

8. நற்புகழ் மிகவு மோங்கு ராட்டினந்தன்னைச் சுற்றின்
நற்புகழ் மிகவு மோங்கும் நல் வினை வந்து சேரும்
நற்புகழ் வேண்டிடார்கள் நல்வினை தேடிடார்கள்
நற்புகழோங்கும் ராட்டைச் சுற்றிடாதிருத்தல் நன்றே.

(இப்பாடல் 16 வயதுள்ள சிறுவனால் எழுதப்பட்டது)
ப-ர்.

# ஸ்திரீகளும் தேசசேவையும்.

ஸ்ரீமான். C. N. அனந்தசுப்பன்.

பகவான்ஸ்ருஷ்டித்திருக்கும்அனந்தமான ஜீவகோடிகளில் இந்த மனித ஸ்ருஷ்டியும் ஒன்று. நாம் எல்லோரும் இந்த ஸ்ருஷ்டியையே சிலாகித்துப் பேசுகிறோம்; எழுதுகிறோம். நமது புராண இதிஹாசங்களும் அவ்வாறே கூறுகின்றன. இவ்வாறு மற்ற ஸ்ருஷ்டிகளைவிட இந்த ஸ்ருஷ்டியை விசேஷித்துக் கூறுவதற்குக் காரணம் ஏதேனும் இருக்கவேண்டுமல்லவா? அது என்ன என்பதை சற்றே யோசிக்குங்கால் மனிதனுக்கு (ஆண் பெண் உள்பட) நல்லது இது, தீமை இது என்று அறிந்து ஒவ்வொன்றையும் செய்யும்படியான சக்தியைக் கொடுத்திருப்பதே முக்கிய காரணமாகும் என்று கூறுவது பிழையாகாது. இந்த பகுத்தறிவைக் கொண்டுதான் நாம் ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறோம்; செய்யவேண்டும்.

இப்பாரதகண்டத்தில் அநேக மகரிஷிகள், தவச்ரேஷ்டர்கள், முனிபுங்கவர்கள் வசித்து வந்திருக்கிறார்கள். மனுநீதி தவறாது ராஜ்யத்தைக் குடிகளின் நன்மையை உத்தேசித்து ஆண்டுவந்த மன்னுநி மன்னர்கள் அநேகம் பேர்; கற்பே உருவாகக்கொண்டு உலகத்தையே தம் வாசமாக்கிக் கொண்டு தெய்வம்போல் விளங்கிவந்த பதிவிரதாசிரோமணிகள் எவ்வளவோ பேர்; கணவன்தான் தெய்வம், கணவனுக்குச் சற்றும் தன்மேல் கசப்பேற்படக் கூடாது, கணவன் இறந்து மனைவி இருப்பது உசிதமல்ல என்று நினைத்து சக கமனம் செய்த உத்தம பெண்மக்கள் அளவற்றவர்கள். இவர்கள் எல்லோரும் ஆண்களும் பெண்களும் உள்பட தேச சேவையையே தங்கள் முதற்கடமையாகக் கொண்டிருந்தார்கள். நமது நாட்டில் ஸ்திரீகளுக்கு இப்பொழுது போரா

டும் உரிமைகளெல்லாம் முற்காலத்திலேயே இருந்ததாகவும் அநேக ஸ்திரீகள் தேச நிர்வாகங்களை வெகு சாமர்த்தியமாக நடத்தியிருப்பதாகவும் அறிகிறோம்.

இந்தியாவின் ஜனத்தொகையில் பாதிப்பேர் ஸ்திரீகள் ஆவார்கள் என்று ஒருவாறு நாம் கூறலாம். கடவுள் ஆண்களுக்கு என்னென்ன சௌகரியங்கள் கொடுத்திருக்கிறாரோ அவை யாவற்றையும் ஸ்திரீகளுக்கும் கொடுத்திருக்கிறார். இந்தியாவின் முன்னேற்ற விஷயத்தில் ஆண்களுக்கு எவ்வளவு ச்ரத்தை இருக்கிறதோ அதைவிட ஆயிரம்மடங்கு ச்ரத்தை பெண்களுக்கும் உண்டு என்று கூசாமற் கூறலாம். ஆண்கள் இந்தியாவின் ஸ்வராஜ்ய விஷயத்தில் எவ்வளவு கவனம் செலுத்தி அதற்கு வேண்டிய தியாகங்களைச் செய்யத் தயாராய் இருக்கிறார்களோ அவ்வளவு கவனம் செலுத்தவும் தியாகம் செய்யவும் பெண்கள் தயாராய் இருக்கிறார்கள் என்பதில் தடை யில்லை. இவ்வளவு எல்லாம் ஸ்திரீகளுக்கு இருந்தும் அவர்கள் வெளிவராமல் இருப்பதற்குக் காரணம் என்ன? எந்த விஷயத்தில் ஆண்கள் தடையாய் இருக்கிறார்கள்? அவர்கள் தேச சேவை விஷயத்தில் என்ன செய்யக்கூடும்? இத்தியாதி விஷயங்களைப்பற்றி ஆராய்வோம்.

ஆண்களுக்குக் கல்விவிஷயத்திலும் தேச முன்னேற்றத்திற்கான விஷயங்களிலும் எவ்வளவு ஊக்கமும் ச்ரத்தையும் இருக்கிறதோ அவ்வளவு பெண்களுக்கும் இருக்கிறது என்பதை முன்னமேயே கூறியிருக்கிறேன். ஷை ஊக்கத்தையும் ச்ரத்தையையும் விருத்திசெய்ய வேண்டிய வசதிகள் வேண்டும். ஷை வசதிகளை அவர்களுக்குத் தேடிவைக்காமல் இருப்பது நம்மேல் ஒரு பெருங்குறைதான் என்பதை ஒப்புக்கொண்டே தீரவேண்டும். எல்லாவற்றிற்கும் அஸ்திவாரமாய் இருப்பது கல்வியே. அதை அவர்களுக்கு போதிய அளவு போதித்துக் கொடுக்க நாம் முன்வரவில்லை. அதற்குக் காரணங்கள் பலவாறாகச் சொல்லிவிடலாம். (1) கல்யாணம் ஆனபிறகு படிப்பு எதற்காக? பள்ளிக்கூடம் ஏன் போகவேண்டும்? (2) ஸ்திரீகள் படித்துப் பட்டம் பெற்று என்ன உத்தியோகம் செய்யவேண்டும்? (3) ஸ்திரீகள் உத்தியோகங்களுக்கு வந்துவிட்டால் ஆண்களுடைய கதி என்ன? இவைபோன்றவைகள்.

மூன்றாவதாகக் கூறிய காரணம் உண்மையாய் இருக்கும் பக்ஷத்தில் நம்மைப்போல் சுயநலப் பேர்வழிகள் வேறு ஒருவருமே இருக்கமாட்டார்கள். ஸ்திரீகள் படிப்பதாலா நாம் கெட்டுப்போய்விடுவோம்? நம்முடைய நிலைமை என்னவாய் விடும்? நிற்க, ஸ்திரீகளுக்குப் படிப்பு எதற்காக என்று கூறுவோமானால், படிப்பைப்பற்றி நாம் உண்மையாக ஒன்றும் தெரிந்துகொள்ளவில்லை என்றுதான் சொல்லவேண்டும். கல்வி என்பது அறிவின் விருத்திக்கு அஸ்திவாரம். ஆண்களுடைய அறிவு விருத்தி யாகவேண்டும் என்பது ஞாயம் என்றால் பெண்களுடைய அறிவு விருத்தியாக வேண்டாமா? அவர்கள் சற்று கல்வி கற்றவர்களாய் இருந்தால் குடும்பத்தில் எவ்வளவு விஷயங்களுக்கு நன்மையாய் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடுகிறோம். குழந்தைகளை சுகாதார முறைப்படி காப்பாற்றவும் நாட்டு வைத்தியசாஸ்திரங்களைச் சற்று அறிந்துகொண்டு வீட்டிலுள்ளவர்களுக்கு ஔஷதாதிகளை ஒருவாறு நிர்ணயம் செய்யவும் அனுகூலமாயிருக்கும். வீட்டுக் கணக்குகளைப் பார்த்துக் கொள்ள உதவியாய் இருக்கும். இவைகளைத் தவிர, ராமாயணம், மகா பாரதம் முதலியவைகளைப் படிப்பதால் பதிவிரதா சிரோமணிகளின் குணாதிசயங்களையும் கற்பின் உயர்வையும் அறிந்துகொள்ளலாம்; குழந்தைகளுக்கு நீதி மார்க்கங்களைப் போதிக்கலாம்.



ராஜீய விஷயங்களிலும்கூட ஸ்திரீகள் எவ்வளவோ வேலைகள் செய்ய வழி இருக்கின்றது. படித்த ஸ்திரீகள் படியாத ஸ்திரீகளுக்கு ராஜீய நிலைமையை எடுத்துரைக்கலாம். மகாத்மா வற்புறுத்தும் நூல் நூற்றல் விஷயத்தில் ஸ்திரீகள் எவ்வளவோ வேலைகள் செய்யலாம். பொழுது போகவில்லையே என்று விசனப்பட்டுக்கொண்டு அடுத்த வீட்டிற்குச் சென்று வீண் பேச்சுகளைப் பேசிக்கொண்டு காலம் கழிக்கும் ஸ்திரீகள் நூல் நூற்கும் விஷயத்தில் காலத்தைச் செலவிடுவார்களானால் அதனால் அவர்களும் நன்மை அடைகிறார்கள்; தேசசேவையையும் செய்கிறார்கள். மகாத்மா செய்யும்படியாகச் சொல்லும் முக்கிய தேசசேவை இதுவே. இது ஏன் நமது ஸ்திரீகள் செய்யக்கூடாது? சென்ற இரண்டு வருஷங்களுக்கு முன் எவ்வளவோ ஸ்திரீகள் சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறார்கள். வட இந்தியாவில் உள்ள ஸ்திரீகளின் நிலைமையுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது, நம் தென் இந்திய ஸ்திரீகள் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களும் செய்யவேண்டிய வேலைகளும் அநேகம் இருக்கின்றன. தேச கைங்கரிய விஷயங்களில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பாடுபடுகிறார்கள். தென்னாட்டில் அவ்வாறு செய்ய முடியாமலிருப்பதற்குப் பழக்க வழக்கங்கள் போதிய வசதி இல்லாமை முதலியவைகளே. தேசசேவையில் ஈடுபட்டிருக்கும் ஸ்திரீகள் தென்னாட்டில் மிகவும் சொற்பமே.

தவிர இப்பொழுது அநேக ஸ்திரீகள் முனிசிபல் கவுன்சிலர்களாகவும், வக்கீல்களாகவும் இருக்கிறார்கள். கல்கத்தாவில் ஓர் ஸ்திரீ அட்வகேட் (Advocate) ஆகவும் திருவனந்தபுரத்தில் M. L. C. ஆகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓட் செய்யும் உரிமையும் பெற்றிருக்கிறார்கள். கவுன்சில்களிலும் அசம்பளி (Assembly) யிலும் ஸ்தானம் வேண்டும் என்று கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறே ஒவ்வொரு விஷயத்திலும் நாம் நமது ஸ்திரீகளின் முன்னேற்றத்தையும் கவனிக்கவேண்டும்; அவ்வாறு கவனித்தாலன்றி இந்திய தேசமானது முன்னேற்றமடைய மிகவும் கஷ்டமாயிருக்கும். ஸ்திரீகளின் முன்னேற்றத்திற்கு ஈசன் அருள்புரிவாராக!!

## சிந்தாமணி யபிமானிகளுக்கு.

சகோதரி சகோதரர்களே!

'சிந்தாமணி' இப்பொழுது ஆறுபாரங்களுடன் வெளிவந்துகொண்டிருக்கிறது. அறிஞர் பலரின் வியாசங்கள் வெளியிட இடம் பற்றாமலிருப்பதால் இன்னம் இரண்டொரு பாரங்களைச்சேர்த்துப் போடநினைத்திருக்கிறேன். நமது சந்தாதார்கள் சந்தாப்பணத்தை இவ்விதழ் கண்டதும் தாமதமின்றி மணியார்டர் செய்துவிடுவார்களானால் தைமாதமிருந்தே ஒன்றிரண்டு பாரங்களைச் சேர்த்துப்போட சௌகரியமாயிருக்கும். சந்தாவை யதிகரிக்கச் செய்யாது விஷயங்களையும் பக்கங்களையும் அதிகம் வெளியிட எண்ணும் என் முயற்சியை சந்தாதார்கள் சந்தாவையுடனே யனுப்பி ஆதரிக்கக்கோருகிறேன்.

சகோதரி வி. பாலம்மாள்.

# கடவுள் வழிபாடு.

ஸ்ரீமதி வேதநாயகியம்மாள்.

1. கடவுள் வழிபாடு என்றால் கருணாநிதியாகிய ஸர்வேச்வரனுக்கு மானுடப்பிறவி யெடுத்தோரனைவரும் ஈடுபடவேண்டியது என்பதாகும்.

2. அவ்வீச்வரனானவர் திருவாலயங்களில் அநேக ரூபங்களாய்த் திருவுருவுங்கொண்டு லிங்கங்களையும் ஆதாரமாகக்கொண்டு வியாபித்திருக்கின்றார். ஆதலால் தேவாலயங்களுக்குச் சென்று அங்குள்ள விக்ரகங்களை ஆராதனை செய்யவேண்டியது நம் அனைவர்களின் முக்கியமான கடமையாம். அதாவது,

கண்ணுதலானை நோக்குங் கண்களே கண்கள்
கறைக் கண்டன் கோயில் புகுங்கால்களே கால்கள்
பெண்ணொரு பாகனைப் பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னா
பான்சரிதையே கேட்கப்படுஞ் செவியே செவிகள்
அண்ணல்போலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக் கீழடிமை புகுமடிமையே யடிமை.

3. ஆராதனை செய்வதெப்படி யென்றால் அக்கடவுளை மனதினால் தியானித்தல், அன்னவரின் துதியைச் சொல்லுதல், கரங்களினாலே பூசித்தல், கால்களினாலே பிரதக்ஷிணம் செய்தல், சிரசினால் வணங்குதல், செவியினால் அவருடைய புகழைக் கேட்டல், நேத்திரங்களால் அவருடைய திருமேனியைக் கண்டானந்தித்தல், அவருக்குத் தொண்டு புரிதல், இவை முதலிய பக்தி விசுவாசக் கிரியைகளால் கடவுளை வழிபாடு செய்யவேண்டும். செய்வதோடும் கடவுளை அன்புடனும் பூசிக்க வேண்டும்.

4. அன்போடு உண்மையாகச் செய்கின்ற பக்தி உயிருள்ள சரீரத்திற்கும், அன்பில்லாமல் செய்கின்ற பொய் பக்தி, உயிரில்லாத சடலத்திற்கும் ஒப்பாகும். அன்பென்றால் நாம் யாரை விரும்புகின்றோமோ அவரிடத்தில் தோன்றும் பிரியம். கடவுளை நினைக்குந்தோறும் அவருடைய திருமேனியைத் தரிசிக்குந்தோறும், தன்னைத்தான் மறந்திருத்தலும், ரோமம் சிலிர்த்தலும், இரு நேத்திரங்களினின்றும் ஆனந்த பாஷ்பம் பொழிதலும், அவரால்வெறுக்கப்படுபவைகளைச் செய்யாது வேரற அகற்றிவிடுதலும், திருத்தொண்டரை சந்திக்குந்தோறும் நாம் அவருக்குத் தொண்டருக்குத் தொண்டராய் வணங்குதலும், ஆகிய இவை போன்ற நல்லொழுக்கங்களே கடவுளின் மீது ஏற்படும் மெய்யன்புக்குப் பிரமாணங்களாகும்.

5. கடவுளுக்குப் பிரீதியாவது— தூய்மை, வாய்மை, இரக்கம், அன்னை தந்தையர் பெரியோர் முதலியவர்களைப் பேணல், இவை முதலியவைகளெல்லாம் கடவுளுக்குகந்தனவாம். கடவுளால் வெறுக்கப் படுபவைகளான:— பொய், பொறாமை, புலாலுண்ணல், சினம், கொலை, களவு, கள்ளுண்ணல், வியபசாரம், செய்நன்றி மறத்தல் முதலியவைகளெல்லாம் வெறுக்கப்படுபவையாம். நம் அறிவானது அற்பமானதால் நாம் தீமைகளை நீக்கிக் கொள்ளவும் சக்தியற்றவர்களாய் இருக்கிறோம். ஆகையால், ஸர்வேச்வரனாகிய பரமேச்வரனை நிஜ பக்தியுடன் வழிபட்டுய்வோமேயானால் அவர் நம்மை தீமைகளினின்று விலக்கி தமது அருளைப் புகட்டி நற்கதிக்கு ஆளாக்கிக் கொள்வாரென்பது நிச்சயம்.

---



# காஷ்மீர தேசக்குறிப்பு.

ஸ்ரீமத் அற்புதானந்த சுவாமிகள்.

(பீர்பஞ்சால்பாட்டை.)

இந்தியாவின் பண்டைய பழமொழிகளில் "காசி காஷ்மீரம் அஜப்நேபாளம்" (அஜப் அத்விதீயமான வெனப்பொருள்படும்) என்பர். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவை ஆண்ட மொகல் மன்னர்களில் ஜஹாங்கீர் பாதுஷா தன் மகாராணியாரான நூர்ஜஹானுடன் வெப்ப நாட்களில் இந்நாட்டிற் கேகுவது ஓர் வழக்கமாக வைத்திருந்தனர். எனவே, இப்போது கோடைகால அரசியல் சிம்லா மலையில் ஏற்படுவது போல் மொகல் அரசியல் காஷ்மீரத்தில் ஏற்பட்டுவந்தது. இவ்வழகிய மலை நாட்டிற்கு ஏகும்பொழுது குஜராத்தின் வாயிலாய் பிலம்பரைக் கடந்து பீர்பஞ்சால் என்ற ஹிமாலய சிகரங்களைக் கடந்து செல்வார்கள். எனவே, இம்மொகல் மன்னனின் சௌகரியங்களுக்கென பெரிய சாய்கள் (சத்திரங்களை ஒத்தவை) சமய உசிதமா யேற்படுத்தப்பட்டிருந்தன. இப்பாட்டையும் பாதுஷாவின் போக்குவரத்து மார்க்கமெனக் கூறப்பட்டுள்ளது. இவ்வமயம் இவைகள் பாழடைய நேரிட்டிருப்பினும், இவைகள் சீர்திருத்தம் செய்யப்பட்டு வருகின்றமையினால் இம்மார்க்கம் செல்லும் யாத்திரிகர்களுக்குத் தங்குமிடங்களாகவும், சமீபநாட்டின் மக்களுக்கு காலங்கழிக்குங்கட்டிடங்களாகவுமுள்ளன. ஆங்கிலஆட்சி பஞ்சாப் நாட்டில் செவ்வனே ஊர்ஜிதப்பட்ட நாட்கள்முதல் இராவல்பிண்டியிலிருந்து மரி, ஜீலம் வாசிகளின் வாயிலாய் நல்ல மார்க்கம் மோட்டார் முதலியவைகளில் செல்ல ஏற்பட்டிருப்பதினால், இப்பீர்பஞ்சால் சிகர மார்க்கம் வியாபாரிகளும் வேறு இனத்தினர்களும்அநேகமாகச் செல்ல சௌகரியங்களைக் கொண்டதாக இல்லை. இருப்பினும், இம்மார்க்கங்களிலுள்ள சிகரங்களையும் அக்குன்றுகளின் சிறப்புகளையும் காண இஷ்டப்படும் யாத்திரிகர்கள் இம்மார்க்க வாயிலாகவே செல்ல முயலுவர்.

இம்மார்க்கம் செல்பவர்கள் லாஹூருக்கடுத்த வஜீராபாத் ஜங்ஷனில் பிரிந்து ஜம்மு நகரம் செல்லும் மார்க்கத்தில் உள்ள இருப்புப் பாதை ஸ்டேஷனாகிய குஜராத்தில் இறங்க வேண்டும். இங்கிருந்து கால்நடையாகவாவது அல்லது சிறு குதிரைமீதாவது செல்லல் ஆகும். இவ்வொற்றையடிப்பாதையில் குன்றுகள் மீது பீம்பர் என்ற சிறிய நகரமும், தன்னாவென்ற சிறிய நகரமும் வரும். பின்னர் 11,400 அடி உயரமுள்ள பீர்பஞ்சாலைத் தாண்டல் வேண்டும். இங்கிருந்து காஷ்மீரநாட்டின் தலைமை நகரமாக ஸ்ரீநகர் என்ற பெரும் பட்டணம் விட்டர் நதிக்கரை ஓரத்தில், இந்தியாவின் "வெனீஸ்" எனக்காணப்படும். இருந்தாலும் குஜராத் நகரமிருந்து பிரபஞ்சால்வழியாய் 160 மைல் தூரம் ஸ்ரீநகரமுள்ளது. இம்மார்க்கம் செல்லுபவர்கள் பீம்பர், தன்னா என்ற இடங்களில் தம் உணவுப் பொருள்களை வாங்கிச் செல்லல்வேண்டும். பீர்பஞ்சால் சிகரம் தாண்டி காஷ்மீரின் தலை நகரம் செல்லும் வரை உணவு பண்டங்கள் கிடைப்பது அரிதாகும். எனினும் இச்சிகரங்களின் அருகில் உள்ள கிராமங்களில் வசிப்பவர்கள் மிகப் பெரும் எருமைகளை வளர்ப்பதினால், பால் மட்டும் கிடைக்கும். இவ்வெருமைகள் சுமார் 25-30 படி பால்கள் கறக்கும். முக்காலி இட்டு பெரும் பானையை வைத்துத்தான் கறப்பர்.

இவைகளை தயிர், மோர், வெண்ணெய், நெய்யென்ற பாகுபாடுகள் ஆக்காமலே பாலைக் காயவைத்து மிக்கனவாக சுண்டச் செய்து இன்னும் அதை சுண்டவைத்து 'கோவா' என்ற ஒரு வகையாகச் செய்வா. இவைகளை நாட்டினர் மிட்டாய்க்காரர்களுக்கு விற்பனை செய்வர். அவர்கள் பேடா குலாப்ஜாமன் செய்வதில் உபயோகிப்பர். யாத்திரிகர்களும் இவைகளை வாங்கி யுண்டு பசியாறலாம். இவ்விதமான கோவாவைச் செய்பவரும், பால்களை விற்பவரும், எருமைகளை வளர்ப்பவரும், இச்சிகரங்களில் மேய்ப்பவரும் முஸ்லிம் மக்களேயாவர். இவர்கள் மொகல் மன்னர்கள் காலத்தில் இந்துக்களா யிருந்து இஸ்லாம் மதத்தைத் தழுவினவராவர். இவர்கள் எடுத்துவரும் தண்ணீரையும் இந்நாட்டின் பிராமணர்களும் எவ்வித வெறுப்புமில்லாமல் பானத்திற்கும் உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதற்கும் உபயோகித்துக்கொள்வர்.

குஜராத், பீம்பர், தன்னுவென்ற பெரும் இடங்கள் பீர்பஞ்சாலுக்கு ஏகு முன்னர் கிட்டும். இவைகளில் பீம்பருக்கும் குஜராத்திற்கும் இடையில் பந்தர்நாலா என்ற தங்குமிடம் குஜராத்திலிருந்து ஏழு மைல் தூரமுள்ளது. தௌலதபாத் என்னும் தங்குமிடம் குஜராத்திலிருந்து பன்னிரண்டாம் மைலில் உள்ளது. எனவே பந்தர்நாலாவிலிருந்து ஐந்துமைல் தூரமுள்ளது. இருப்பினும், இரண்டு சிறிய மலைக்குன்றுகளைத் தாண்டவேண்டும். இங்கிருந்து கோட்லா என்ற தங்குமிடம் 7 மைல் தூரத்திலுள்ளது. அதாவது குஜராத்திலிருந்து 19 மைல் தூரமுள்ளது. இங்கிருந்து மூன்றும் மைலில் ஒரு சிறு நதியைத் தாண்டல் வேண்டும். இவை பெருக்கெடுத்திருப்பின் தாண்டமுடியாது. பாலமில்லாததினால் இக்கரையிலேயே அமர்ந்து தண்ணீரின் பெருக்கு வற்றின பிறகுதான் செல்ல வேண்டும். பெரும் உயரத்திலிருந்து கீழ்வருவதினால் வேகம் மிக்கனவாக இருக்கும். வண்டி, குதிரை முதலியனவைகளையும் அடித்துக்கொண்டு சென்றுவிடுமென்றால் மனிதர்களின் பயம் எவ்விதமுள்ளனவென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இங்கிருந்து பீம்பர் மூன்றுமைல் இருக்கின்றது. எனவே குஜராத்திலிருந்து பீம்பர் 24 மைல்கள் கொண்டிருக்கின்றன.

பீம்பரில் கல்லினால் கட்டப்பட்ட வீடுகள்தான் அநேகம். செங்கல் வீடுகளே கிடையாது. எளியவர்கள் மரங்களை உபயோகித்து, மண்ணினால் சுவரெழுப்பியுமுள்ளார். இங்கிருந்து தன்னுவிற்குச் செல்ல 4 நாட்கள் செல்லும். பீம்பருக்கு குஜராத்திலிருந்து 3நாட்களில் சென்றுவிடலாம். இம்மூன்று நாட்களுக்கும் உணவுப் பொருள்களைச் சேகரித்துக்கொண்டவண்ணம், இந்நான்கு நாட்களுக்கும் உணவுப் பண்டங்களை இங்கு சேகரித்துக்கொள்ளல் வேண்டும். இங்கிருந்து (பீம்பர்) ஸாயிதாபாத் 11 மைல்களுள்ளது; நௌஷேரா 10 மைல்களுள்ளது;. சிங்கிஸ் சராய் 12 மைல்களுள்ளது; இராஜௌரி 14 மைல்களுள்ளது; தன்னு 14 மைல்கள். இவைகளில் அநேக குன்றுகளும் சிற்றாறுகளும் இருப்பதினால், பிரயாணிகள் நான்கு நாட்களுக்குக் குறைவாகச் செல்லமுடியாது. சென்றால் தங்குமிடங்கள் கிட்டா. இராஜௌரியும் மிக்க அழகிய சிறு நகரம். இங்கு கடைகளும் இருக்கின்றன. தன்னுவிலிருந்து பீர்பஞ்சால் சிகரம் செல்ல நான்கு நாளாகும். பாராமுகலா 10 மைல்; போஷியானா 6 மைல், அலியாபாத் சராய் 8½ மைல். இவ்வொன்பதாவது மைலில் பீர்பஞ்சால் சிகரமுள்ளது. இங்கிருந்து ஹூராபூர் 11 மைல்; ஷோபியான் 7½ மைல்; ராமு 11 மைல்; ஸ்ரீநகர் 18 மைல். தன்னுவிலிருந்து உணவுகளை எடுத்தேக வேண்டியது மிக்க அவசியம். ஹூராபூர், ராமு என்கிற சிறு கிராம நகரங்களில் சில கடைகளிருப்பினும் விலையேற்றமாகவும் கிடைக்கக்கூடாதவைகளாயுமிருக்கும். புதிதாகச் செல்பவர்களின் சாமான்களை ஏற்றிச் செல்ல சிறு குதிரைகளும் கூலியாட்களும் கிடைப்பர். இக்கூலியாட்களுக்கு இம்மார்க்கம் நன்கு விளக்கமாயிருப்பதினால் இவர்களால் சகாயம் மிக்கனவாக இருக்கும். இவர்கள் ஹிந்திபாஷையை அறியக்கூடியவர்களாகவே இருப்பர்.

இம்மார்க்கங்களின் குன்றுகளாகிய 1. அதிதக் சிகரமும், 2. அதியானு சிகரமும், 3. காமன்கோஷா தாரும், 4. காமன்கோஷா காலாவும் மிக்க அழகியவை. இவைகளின் பின்னரே பீர்பஞ்சால் சிகரத் தொடர்புகள் உறைபனியால் மூடப்பட்டு ஒருபுறம் லாஹூரின் காட்சியும் மறுபுறம் ஸ்ரீநகரின் காட்சியும் கொண்டிருக்கும். இச்சிகரத்தொடர்பை சுமார் 11,400 அடிகளின் உயரம் கொண்டவை யெனச் சொல்லப்படினும் டொகுத்தி என்ற சிகரம் இடது பாகத்தில் 15,500 அடியும் வடபாகத்தில் தீக்கியார் என்ற சிகரம் 15,300 அடியும் கொண்ட உயரங்களிலிருக்கும். இவைகளைத்தாண்டி ஸ்ரீநகருக்கென இறங்கும்போது கோன்ஸார் தொடர்பும் பனிஹால் தொடர்பும் கிடைக்கும். இவைகளைத் தாண்டியவுடன் காஷ்மீர நாட்டின் பசும்புல் மைதானங்கள் ஆரம்பமாகும் இவைகளின் ஆரம்பத்தில் மொகல் மன்னர்கள் தம் தங்குமிடமாக ஒரு பெரிய தோட்டத்தையும் ஒரு பெரும் கிணற்றையும் ஏற்படுத்தியிருப்பதினால் இவ்வமயம் அவ்விடம் பாவுனிபாக் கென்று (கிணற்றுத் தோட்டம்) சொல்லப்படுகின்றது. இதற்கு அரை மைல் தூரத்தில் ஜம்மு நாட்டைச் செழிப்பிக்கச் செய்யும் "தவாய்" நதி உற்பத்தியாகின்றது. இவ்வுற்பத்தி ஸ்தானம் வழியை விட்டு அகன்று அப்புறமாயிருப்பதினால் இதன் அழகைக் காண இச்சைகொள்பவர் தனிப்பட ஆங்கு யாத்திரை புரிந்து திரும்புதல் வேண்டும். இங்குப் பெரும் மீன்கள் மிக்க அழகியதாகவுமிருக்கக் காணலாம். அழகிய புஷ்பங்களும் மரங்களும் பரவிக்கிடப்பதின் விநோதம் சுபாவிக சிறப்புகளை நன்கு அறிவிக்கும். இந்நதிதான் பல இடங்களில் குஜராத்திலிருந்து பீர்பஞ்சாலைத் தாண்டும் வரை வரும். இந்த நதியில் கிளைநதிகளாகப் பாயும் சில நதிகளும் தாண்டவேண்டியவைகளாகும். 'தவாய்' நதியின் கரையில் தன்னு நகரம் கட்டப்பட்டுள்ளது.

சில யாத்திரிகர்கள் 'அலியாபாத்' சராயிலிருந்து ரத்தன்பீர் சிகரம் சென்று, டார்ஹல் தொடர்பின் வழியாய் பீர்பஞ்சால் வருவர். இச்சிகரம் 12,900 அடி உயரமுள்ளது. பின்னரும், பீர்பஞ்சாலிருந்து 'சர்பர்' நாலாவின் வழியாய் 'நதன் சர்,' 'சந்தன் ஸர்' என்ற இரு அழகிய ஏரிகளைக்காணவும் செல்வர். இவ்வேரிகள் பனியினால் மூடப்பட்டுள்ள மலைகளினால் சூழப்பட்டு, மிக்க தெளிந்த ருசிகரமான பாசச் சக்திகளைக்கொண்ட ஜலங்களைக்கொண்டு இருக்கின்றன. இங்கிருந்து திரும்புவோர் 'ஜாடி' நாலாவின் வழியாக 'அலியாபாத்' சராய் வரவேண்டும். இங்கு வந்து மறுபடியும் பீர்பஞ்சலைத் தாண்டித்தான் ஸ்ரீநகரம் செல்லல் வேண்டும். மதப்பற்றுடையவர்கள் இக்கிரி பிரதக்ஷணம் அவசியம் செய்து அவ்வேரிகளில் ஸ்நானம் செய்து தருப்பணம் முதலியவைகளை நடத்துவர். இங்கு உள்ள சிகரங்களின் அருகில் காஷ்மீர பிராமணர்கள் வசிக்கின்றனர். இவர்கள் ஸமஸ்கிருத பயிற்சிகள் கொண்டவராகவே யிருப்பினும் இவர்களின் வாழ்வு கிராம வாழ்வாதலினால்

கிராமாந்திர போக்குகளைக் கொண்டவர்களாகவே இருப்பர். தவாயிநதியின் உற்பன்ன ஸ்தலத்திற்குச் சென்று திரும்பும் மார்க்கம் மிக்க அழகிய மரங்களின் சாயைக்கொண்டிருக்கும். இம்மரத்தைச் 'சென்னூர்' மரமென்பர். இவை அரச மரம் போலவே இங்கு பாவிக்கப்படுகின்றன. எங்ஙனம் 'அரசை' பிரம்ம விருக்ஷ மென்பரோ, அங்ஙனமே 'சென்னூரை' இந்திர விருக்ஷமென்கின்றனர். இதன் கிளைகள் ஐந்து கைவிரல்களைப்போல ஐந்து பிரிவுகளைக்கொண்டிருக்கும். பெரும் மரங்களாக மூன்று நாலு பேர்கள் அணைத்துக் கட்டக்கூடிய பருமன்களிலிருக்கின்றனவாதலின் இவ்வழிகளில்செல்லும்வழிப்போக்கர்கள் மழை பனிகளில் பாதிக்கப்படும்போது தங்குமிடங்களாக இவைகளின் அடிவாரத்தைத் துளைத்து வைத்திருக்கின்றனர் 5, 6, 7 பேர்கள் சாதாரணமாய் இவைகளினுள் புகுந்து தங்கக்கூடிய நிலையில் இப்புதர்களிருப்பதுமல்லாமல் மரங்கள் மிக்கச் செழிப்பாயுமிருக்கின்றன.

இம்மரத்தைத் தவிர இப்பாட்டையில் காணப்படும் மரங்கள் அக்ரோட் மரங்களாகும். இவைகளும் பெரும் மரங்களாகவே இருக்கும். இவ்வெப்பநாட்களில் இவைகள் பூத்துக் காய்த்துப் பழுத்திருக்கும். யாத்திரிகர்கள் எவ்வளவு உடைத்துத் தின்றாலும் காட்டிலாகா அதிகார வர்க்கம் ஒன்றும் சொல்லாது. ஆனால் மூட்டைமட்டும் கட்டக்கூடாது. இவ்வழியில் ரெம்பியாறு நதியைக் கடக்கவேண்டும் இதற்கு ஒரு பாலம் பண்டைப் போக்குகளிலுள்ளது. இங்கிருந்து ஹூராபூர் சேரலாகும் இச்சிறு நகரம்ஸபேதா என்ற உயர்ந்த மரங்களினால் சூழப்பட்டு சிப்பு ஓடுகள்கொண்ட கிராமமாக இருக்கும். இதற்கும் ஸூபியான் நகருக்கும் இடையிலுள்ள பாதைஇருபக்கமும் இச் சபேதாமரத்தினால் பயிரிடப்பட்டுள்ளது. இம்மரங்கள்ஓங்கிநீண்ட மரங்களாக இருபக்கமும் இருக்கும். ஒரு பக்க மரத்தின் கிளை மற்றொரு பக்கம் பாவியிராது. இவ்விதமான செழித்த மரங்களினிடையிருக்கும் பாதையில் ராமு என்ற கிராமத்திற்கும் ஹஜ்பூர் என்ற கிராமத்திற்கும் இருபிரிவுகள் தோன்றும். ராமுவிலிருந்து ஸ்ரீநகரம் செல்லும் மார்க்கத்தில் விசேஷங்கள் அநேகமில்லை. ஆனால் ஹஜ்பூரிலிருந்து ஸ்ரீநகரம் செல்லுபவர் குல்காம் பாஜிபியாக்கு இரு கிராம நகரங்களுக்குச் சென்று செல்வர். குல்காம் விஸ்ஹாவ் நதிக்கரையிலிருக்கின்றது. இந்நதிக்கு பாலங்கள் இல்லாததினால் படகுகளில்தான் தாண்டல்வேண்டும். இந்நதி ஜீலம் நதியின் ஒரு கிளைநதி எனவே பாஜிபியாக்கு செல்பவர் இந்நதியில் படகிலேயே சென்று ஜீலம் நதியைச் சேர்ந்து அங்கிருந்து படகிலேயே ஸ்ரீநகரம் செல்லலாம். ஸ்ரீநகரம் ஜீலம் நதிக்கரையில் மிக்க அழகிய நகரம். இந்நதியின் இருபுறமும் இந்நகரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியர்கள் இந்நதியை விட்டர் எனவும் விதஸ்தா வெனவும் சொல்வர். இந்நகரைப்பற்றின விவரமும் ஏனையமார்க்கங்களாக ஏற்பட்டிருக்கின்ற பாட்டைகளின் விவரமும் பின்னர் சமயம் நேரும்போது வரைவாம்.

SIDDHA KALPA MAKARADHWAJA
(REGISTERED)
THE WONDERFUL DISCOVERY IN THE MEDICAL WORLD
FOR ALL "ACUTE" & "CHRONIC" DISEASES
ONE PHIAL OF 60 PILLS (for a Complete Cure)
Price Rs 10 (Rs. TEN). V. P. Extra.
THE MADRAS AYURVEDIC PHARMACY, LTD.
44, Govindappa Naick St., G. T., Madras.



## தமிழ் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. V. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணு 10.
2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணு 10.
3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள். R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணு 8.
4. இட்டார்க்கு இட்ட பலன்.—ஆசிரியர் மிஸ். J. பொன்னுசாமி ராவ். விலை அணு 10.
5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.
6. தமிழ் வசன லக்ஷணம்.—G. தாமோதர முதலியார், B.A. எழுதியது. விலை அணு 12.
7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணு 12.
8, இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணு 12.
9. சுகாதாரபோதினி.—(மூன்றுவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணு 8.

SRINIVASA VARADACHARI & CO., TRIPLICANE AND MOUNT ROAD, MADRAS.

தேசோபகாரி.

அரியபெரிய விஷயங்கள் கொண்டு இரங்கூனிலிருந்து வெளிவரும் சிறந்த வாரப்பத்திரிகை.
ஞாயிறுதோறும் வெளிவருவது.
(தேசோபகாரி காரியாலயம், நெ. 45, 36-வது வீதி, ரங்கூன்.
சந்தாவிவரம்.
இரங்கூன்:— வருஷம் 1-க்கு ரூ. 5; மாதம் 6-க்கு ரூ. 2-12. உள்நாடு: வருஷம் 1-க்கு ரூ. 6; மாதம் 6-க்கு ரூ. 3-4.
வெளிநாடு: வருஷம் 1-க்கு ரூ. 7; மாதம் 6-க்கு ரூ. 4.
விளம்பரவிகிதம். மாதக்கட்டணம்.
பக்கம் ஒன்றுக்கு ரூபாய் 40; பக்கம் அரைக்கு ரூபாய் 25; கலம் ஒன்றுக்கு ரூபாய் 15.
மற்றவை நேரில் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

தேசத்தொண்டு செய்வதெவ்விதம்?

அன்பர்களே! நீங்கள் தேசத்திற்கு ஓர் அற்பத் தொண்டேனும் புரிய விரும்பவில்லையா? அப்படியானால், உடனே 'தேசோபகாரி' லிமிடெட் கம்பெனியில் பங்காளிகளாய்ச் சேருங்கள். சந்தாதாரர்களாயும் சேருங்கள். ஒரு பங்குக்கு ரூபாய் ஐந்தே. ஊதியத்தோடு புண்ணியமும் கிடைக்கும்.

ஓம்.

உபயோகிக்கு முன்



புத்திரப் பேறின்றி வருந்துகிறாள்.

கலியுக ஆச்சரியம்.

குணம் பல கொடுப்பது
மா. வினை தீர்ப்பது
ரணங்களை நீக்குவது
கஷ்டம் போக்குவது
வல்வினை தீர்ப்பது
சந்தோஷம் மளிப்பது

உபயோகித்த பின்



கவசத்தின் மகிமையால் புத்திர பாக்கியமடைதல்.

நமது



குமார கவசம்.

முருகன் அனுக்கிரஹத்தைப் பெற்ற மகானால் தயாரிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கானவர்கள் அணிந்து பெரும் பலன் அடைந்திருக்கின்றனர்.

பேய், பிசாசு, சூன்யம், வியாதி, வறுமை, கஷ்டம், மனக்கவலை முதலிய யாவற்றையும் முருகன் அருளால் நீக்கும் உண்மைக் கவசம்.

இன்றே ஒன்று தருவித்துக் கொள்ளுங்கள்.

சாதா கவசம் ரூ. 1—8—0
வெள்ளி ... ரூ. 1—8—0
தங்கம் ... ரூ. 7—8—0



விலாசம்.—
குமார பீடம்
புரசைபாக்கம், சென்னை.


## சமாச்சாரக் குறிப்பு.

சிறந்த விஷயங்களை இதரப் பத்திரிகைகளிலிருந்து எடுத்துப்போடுவது பத்திராசிரியர் வழக்கமாயினும் நமது பத்திரிகையிலுள்ள விஷயங்களைத் தலைகால் வெட்டியும் பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடாமலும் பத்திரிகைக்கு மறு பெயரிட்டும் சில பத்திரிகைகள் வெளியிடுவது வருந்தத் தக்கது. இனியேனும் இவ்விதம் பிழை நேரிடாது கவனிக்கப்படு[illegible]ன்று நம்புகிறோம்.—சிந்தாமணி [illegible]த்திராதி

[illegible] வி. பாண்டு [illegible] ஸ்டான்போர்டு இம்மூவரும் சென்னை கௌரவ மாஜிஸ்திரேட்டுகளாக நியமிக்கப்பட்டதற்கு சந்தோஷிக்கிறோம்.

* * *

பண்டைய வீரத்தாய்மாரை நினைப்பூட்டி வந்த பீ அம்மா அவர்கள் ஆண்டவனடியினைச் சேர்ந்தது கேட்டு துக்கமடையாத ஆண் பெண் ஒருவருமிரார். தேசபக்தர்களான அலி சகோதரர்களுக்கு மட்டு மன்றி தேசத்திற்கு இது ஒரு பெருத்த நஷ்டமென்பதில் தடையில்லை. தேசசேவையில் முதன்மை பெற்றிருந்த பீ அம்மா அவர்களின் வியோகத்தால் [illegible]ந்தியப் பெண்ணுலகம் ஒரு மாப்பெருந்தலை[illegible]ை இழந்து விட்டது. அம்மா அவர்களின் [illegible]ன்ம சக்தி நம்மை உற்சாகப்படுத்தி ஊக்க[illegible]ச் செய்து வந்தது. அவரது ஆன்மாவுக்கு [illegible]டவன் ஆறுதலளிப்பாராக.

* * *

[illegible]ம்பர் 15 தேதி மிஸ் நூர்ஜஹான் என்ற [illegible]ப் பெண்மணிக்கு லக்ஷ்மண புரி சர்வகலாசாலையில் முதன்முதலாக எம். ஏ. பட்டம் வழங்கப்பட்டதாம்.

லாகூரில் ஒரு லாலா தமது மிட்டாய்க் கடையில் தீபாவளியை யொட்டி கிருஷ்ணனைப் போலவும், மகாத்மா காந்தியைப் போலவும் உருவங்கள் செய்து அவர்கள் ராட்டினத்தில் பல வகையான பல நிறம் வாய்ந்த அழகழகான நூல் நூற்பதுபோலவும் மின்சார சக்தியால் ஏற்பாடு செய்திருந்[illegible] மகாத்மா கையினால் நூற்பது [illegible] கிருஷ்ண பரமாத்மாவைச் [illegible] போலவும், தானாகவே நூல் நூ[illegible] சுற்றி ராட்டினம் [illegible]பது போலவும் இருந்தது. கிருஷ்ண[illegible]க்கருகே ஒரு கோபிகை தயிர் கடைந்துகொண்டிருந்தாள். இந்த அற்புதக் காட்சியைப் பார்க்க ஜனங்கள் திரளாக வந்ததால், மிட்டாய் ஏராளமாக விலையாயிற்றும். ஆனால் மின்சார சக்தியால் நூல் நூற்பதை விட ஒரு புருஷனோ ஸ்திரீயோ கையினால் நூல் நூற்பதையே மகாத்மா விரும்புவார்.

லோகோபகாரி.

* * *

### ஸ்ரீமான் ஜெயகரின் மனைவி காலஞ்சென்றார்.

பம்பாய், டிசம்பர் 11—

ஸ்வராஜ்யக் கட்சியின் தலைவரும் பிரபல பாரிஸ்டருமான ஸ்ரீமான் எம். ஆர். ஜெயகரின் மனைவி ஸ்ரீமதி சுசிலாபாய் நேற்றிரவு இரத்தாசய நோயால் இறந்து போனார். திரளான ஜனங்கள் மரணச் சடங்குகளின்போது வந்திருந்தார்கள். ஸ்திரீகளின் க்ஷேமத்துக்கான எல்லா இயக்கங்களிலும் ஸ்ரீமதி சுசி[illegible]பாய் தீவிரமாக சம்மந்தப்பட்டிருந்த[illegible] நல்ல படிப்பும் மேலான குணங்களு[illegible]வர். எல்லா ஸ்தரீகளாலும் மதி[illegible] வந்தவர்.

சுதே


EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJA[illegible]
THE BEST PAIN BA[illegible]
Price As. 10 a bott[illegible]

# "சிந்தாமணி"

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ் பத்திரிகை. 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது.

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 48 பக்கங்கள். உயர்ந்த காகிதம். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபால் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி அணா 8.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் ... தமிழர்கள் வீடுகளில் அதிகமாக ... வுமாதலால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லா... ...மாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள், பிரதி ம... ...றகும் ஒரு பக்கம் ... கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனமாய் அனுப்ப...

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியேகமான விகிதங்கள். விவரத்துக்குப் பின் கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபிஸ்,
விவேகாச்ரமம், ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மைலாப்பூர், சென்னை.

---

## சிந்தாமணியைப் பற்றிய அபிப்பிராயங்களின் சாராம்சம்.

சகோதரி வி. பாலம்மாளை ஆசிரியராகக் கொண்ட "சிந்தாமணி"யின் பெருமையை என்னென்று கூறுவது? தாய் நாடு.

இது தமிழ் நாட்டு மகளிரின் ஈடேற்றத்தையே பிரதானமாகக்கொண்டு உழைக்க முன்வந்திருக்கும் ஒரு சிறந் மாதாந்தப் பத்திரிகை. இதன் ஆசிரியை வடமொழியிலும் தென்மொழியிலும் அரிய நூல்க இயற்றியவர். இந்து: சாதனம்.

கல்வியிலும் தேசத்தொண்டிலும் சிறந்து விளங்கும் இவ்வம்மையாரை பத்திராசிரியராகக் கொண்டுவரும் பத்திரிகையால் நந்தமிழ் மக்களுக்கு அளப்பரிய நன்மைகள் உண்டாகுமென்பதை நாம் கூறவேண்டியதில்லை. பொதுஜன மித்திரன்.

பேய், ம் ... ரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்களால் வெளியிடப்படும் இச்சஞ்சிகையின் முதல் மலரின் முத ...ன்று வரப்பெற்றோம். நஞ்சகோதரியின் பொதுஜன உழைப்பையும் அன்னாரின் சாமர்த்தியத்தையும் ...ித் தமிழ் நாட்டினருக்கு முன்னமே அதிகம் தெரியுமாதலின் நாமொன்றும் விசேஷித்துக் கூறத் ...யில்லை. தாருல் இஸ்லாம்.

சாதா கவசம் ... ஆசிரியராயும் இருக்கும் ஸ்ரீமதி பாலம்மாள் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லமை வெள்ளி ... ராரென்பது அன்னார் இயற்றியிருக்கும் "சுபோதராம சரிதம்" முதலிய அரிய நூல்களால் தங்கம் ... ரூ ... எமக்குக் கிடைத்த முதல் இதழில் பெண்களைப்பற்றிய அரசியல் விஷயங்களும் சுகாதார பல நலந்தரும் வியாசங்களும் சுவைததும்பும் சின்னஞ்சிறு கதையும் வேறுபலபோற்றத் ...ளும் ஆசிரியை அவர்களாலும் மற்றும் பல அறிஞர்களாலும் வரையப்பட்டுள்ளன.

...ssa V. ...adachari & Co., 4. Mount Road, Madras.
... Sullivan's Garden Road, Mylapore, Madras.